# அக்கரைச் சீமையில்...

நாவல்



அராலியூர்
ந. சுந்தரம்பிள்ளை

## சமர்ப்பணம்

அரசாங்க 'இளறிக்கல் சேவிஸ்' உத்தியோகத்தராக இருந்தவரும், எனது இலக்கிய அறிவிற்கு வித்திட்டவருமான எனது தந்தை தெட்சணாமூர்த்தி நடராசாவிற்கு இந்நூல் காணிக்கை.

# அக்கரைச் சீமையில்...

- நாவல் -

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

அராலி சரஸ்வதி நாடகமன்ற வெளியீடு

விலை ரூபா: 50 - 00

முதலாம் பதிப்பு - ஏப்ரல் 1994

பெயர்:
அக்கரைச் சீமையில்
சமூக நாவல்

ஆசிரியர்:
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
B. A. (இலங்கை.) Dip - in - Ed.

உரிமை:
ஆசிரியருக்கு

அட்டை
கலை
வரன் ஆட்ஸ்

ஒற்றுரு அமைப்பு
ஆனந்தன்

அச்சுப்பதிவு:
சைவப்பிரகாச அச்சகம்
யாழ்ப்பாணம்.

# முன்னுரை

எனது பதினைந்தாவது வயதில் நான் எழுதத் துவங்கிய பொழுது, கட்டுரை, கவிதை, கதை எல்லாம் எழுதினேன்; 'சுதந்திரன்,' "வீரகேசரி' பத்திரிகைகளில். நாவலும் எழுத ஆசைப்பட்டேன்; முடியவில்லை;

பின்பு நண்பர்களுடன் சேர்ந்து நடிப்பதற்காக நாடகங்கள் எழுதினேன்; 20 நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பின்பு தான், வானொலி நாடகங்கள் எழுதத் துவங்கினேன்.

1980 ஆம் ஆண்டு எனது முதலாவது நாடகம் ஒலிபரப்பப்பட்டதும், இலங்கை வானொலி என்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டது; அனேகமாக நான் எழுதி அனுப்பிய எல்லா நாடகங்களையும் ஒலிபரப்பினர். இப்பொழுதும் இலங்கை வானொலியின் பல சேவைகளில் எனது நாடகங்கள் ஒலிக்கின்றன.

ஒரு வானொலி நிலையம் ஒருவரது நாடகங்களை வரவேற்று, அவற்றைத் திறம்படத் தயாரித்து, நாட்டு மக்கள் அனைவரும் கேட்கக் கூடியதாகப் பல முறை ஒலிபரப்புகின்ற பொழுது, அவருக்கு வேறு ஏதாவது எழுத மனம் வருமா? உண்மையில் இலங்கை வானொலி எனது கைகளைக் கட்டிப் போட்டுவிட்டதென்றே சொல்ல வேண்டும்; எப்படியோ 47 சிறுகதைகளையும் எழுதி விட்டேன்;

எனது 57 வது வயதில் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்பு தான், எனது நாவல் எழுதும் ஆசை நிறைவேறியது;

எத்தனை நாடகங்கள் வேண்டுமானாலும் எழுதக் கூடிய ஆற்றலை ஆண்டவன் எனக்குத் தந்திருக்கிறார்; இருந்தாலும் — நாடகங்கள் எழுதியது போதும் என்ற ஆசை வெகுவாகக் குறைந்துக் கொண்ட பிறகு தான், நாவல் எழுத முடிந்தது.

250 நாடகங்கள் வரை எழுதிய எனக்கு, நாவல் எழுதுவது அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. கதை - கதைப்பின்னல் (Plotting)· செயல்கள் (Actions) - பாத்திர வார்ப்பு - உரையாடல் என்பவை. நாடகத்திற்கும் நாவலுக்கும் பொதுவான அம்சங்கள்; எனது 250 நாடகங்களிலும் நான் ஆயிரத்திற்கும் அதிகமான பாத்திரங்களைப் படைத்திருக்கிறேன்; உரையாடல் நாடகத்தின் உயிர்நாடி, நாவலில் அதை ஆலாபனையாக எழுதலாம்;

கதை சொல்லும் உத்தி ஒன்றை மட்டுமே, நான் புதிதாகக் கையாள வேண்டி இருந்தது; 47 சிறுகதைகளை எழுதியதுடன், உலகின் தலை சிறந்த பல நாவல்களையும், நாவல் எழுதுவது எப்படி? என்று விளக்கிக் கூறும் நூல்களையும் ஆங்கில மொழியில் வாசித்த எனக்கு - அந்தக் கலை கூட இலகுவில் கைவந்தது;

'இந்த நாவலின் களம் இங்கிலாந்து; நீ அந்த நாட்டுக்குப் போயிருக்கிறாயா? அங்குள்ள வாழ்க்கை முறை பற்றி உனக்கு என்ன தெரியும்?' என்று கேட்கிறீர்களா?

நான் அந்த நாட்டிற்குச் செல்லவில்லைதான். ஆனால் எனது தம்பி, இங்கிலாந்து நாட்டில் நான்கு ஆண்டுகள் வாழ்ந்து, கேம் பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்தவர். எனது நண்பர்கள், உற வினர்கள் பலர் அந்த நாட்டில் வாழ்ந்து விட்டு, இலங்கை திரும்பி யுள்ளனர். இப்பொழுதும் எனக்கு வேண்டியவர்கள் பலர் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் சொன்ன செய்திகளையும், நான் வெளிநாடுகள் பற்றி வாசித்து அறிந்தவற்றையும் வைத்து, பல வானொலி நாடகங்கள் எழுதினேன். இங்கிலாந்து நாட்டைக் களமாக வைத்து நான் எழுதிய 'நேச மனம்' என்ற நாடகத்தை இலங்கை வானொலி 1982 ஆம் ஆண்டு தொடர் நாடகமாக ஒலிபரப்பியது.

கதை இங்கிலாந்தில் நடந்தாலும், இதில் வரும் முக்கியமான பாத்திரங்கள் எல்லாரும் இலங்கையரே. அவர்கள் இலங்கையர் களாகவே நடந்து கொள்கின்றனர். எங்கள் நாட்டு சமகால நிகழ்வு களும் நாவலில் வருகின்றன.

நாவலை வாசித்து விட்டு, நான் வெளிநாடு செல்வதற்கு எதிரா கப் பிரசாரம் செய்கிறேன் என்று நினைத்து விடாதீர்கள்! அது எனது நோக்கம் அன்று. ஒரு கதையை — இந்த நாட்டுத் தமிழ் மக்களது சமகால வாழ்வின் ஓர் அம்சத்தைச் சித்தரிக்கும் ஒரு கதை யை எழுதியுள்ளேன். அவ்வளவுதான்.

இது எனது முதலாவது நாவலுமல்ல; முதன்மையான நாவலு மல்ல. கொஞ்சம் வித்தியாசமாக இருக்கட்டும் என்றே, இந்தக் கதை யைத் தெரிவு செய்தேன். வேறு ஒரு காரணமும் இல்லை.

இந்த இடத்தில் இளம் எழுத்தாளருக்கு ஒன்று கூறவேண்டும். எழுத்தாளன் தான் கண்ணாரக் கண்டவற்றையும், அனுபவித்தவற் றையும், வாசித்து அறிந்தவற்றையும் மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என்றால், உலக இலக்கியம் மிகவும் மெலிந்து விடும். மேலே கூறியவற்றுடன், தான் கேள்விப்பட்டவை, ஊகித்தவை, கற்பனை பண்ணியவற்றையும் எழுத்தாளன் இலக்கியமாக்க வேண்டும்!

நாடகத்திற்குச் சில கட்டுப்பாடுகள், லட்சணங்கள் உண்டு. அவற்றை அனுசரித்து எழுதினால்தான்' நாடகம் நல்ல படியாக அமையும். ஆனால் நாவலுக்கு ஒரு கட்டுப்பாடும் இல்லை. எழுத் தாளன் கொடுப்பது தான் அதன் வடிவம்! அவன் எதையும் எழுத லாம்; எப்படியும் எழுதலாம். அதற்காக ஆபாசங்களை எல்லாம் எழுதிக் காசாக்கலாம் என்பதில்லை. அப்படிச் செய்வதற்குக் கூடத் தடை ஏதும் இல்லை—அது சமூக விரோதச் செயல் என்பதைத் தவிர.

நாவலுக்கு அழகே இல்லை என்று நான் கூறுவதாக யாரும் அர்த்தம் செய்து கொள்ளாதீர்கள். அதற்கும் உண்டு அழகுகள் ஆயிரம்! அவை எழுத எழுதக் கைவரும்.

நீங்கள் எழுதுவதை அழகாக, கவர்ச்சியாக, — சமூகத்திற்குப் பயன்படக் கூடிய முறையில் எழுதவேண்டும். அப்பொழுது தான் உங்கள் நூலை யாரும் காசு கொடுத்து வாங்கி வாசிப்பார்கள்.

நான் இந்த நாவலை 1991 ஆம் ஆண்டு எழுதி முடித்தேன். அப்பொழுது இதை வெளியிடுவதற்கு கடதாசியோ, வேறு எந்த வசதிகளோ இல்லை. — என்னிடம் காசும் இல்லை, அதுவும் நல்லதாகப் போய்விட்டது. கடந்த மூன்று ஆண்டுகளும் நாவலைத் திரும்பத் திரும்ப வாசித்து, பல திருத்தங்கள் செய்தேன். அதனால் நாவலின் மெருகு கூடியிருக்கிறது என்று நம்புகிறேன்.

இப்பொழுதும் நிலைமை திருந்திவிடவில்லை. இருந்தாலும் — யாழ்ப்பாணத்தில் நூல்கள் வெளியிடப் படுகின்றன. நானும் எழுதியவற்றில் — ஒரு நாவலையாவது வெளியிடுவோம் என்று தான் இதைப் பிரசுரிக்கிறேன் கஷ்டப்பட்டு.

'அக்கரைச் சீமையில்' எனது மணிவிழா மலருமாகும். எனது 45 வருட கால இலக்கியத்துறை உழைப்பில் மலர்ந்த மலர்!

நான் மணிவிழாக் கொண்டாட விரும்பவில்லை. ஆனால் எனது அறுபதாவது ஆண்டு நிறைவின் ஞாபகார்த்தமாக, தமிழ் மக்களுக்கு ஏதாவது ஒன்றை நிரந்தரமாக வழங்க விரும்பினேன். அதுவே இந்த நாவல்!.

இந்த நூலை அச்சிட்டு உதவிய சைவப்பிரகாச அச்சகத்தினருக்கு, குறிப்பாக அதன் மனேஜர் சி. சர்வேஸ்வரன் அவர்களுக்கும் எனது நன்றிகள். இதன் அட்டையை அழகுற வரைந்து தந்த திரு. கோபாலகிருஷ்ணன், அதை ஒற்றுருவில் அமைத்துத் தந்த திரு. ஆனந்தன் ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

சேவையில் இருந்து ஓய்வு பெறும் பொழுது எனக்குக் கிடைக்க இருந்த திரட்டிய ஓய்வூதியத்தில், ஒரு நூலையாவது வெளியிடலாம் என்று எண்ணி இருந்தேன் நடந்தது என்ன?

அந்தப் பணம், எனது முந்திய புத்தகங்கள் விற்று வந்த பணம்— எல்லாமே அடிபட்டுப் போய்விட்டன, போர்க்கால வாழ்க்கைச் செலவினங்களில். கையில் காசில்லாத நிலையில் மீண்டும் ஒரு முறை எனது தம்பியிடமே உதவி கேட்கவேண்டி ஏற்பட்டது.

நான் விரும்பியிருந்தால் எப்பொழுதோ கனடா போயிருக்கலாம், நேர்மையான வழிகளில். அந்த நாட்டிற்குப் போயிருந்தால், சில லட்சங்களை உழைத்திருக்கலாம் தான். ஆனால் இலங்கை மக்கள் எல்லோரும் கேட்கக் கூடிய வானொலி நாடகங்களை எழுதியிருக்க முடியாதே! இப்பொழுது நாவலும் எழுதுகிறேன்.

இருந்தாலும் நாவலை வெளியிடக் கனடாக் காசுதான் வரவேண்டி இருந்தது. இன்னும் ஒரு நூலை வெளியிடுவதற்கு மனமுவந்து பண உதவி புரிந்த எனது தம்பி, பொறியியல் கலாநிதி ந. தெட்சணாமூர்த்திக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்!

அன்பான வாசகர்களே! இந்த நாவல் பற்றிய உங்களது கருத்துக்களை, கடித மூலமோ, நேரிலோ தெரியப்படுத்தினால் மிகவும் நன்றி உடையவனாக இருப்பேன்.

80, கடையிற்சுவாமி வீதி
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

ந. சுந்தரம்பிள்ளை

# ஆசிரியரது நூல்கள்

## மேடை நாடகங்கள்

1. ஶொலிடோலே கதி

2. பணமோ பணம்
(இலங்கை இலக்கியப் பேரவையின் பாராட்டுச் சான்றிதழ் பெற்றது)

## வானொலி நாடகங்கள்

1 கெட்டிக்காரர்கள்
(இலங்கை இலக்கியப் பேரவையின் பாராட்டுச் சான்றிதழ் பெற்றது)

2. முதலாம்பிள்ளை
(சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)

## நாவல்

1. அக்கரைச் சீமையில்

# அக்கரைச் சீமையில்...

## 1

அந்தப் பெரிய தொடர்மாடிக் கட்டடத்தின் முதலாவது மாடியில் உள்ள ஒரு வீட்டின் பல்கனியில் நின்று வெளி உலகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள் சாந்தி.

அவள் இங்கிலாந்திற்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகின்றன. இந்த பதினான்கு நாட்களாக மாடியில் நின்று வேடிக்கை பார்க்கிறாள், வேறு வேலை இல்லாமல்.

நோட்டிங்ஹில் லண்டன் மாநகரின் புறநகர்ப் பகுதிதான் என்றாலும், இங்கும் எத்தனை பிரமாண்டமான கட்டடங்கள்—தொடர் மாடிகள், கடைகள், வீடுகள், சேச்சுகள், தியேட்டர்கள், மியூசியங்கள் இன்னும் எத்தனை! இப்பொழுது எல்லாம் மாலை வெயிலின் மஞ்சள் பூசி மினுமினுத்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் புறநகர்ப் பகுதியே இப்படி என்றால் லண்டன் எப்படி இருக்கும் என்று சாந்தி கற்பனை செய்து வியந்தாள்.

கட்டடங்கள் மட்டுமா? அவற்றிற்கு இடையே பச்சைப் பசேல் என்று மரம், செடி, கொடிகள். இது இங்கிலாந்தின் வசந்த காலம்—ஸ்பிறிங் மரங்களில் தோன்றிய புதிய துளிர்கள் கூட மாலை வெயிலில் பளபளக்கின்றன. எங்கும் மலர்க் காடு, வண்ண வண்ண நிறங்களில்.

இனிய தென்றல் இதமான குளிருடன் உடலை வருடிச் செல்கின்றது.

இரவில் ஒளி வீசும் நியான் விளக்குகள் இயற்கை அழகுகளையும் தோற்கடிப்பவை. 'லண்டன் ஒரு காலத்தில் உலகின் மிகப் பெரிய நகரமாகத் திகழ்ந்தது என்பதை நம்புவது கஷ்டமாக இல்லை'—என்று நினைத்துக் கொண்டாள்.

கீழே வீதியில் கார், பஸ், டிரக் எல்லாம் ஓடிக்கொண்டிருந்தன; புத்தம் புதிய, கண்ணைப் பறிக்கும் கவர்ச்சியான வாகனங்கள். சைக்கிள்காரர், பாதசாரிகளுக்கும் குறைவில்லை.

லண்டன் ஏயர்போட்டில் வந்து இறங்கியதில் இருந்து இந்த வெள்ளைக்காரர்களை கவனித்துக் கொண்டுதான் வருகிறாள் சாந்தி;

வெள்ளை நிறம் மட்டுமல்ல, இவர்கள் அழகான மனிதர்கள்தான். நல்ல உயரம் தோற்றம். சதைப்பிடிப்பான வழுவழுப்பான உடற்கட்டு. எப்பொழுதும் சுறுசுறுப்பு. இளைஞர்கள். யுவதிகள் மட்டுமல்ல, நடுத்தர வயதுக்காரர்கள் — ஏன் ஐம்பது வயதைத் தாண்டியவர்கள் கூட கைகோர்த்துச் சிரித்துப் பேசியபடி வீதியால் நடந்து போகிறார்கள்.

'இது லண்டன் மாநகரமல்ல, காதல் மாநகரம்' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது சாந்திக்கு. எங்கும் காதல் வெள்ளம் பொங்கி வழிவது போன்ற காட்சிகள். சாந்தியின் இருபத்தொரு வயது இளம் உள்ளம் எல்லாவற்றையும் பார்த்து வியந்து! நேசித்தது!

சாந்திக்கு உடனடியாக வெளியே சென்று எல்லாவற்றையும் பார்த்து ரசிக்க வேண்டும் போல ஆவல் பொங்குகிறது. கீழே இறங்கி அழகிய நேரிய வீதிகள் வழியாகவும், புல்தரைகள் மீதும் ஓடவேண்டும் போலக் கால்கள் துறுதுறுக்கின்றன. எப்படி ஓடமுடியும்? அவளது அக்கா சுகிர்தராணிதான அவளை வீட்டினுள் விட்டுப் பூட்டிச் சாவியைக் கொண்டு போய்விட்டாளே! முதல் நாள காலையில் கணவனுடன் காரில் புறப்படும் பொழுது அக்கா சொன்னாள்:

"சாந்தி வெளியிலை எங்கையும் போயிடாதை! இந்த நாட்டிலை உனக்குத் திக்குத் திசை தெரியாது. போனாத் திரும்பி வரமாட்டாய்."

"சரி அக்கா நான் ஒரு இடமும் போகேல்லை."

"வீட்டுக்கு வந்து ஆராவது கூப்பிட்டாலும் கதவைத் திறக்காதை, ஜன்னல் வழியாகக் கதை. நம்பிக்கையான நல்லாத தெரிஞ்ச ஆளெண்டு தெரிஞ்சாத்தான் கதவைத்திற."

"சரி அக்கா, அது எனக்கும் பாதுகாப்புத்தானே?"

"என்டாலும் எனக்கு உன்னிலை நம்பிக்கை இல்லை; ஆராவது வந்து ஏமாத்தினா? அதிலும் பாக்க "நானே வீட்டைப் பூட்டிட்டுச் சாவியையும் கொண்டு போறன்" என்று சொல்லி வீட்டைப் பூட்டிச் சாவியையும கொண்டு போய் விட்டாள் சுகிர்தராணி. அதையே தொடர்ந்து செய்கிறாள்.

அக்கா சுகிர்தராணியின் செயல் சாந்திக்குச் சற்று எரிச்சலூட்டினாலும், அவள் செய்ததும் முழுக்க முழுக்கப் பிழை என்று சொல்வதற்கில்லை என்பதும் புரிந்தது.

சாந்தி பாஸ்போட் விசா எதுவும் இன்றி வெறும் கையுடன் அகதியாக வந்தவள். இலங்கையில் நடக்கும் சிங்கள - தமிழ் சண்டையைக் காரணம் காட்டி லட்சக்கணக்கான தமிழர்கள் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு இப்படி அகதிகளாக ஓடித் தப்பிவிட்டனர். இங்கி

லாந்திற்கும் ஆயிரக்கணக்கில் வந்து விட்டனர்.

இங்கிலாந்து குடியேற்ற விதிகளை மிகக் கடுமையாகக் கடைப் பிடிக்கும் நாடாக இருந்த போதும் இலங்கைத் தமிழர் விடயத்தில் கொஞ்சம் கருணை காட்டுகின்றது — தங்களது பழைய காலனித்துவ நாடென்பதாலோ, சிங்கள இராணுவம் செய்யும் அட்டூழியங்கள் பற்றிக் கேள்விப்பட்டதாலோ. இல்லையென்றாலும் வழியில் பாஸ் போட் விசா எல்லாவற்றையும் அழித்துவிட்டு வருபவர்களை, எந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பலாம்? இலங்கைத் தமிழர்கள் வெளி நாடு செல்வதற்கு எத்தனையோ தந்திரங்களைக் கையாள்கின்றனர். அவற்றில் இதுவும் ஒன்று.

விமான நிலையத்தில் ஆங்கில அதிகாரிகள். "உனக்கு இந்த நாட் டில் யாராவது உறவினர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்ட பொழுது, அவள் யாரும் இல்லை என்று கைவிரித்தாள். யாராவது அறிந்தவர்கள் இருக்கிறார்களா? என்று வற்புறுத்திக் கேட்கவே திருமதி ரங்கநாதனைத் தெரியும் என்று விலாசத்தைச் சொன்னாள்.

முன் ஏற்பாட்டின்படியே ரங்கநாதனும் சுகிர்தராணியும் சாந்தி யைத் தங்களுக்கு வேண்டாம் என்று முதலில் நடித்து, பின்பு மனிதாபி மான முறையில் ஏற்றுக் கொள்வதாகக் கூறி, தங்கள் காரிலேயே அவ ளைத் தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தனர்.

அதன் பிறகு ஒரு நாள் அவர்களுடன் காரில் வெளியே போய் வந்ததுடன் சரி. இந்த லட்சணத்தில் சாந்திக்கு தனியாக வெளியே செல்லத் துணிவு வருமா? துணிவுதான் வந்தாலும், இடம் வலம் தெரியாத நாட்டில், அவளால் பத்திரமாக வீடு திரும்பத்தான் முடியுமா?

சுகிர்தராணி சாந்திக்குச் சொந்த அக்கா அல்ல, ஒன்றுவிட்ட அக்கா. அவள் கூட இலங்கையில் இருந்து இங்கிலாந்திற்கு வந்தவள் தான். அவளது கணவன் ரங்கநாதன் இலங்கையில் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு, மேற்படிப்பிற்காக இங்கிலாந்து வந்தான். படிப்பு முடிந்ததும் அவனுக்கு நல்ல சம்பளத்தில் ஒரு பொருத்தமான வேலையும் கிடைத்துவிட, அவன் இங்கிலாந்திலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டான்.

இங்கிலாந்தில், நல்ல சம்பளத்தில் வேலை கிடைப்பதை விடக் கலியாணத்திற்குப் பொருத்தமான பெண் கிடைப்பதுதான் அபூர்வம். நிறையப் பெண்கள் இருக்கிறார்கள். வெள்ளைக்கார, நீக்குரோ, சீன, அராபிய, இந்திய — எல்லா இனப் பெண்களும் கிடைக்கும். வெவ்வேறு உயரம் தோற்றம் பருமன் நிறங்களில், வாறவள் வாழ்க் கைக்குப் பொருத்தமானவளாக அல்லவா அமைய வேண்டும்? அதில்

கண்மூடித் தனமாக நடந்து கொள்ளக் கூடாது! பிறகு பல சிக்கல் கள் வரும்.

இலங்கை இளைஞர்களுக்கு இலங்கைப் பெண்கள் தான் முதல் விருப்பம். இங்கிலாந்தில் எத்தனையோ வகைப் பெண்கள் இருக்க பகீரதப் பிரயத்தனங்கள் செய்து இலங்கையிலிருந்து பெண் எடுப்பிக் கிறார்கள். ரங்கநாதனும் அப்படித்தான். தானே இலங்கைக்கு நேரில் வந்து, புறோக்கர் வைத்துக் கலியாணம் பேசுவித்து, பல பெண் களைப் பார்த்தும் சுகிர்தராணிதான் ஓரளவிற்குப் பிடித்திருக்க, அவளையே கட்டிக் கூட்டிக் கொண்டு இங்கிலாந்து திரும்பினான்.

ரங்கநாதனுக்கு ஒரு தூரத்து உறவினன் நற்குணசிங்கம். சுகிர்த ராணிக்கு இங்கிலாந்து வந்த பிறகு அவனைப் பழக்கம். ஏதோ ஒரு கொம்பனியில் வேலை செய்து கொண்டிருந்தான். கலியாணம் செய்து கொள்வதற்குத் தனக்கு நல்ல பெண் கிடைக்கவில்லையே என்று நற்குணசிங்கம் ரங்கநாதன் தம்பதிகளிடம் வந்து அழுதான். அப்பொ ழுது தான் சாந்தியை இலங்கையிலிருந்து அழைக்கலாமே என்று சுகிர்த ராணிக்கு 'ஐடியா' தோன்றிற்று. நற்குணசிங்கத்துக்குப் பெண் எடுத்துக் கொடுப்பதுடன், தனது சித்தப்பா பொன்னையா குடும்பத் திற்கும் உதவி செய்வதாகிறது. சாந்தி இங்கிலாந்து வந்தால், தனக் கும் பெரிய உதவியாகவும் நன்றியாகவும் இருப்பாள்.

இருபது வயது நல்ல தோற்றம் அழகு. ஏ. எல். நாலு பாடம் பாஸ் பண்ணியிருக்கிறாள். ஆங்கிலம் அதிகம் தெரியாவிட்டாலும், ஏதாவது சின்ன வேலை செய்து உழைக்கலாம். மேலும் படிக்கலாம். வேறு ஒரு லாபமும் இல்லாவிட்டாலும் கூட, நற்குணசிங்கத்திற்கு ஒரு நல்ல பொம்பிளை கிடைக்கிறதே. ஏஜென்சிக்காரருக்கும் பெருந் தொகைப்பணம் கொடுத்து கள்ள வழிகளில் சாந்தியை இங்கிலாந் திற்கு அழைத்தார்கள்.

சாந்தி வீட்டுக்கு வந்து சேர்ந்த அடுத்த நாளே, நற்குணசிங்கமும் ஓடி வந்து விட்டான் பெண்பார்க்க. பார்த்த உடனேயே சாந்தி மீது நற்குணசிங்கத்திற்கு ஆசை விழுந்துவிட்டது! அவனது தோற்றம் கூடச் சாந்திக்குப் பிடிக்கவில்லை.

பல்கனியிலிருந்து வீட்டிற்குள் வந்தாள் சாந்தி. வீடு நிறைய நவீன தளபாடங்கள். வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள். யாழ்ப்பாணத்தில் அவள் கண்டும் கேட்டும் இராத வசதிகள். றேடியோ, ரீ. வீ., தொட் டால் போதும் கதறிக் கொண்டு வரும் ஆங்கில நிகழ்ச்சிகள். ஊரில் அவளது வீடு ரீ. வீ. ப் பெட்டி இல்லாத வீடுதான். இருந்தாலும் அதில் அவளுக்கு நாட்டம் அதிகம் இல்லை. மேலும் அக்கா வீட்டுச் சாமான் களை அவர்கள் இல்லாத நேரத்தில் தொட அவளுக்குப் பயம்.

பிராக்கி நிறையப் புத்தகங்கள். எல்லாமே ரங்கநாதனது படிப்பு ஆராய்ச்சிக்குப் பயன்படும தடிமனான ஆங்கில விஞ்ஞான புத்தகங்கள். அழகான அட்டைப் படங்களுடன் கூடிய சில கதைப் புத்தகங்களும் இருக்கத்தான் செய்தன. அவற்றையும் அவளால் வாசிக்க முடிய வில்லை. இரண்டொரு முறை சில நாவல்களை எடுத்து கஷ்டப்பட்டு நாலைந்து பக்கங்களை வாசித்துப் பார்த்திருக்கிறாள். அரைவாசி தான் புரிந்தது. அலுப்படித்தது. அந்த முயற்சியை அத்துடன் விட்டு விட்டாள். போதிய ஆங்கில அறிவு இருந்திருந்தால் சும்மா இருக்கிற நேரத்தில் இவ்வளவு புத்தகங்களையும் வாசித்துப் பயனடைந்திருக்கலாமே என்று உள்ளம் ஏங்கியது.

படங்கள் அதிகம் உள்ள ஒரு சஞ்சிகையை எடுத்து வைத்துக் கொண்டு, கதிரையில் இருந்து பக்கங்களைப் புரட்டத் தொடங்கினாள். வாசிப்பு ஓடவில்லை. படங்கள் படங்களாக வந்தன. அலுப்படித்தது. சிறிது நேரத்தில் சஞ்சிகையை மூடி, வைத்துவிட்டு, குஷன் கதிரையில் நன்றாகச் சாய்ந்து கொண்டாள். உள்ளத்தில் ஊர் நினைவுகள் திரைப்படமாக ஓடத் தொடங்கின.

## 2

சாந்தியின் அப்பா பொன்னையா ஒரு கமக்காரன். பத்துப் பரப்பு வயல். நெல்லு பயிரிடலாம். தோட்டமும் செய்யலாம். வருமானம் சீவியத்திற்கே மட்டு மட்டு. பொன்னையாவும் மனைவி இந்திராணியும் எப்படியோ கஷ்டப்பட்டு தங்களது மூன்று பிள்ளைகளையும் படிக்க வைத்து விட்டனர். மூத்தவள் சாந்தி மூன்று முறை ஏ. எல். எடுத்தாள். மூன்றாவது முறை நாலு சீ எடுத்தும் பல்கலைக்கழகம் கிடைக்கவில்லை. இரண்டாவது மகன் கருணாகரன் ஏ. எல். படித்துக் கொண்டிருந்தான். கடைக்குட்டி லீலா பத்தாம் வகுப்பு.

மூன்றாவது முறை சோதினை எழுதும் வரையும் சாந்திக்கு வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையே எழவில்லை. பல்கலைக்கழகம் கிடைக்கும். எப்படிக் கஷ்டப்பட்டாலும் அப்பாவும் அம்மாவும் மேற்படிப்புப் படிக்க வைப்பார்கள் என்று நம்பிக் கொண்டிருந்தாள். பல்கலைக்கழகம் தட்டுப் பட்டுப் போன பிறகு தான் 'என்ன செய்வது? ' என்ற கேள்வி அவள் உள்ளத்தில் பெரிதாக எழுந்தது.

ஏ. எல் படிப்புடன் ஒரு வேலையும் எடுக்க முடியாது. எப்பொழுதாவது அரசாங்கம் வாத்தி வேலைக்கு ஆள் எடுக்கும். வேறு எந்த அரசாங்க வேலையில் சேர்வதானாலும் காசு கொடுக்க வேண்டும். அவளால் காசு கொடுப்பது பற்றி நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

ஷோட்ஹான்ட் - ரைட்டிங் ஆங்கிலத்தில் படித்தால் ஏதா வது கொம்பனிகளில் வேலை தேடலாம்; கொழும்பில்தான் வேலை கிடைக்கும். அதுவும் கொழும்பில் போயிருந்து தேடவேண்டும்: அப் படிக் கிடைத்தாலும் அவர்கள் தருகின்ற சம்பளம், அங்கு வாழ்க்கை நடத்துவதற்கே போதுமானதாக இராது: போய் இருந்து வேலை தேட, உத்தியோகம் கிடைத்தால் தங்கி இருக்க, அவளுக்கு தெரிந்த மனிதர்கள் யாரும் இல்லை; கொழும்பு இலங்கையின் தலைநகரமாக இருக்கலாம். ஆனால் ஒரு பெண் தட்டத்தனிய இருந்து வேலை பார்ப்பதற்கு அது பாதுகாப்பான இடமுமல்ல.

யாழ்ப்பாணத்தில் என்ன வேலை? ஏதாவது ஒரு கடையில் கணக்கு எழுதும் வேலை கிடைக்கலாம். மாதம் ஐந்நூறு ரூபா வரை தருவார் கள். அது என்ன, துணிவாங்கி ஒரு சட்டை தைக்கக் கூடக் காணாது! சும்மா, பொழுது போக்காக வேண்டுமானால் போய் வரலாம்.

வயது ஆக இருபது; அவசரப்பட்டுக் கலியாணம் கட்டவும் சாந்தி விரும்பவில்லை. அப்படி அவசரப்பட்டுக் கலியாணம் செய்து வைப் பதற்கு அவளது அப்பாவிடம் அதற்கேற்ற சீதனம், முயற்சி எதுவு மே இல்லை; என்ன செய்வது என்று தெரியாமல் முழிசிக் கொண்டு நின்ற நேரத்தில்தான், பொன்னையாவுக்கு இங்கிலாந்திலிருந்து அந் தக் கடிதம் வந்தது.

'எனது உறவினர் ஒருவருக்கு மணப்பெண் தேவை. நற்குணசிங்கம் என்று பெயர். படித்தவர். நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார். உங் களுக்கு சாந்தியை அனுப்பச் சம்மதமா என்று தயவு செய்து அறி விக்கவும். உங்களுக்குச் சம்மதமானால் ஒரு சீதனமும் இல்லாமல், செலவையும் அவரே கொடுத்து சாந்தியை இங்கிலாந்திற்கு அழைப் பார். உடன் பதில் போடவும். இப்படிக்கு பெறாமகள் சுகிர்தராணி" என்று இருந்தது கடிதம்.

பொன்னையாவின் ஒன்றுவிட்ட அண்ணன் மகள் சுகிர்தராணி. அண்ணன் ரத்தினராசா அரசாங்க உத்தியோகம் பார்த்தவர். நிறை யச் சீதனம் வாங்கிக் கலியாணம் செய்தவர். வசதியாக வாழ்ந்த குடும்பம். இருந்தாலும் மகள் சுகிர்தராணி படிப்பில் அவ்வளவு திற மை காட்டவில்லை. இரண்டாம் முறை ஏ. எல். எடுத்தும் இரண்டு பாடங்கள்தான் பாஸ் பண்ணினாள். அவளுக்கும் இதே மாதிரிக் கலியாணப் புறப்போசல் வரவே கலியாணத்தைக் கட்டிக்கொண்டு இங் கிலாந்திற்குச் சென்று விட்டாள்.

"என்ன எழுத?" என்று பொன்னையர் மனைவி இந்திராணி யைப் பார்த்தார்.

"பெத்த பிள்ளையை எப்பிடிக் கண் காணாத நாட்டுக்கு அனுப் புறது?" என்று தயங்கினாள் இந்திராணி.

"உங்கை எத்தினை போட்டுது—? முன் பின் தெரியாதவங்களைக் கட்டுறத்துக்கே பெற்றார் பிள்ளையளை அனுப்பினம்; போனதுகளும் நல்லா இருக்குதுகள்".

"நல்லா இருக்குதுகள் எண்டு உங்களுக்கு எப்பிடித் தெரியும்?"

"பெற்றார் சொல்லுறத்தைக்கொண்டுதான் சொல்லுறன்! ஏன் அவன் சுகிர்தராணி கூட நல்ல வசதியாக வாழுறாளாம்."

"எனக்கெண்டாப் பிள்ளையை அனுப்ப அவ்வளவு மனமில்லை."

"அனுப்பாட்டா, அந்த மாதிரி வசதியான வாழ்க்கையை உன்னாலை பிள்ளைக்கு அமைச்சுக் குடுக்க முடியுமா? "எங்களிட்டைச் சீதனமே இல்லை! சீதனம் இருந்தாலும்கூட உப்பிடி ஒரு வெளிநாட்டு உழைப்புக்கார மாப்பிளை எங்களுக்குக் கிடையாது. இந்திராணி, ஏன் பிள்ளைக்கு வாற அதிர்ஷ்டத்தைத் தடுக்கிறாய்?"

"எங்களிட்டை இருக்கிற சீதனத்துக்கு அளவாக, நாங்களும் ஏதோ பாத்துச் செய்வம்."

"உந்த மாதிரி மாப்பிளையை நாங்கள் கனவிலைகூட நினைக்க முடியாது!"

"ஒண்டையும் விசாரியாமல் செய்யவோ?"

"அப்பிடிச் செய்ததுகளெல்லாம் நல்லா இருக்குதுகள்!"

"அவன் சுகிர்தராணி காசுக்காறி, நடப்புக்காறி. இஞ்சையே அதுகள் எங்களோடை அவ்வளவு கொண்டாடுறதில்லை, எங்களிட்டைக் காசில்லை எண்டு. அவள் ஏன் இப்ப அவசரப்பட்டுக் கடிதம் எழுதுறாள்? எங்களிலை ஏன் அப்பிடித் திடீரெண்டு கரிசனை வந்தது?"

"எங்களுக்குக் கசிஞ்சல்ல, அவைக்குப் பொம்பிளை தேவைப்பட்டிருக்கலாம். இந்திராணி! உனக்குத் தெரியாது, வெளிநாடுகளிலை தமிழ்ப் பொம்பிளையளுக்கு நல்ல டிமாண்டாம். தமிழ்ப் பொடியள் தமிழ்ப் பெட்டையளைத்தான் விரும்புறாங்களாம்; அதுதான் இஞ்சை கடிதம் எழுதுறாங்கள் பொம்பிளை வேணுமெண்டு".

"எனக்கெண்டா விருப்பம் இல்லை. என்னவோ நீங்கள் உங்கடை விருப்பம்போலை செய்யுங்கோ!"

பொன்னையருக்குப் பூரண சம்மதம்.

சாந்திக்குத் தலைகால் தெரியாத புளுகம்: நான் கனவில்கூட எண்ணிப் பார்த்திராத சுகபோக வாழ்க்கையல்லவா தேடி வருகிறது? சுவர்க்க புரி என்கிறார்களே, இங்கிலாந்தை, பத்திரிகைளிலும் சினிமாப் படங்களிலும் பார்த்த அந்தக் காட்சிகளை நேரில் சென்று பார்க்கப் போகிறேனா? காற்றில் மேல் எழும்பிப் பறப்பது போலிருந்தது செய்தியைக் கேட்ட நாளில் இருந்து!

இலங்கையில் ஒரு சாதாரண உத்தியோக மாப்பிளையைக் கட்டுவதற்கே சீதனம் இல்லாத தனக்கு, இங்கிலாந்து உத்தியோககாறனும், சுக போக வாழ்க்கையுமா? அதிர்ஷ்ட தேவதை இப்படியுமா வந்து அள்ளிக் கொட்டுவாள்?

"நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார்......! சீதனச் செலவு ஒன்றும் இல்லாமல் முழுச் செல்வையும் அவரே பொறுத்துச் சாந்தியை இங்கிலாந்திற்கு அழைப்பார்," 'இந்த வரிகள் திரும்பத் திரும்ப அவள் மனக்கண் முன்னுல் ஒடி அவளது உள்ளத்தை புளகாங்கிதம் அடையச் செய்தன.

காசைத் தூசென மதித்து இப்படிச் செலவு செய்பவரானால் அவர் பெரிய உததியோகததனாகத்தான இருக்கவேண்டும. சொந்த வீடு, கார் எல்லாம் தேடியிருப்பார். அந்தக் காரில் ஏறி இங்கிலாந்து முழுவதையும் சுற்றிப் பார்க்கலாம். அங்கே பார்க்க என்னவெல்லாம் இருக்கின்றன...! வீதிகள், பாலங்கள், கட்டடங்கள், கடைகள். மியூசியங்கள், தியேட்டர்கள் ... இன்னும் என்னென்ன வெல்லாமோ! இங்கிருந்து கணக்குப் பார்க்க முடியாது. அங்கு நேரில் போய்ப் பார்த்தால் நான் கற்பனை பண்ணிப் பாராததைை கூட இருக்கலாம்!

எனக்கு எதிர் பாராமல் இந்த உதவியைச் செய்கின்ற சுகிர்தராணி அக்காவுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவள்! இவ்வளவு செலவு செய்து என்னை அழைக்கின்ற அந்த நற்குண சிங்கத்திற்கும் நான் நம்பிக்கை விசுவாசம் உள்ளவளாக இருக்க வேண்டும். அவன் அழகு இல்லாதவனுக இருந்தால்..? அதில் என்ன? நான் அவனுக்கு ஆயுள் பரியந்தம் நம்பிக்கை விசுவாசத்துடன் நடந்துகொள்ள வேண்டும்! நடந்துகொள்வேன்!!

இங்கிலாந்து போகிறேன். ஆங்கிலம் பேசத் தெரியாது. சில சொற்களை மட்டும் அரை குறையாகப் பேசவரும். அதிலும் உச்சரிப்பு படு மோசம். பள்ளியில் படிக்கிற காலத்தில் அந்த ஆங்கிலபாட மிஸ் ஆங்கிலத்தை எவ்வளவு கஷ்டப்பட்டுச் சொல்லித் தந்தா. அப்ப கொஞ்சம் கவனமாகப் படித்திருந்தால்..! பெட்டையளோடை பேசினதும் சிரிச்சதும்தான் மிச்சம் எண்டு நினைச்சன்! நான கண்டனா இப்பிடி இங்கிலாந்து போகச் சான்ஸ்' அடிக்குமெண்டு ?

பயமுறா எட்டிப் பார்க்கத்தான் செய்தது. வெளிநாடு சென்ற யாழ்ப்பாணத்துப் பொடியங்களைப் பற்றி அவள் நிறையக் கதைகள் கேள்விப்பட்டிருக்கிறாள். குடித்து வெறித்துக் கூத்தாடி, விழுந்து, எழும்பி — இன்னும் என்னென்னமோ எல்லாம் செய்து, செய்து, கெட்டுப் போகிறுர்களாம், இவரும் அந்த மாதிரி இருந்து விட்டால் ...?

இருக்காது! அப்படி ஏதும் இருந்தால், அக்கா ஏன் என்னை அழைக்கப் போகிறாள்? அதுவும் இவ்வளவு காசு செலவழித்து? அப்பிடி என்னை அழைத்துச் சங்கடத்தில் மாட்டி வைப்பதில் அவளுக்கு என்ன லாபம்?

பெரியப்பா இரத்தினராசா குடும்பத்தினர் காசுக்காறர் தான். ஆள் பார்த்து அந்தஸ்துப் பார்த்துப் பழகுபவர்கள். ஏற்றத் தாழ் வைச் சொல்லிலும் செயலிலும் காட்டுபவர்கள். சுகிர்தராணிக்கும் சரியான பணக்கெறுக்கு பெரிய எண்ணம். அவளது எண்ணம்போலவே அவளுக்கு வாழ்வும் அமைந்துவிட்டது!

சுகிர்தராணி அக்கா என்னுடன் ஓரளவு பழகியிருக்கிறுள் என்றா லும், சமயத்தில் தனது புத்தியை என்னிடத்திலும் காட்டத் தவறு வதில்லை. இருந்தாலும் அவள் இப்பொழுது ஏன் என்னை வில்லங் கத்துக்குக் கூப்பிட்டு வம்பிலை மாட்டி வைக்கப்போகிறாள்? அப்படி ஏதும் சிக்கல்கள் ஏற்பட்டால் அவளுக்கும் கரைச்சல்தானே! என்ன பிரச்சினை வந்தாலும் அக்கா தீர்த்து வைப்பாள்! அந்தத் துணிவில் தானே அழைக்கிறாள். அக்காவை நம்பிப் போகலாம்!

சாந்தியின் சினேகிதிகள் எல்லாம் அவளை இங்கிலாந்திற்குப் 'போ, போ' என்றுதான் தூண்டினர். சிலர் இன்னும் ஒருபடி மேலே சென்று "சாந்தி உனக்கு அடிச்ச 'லக்' எங்களுக்கு அடிக்கேல்லை யேடி?" என்று உண்மையாவும்; பகிடியாவும் சொல்லிச் சிரித்தனர். தம்பி கருணாகரன், தங்கச்சி லீலாகூட அக்காவை இங்கிலாந்து போகும்படி வற்புறுத்தினர்.

சாந்தி தீர்மானிப்பதற்கு முன்பே பொன்னையர் முடிவெடுத்து விட்டார் மகளை அனுப்புவதென்று. அவள் 'சரி' சொன்னதும் 'பொம்பிளை, அனுப்பச் சம்மதம்' என்று சுகிர்தராணிக்குக் கடிதம் எழுதினார்.

இங்கிலாந்தில் இருந்து வந்தது பதில். 'எல்லா ஆயத்தங்களும் செய்தாகிவிட்டது சாந்தியை அனுப்பவும்' என்று. சாந்தி மகிழ்ச் சிக் கடலில் மிதந்தாள்; விமானத்தில் ஏறிப் பறந்தாள்!

முன் கதவில் சத்தம் கேட்டதும் சாந்தி எழுந்து நின்றாள். ரங்கநாதனும் சுகிர்தராணியும் உள்ளே வந்தனர். பொருத்தமான சோடிதான். ரங்கநாதன் ஐந்தடி ஏழங்குல உயரம்; பொது நிறம்; அழகான முகத்தில் அறிவுக் களை பளிச்சிட்டது. நீண்ட கால இங்கிலாந்து வாழ்க்கையின் சொகுசு உடலில் பூசியிருந்தது.

சுகிர்தராணி கணவனது காதளவுக்கு இருந்தாள். சிவப்பு; அழகு; முறுக்கான உடலானாலும் உடம்பில் சதைப்பிடிப்பு ஏற்படத் தொடங்கி யிருந்தது. அரைப் பாவாடை ரீசெட் அணிந்திருந்தாள். இறுக்க

மான ஸ்கேட் அவளது இடுப்பு வளைவுகளை மிகைபடுத்திக்காட்டு கின்றது ' கம் எம்பிறேஸ் பி ' என்று கூறும் ரீசேட் தொள தொள என்றிருந்தாலும் 'பிறா' அணிந்த மார்பகங்கள் குத்திட்டு நிற்கின்றன.

குதிரை வாலாகத் தொங்கும் தலை மயிர் பறக்கச் சாந்திக்குக் கிட்ட வந்த சுகிர்தராணி "போன் கோல் ஏதும் வந்துதா சாந்தி?" என்றாள்,

"இல்லை அக்கா ஒண்டும் வரேல்லை"

"வீட்டிலை தட்டத் தனிய பொழுது போகேல்லைப் போலை!" என்று சிரித்தான் ரங்கநாதன்.

'ஓம்' என்று சொல்லி லேசாகப் புன்னகைத்தாள் சாந்தி.

"சொன்னனே சாந்தி. ரீ. வீ. பார்த்திருக்கலாமே? எந்தநேரம் போட்டாலும் புறோகிறாம்ஸ் இருக்கு"

"எனக்கு உதுகளிலை தொடப் பயம்" என்றாள். சாந்தி வெட்கத்துடன்.

"இதுகள் நல்ல இங்கிலிஷ் சாமான்கள். லேசிலை பழுதுபடாதுகள். போட்டுப் பாருங்கோ, சும்மா யோசிச்சுக்கொண்டிராமல்!" என்று சிரித்த ரங்கநாதன், றிமோட் கொன்றோலைத் தொட ரீ. வீ. உயிர் பெற்றது. அதில் ஒரு அழகான ஆணும் பெண்ணும் இறுக்கமாக முத்தமிட்டுக் கொண்டு நின்றனர். சனலை மாற்ற, அதில் 'டுமில், டுமில்', துப்பாக்கிச் சன்னங்கள் காதைக் கிழித்துக் கொண்டு பறந்தன.

சன்னங்கள் தன் மீதே பாய்வதுபோல இருந்தது சாந்திக்கு; ஓரடி பின் வாங்கினள்.

"உதை நிற்பாட்டுங்கோ" என்ற சுகிர்தராணி, தானே ரீ. வீ. யை நூர்த்தாள்,

"புத்தகம் இருந்தா வாசிக்கலாம். இஞ்சை இங்கிலாந்திலை வாங்க முடியாதது ஒண்டும் இல்லை. ஒரு நாளைக்கு இன்டியன் ஷொப்புக்குப் போய் கொஞ்சத் தமிழ் நாவல்கள், சஞ்சிகையள், வாங்கியந்து தாறன்" என்று சொல்லி விட்டுத் தனது அறைக்குள் சென்றார் ரங்கநாதன்.

சுகிர்தராணி கணவனைப் பின் தொடர்ந்து தானும் அறைக்குள் சென்று. "நீங்கள் சாந்திக்கு நாவலும், மகசீனும் வாங்கிக் குடுத்துக் கொண்டிருக்கப் போறியளா? — கலியாணத்தைக் கட்டி வையுங்கோ அவளுக்கு. நற்குணசிங்கம் வேண்டியதெல்லாம் வாங்கிக் குடுப்பன்!" என்றாள் சற்றுக் காரமாக.

"அது பற்றித்தான் யோசிக்கிறன் சுகிர்தராணி."

"யோசியாதங்கோ — செய்து வையுங்கோ!"

## 3

யாழ்ப்பாணத்தில் ரங்கநாதனது ஊர் அளவெட்டி. அப்பா பேராயிரவர் ஒரு வாத்தியார். ஒரு அண்ணாவும் அக்காவும் உண்டு. பெரிய செல்வந்தக் குடும்பம் இல்லாவிட்டாலும், சோற்றுச்கும் செலவுகளுக்கும் கஷ்டப்படாத வசதியான குடும்பம்.

ரங்கநாதன் எந்தவிதக் கஷ்டமும் இன்றி கொழும்புப் பல்கலைக் கழகத்தில் படித்து, பி. எஸ். ஸி பட்டம் பெற்றான். படிப்பில் நல்ல ஆர்வம். பட்டம் எடுத்ததும் மேல் படிப்பு படிக்கப் போகிறேன் என்றான். சரி என்றார்கள் வீட்டில்.

"இங்கிலாந்து போய்ப் படிக்கப் போகிறேன்" என்றதும் தான் தடை எழுந்தது. அண்ணா புவனேசுவரனும் ஓர் உத்தியோகத்தில் சேர்ந்திருந்தான். அக்கா கலைச்செல்வி கலியாணத்திற்குக் காத்திருந்தாள்.

பேராயிரவருக்கும் மனைவி ரத்தினத்திற்கும் மகன் படித்து முன்னேறுவது விருப்பமாக இருந்தாலும், அவன் தங்களை விட்டுப் பிரிவது பிடிக்கவில்லை. அக்கா கலைச்செல்விக்குக் கூட தம்பி வெளிநாடு போவது விருப்பமில்லை.

அண்ணா புவனேசுவரன் தான் "அவன்ரை படிப்பு அவனுக்கல்லோ தெரியும்? தம்பி விரும்பினால் வெளிநாடு போய்ப் படிக்கட்டும். உங்களுக்கு நான் இருக்கிறன் தானே?" என்று சொல்லி அப்பா அம்மா அக்கா மூவரையும் சம்மதிக்க வைத்து அவனை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தான்.

அவன் இங்கிலாந்து வந்த பிறகு அண்ணாவுக்கும் அக்காவுக்கும் கல்யாணமாகி விட்டது என்று கடிதங்கள் வந்தன.

லண்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கத் துவங்கிய பொழுதுதான் இலங்கைப் படிப்பிற்கும் இங்கிலாந்துப் படிப்பிற்கும் இடையில் உள்ள வேறுபாடு ரங்கநாதனுக்கு நன்கு விளங்கிற்று. பாடங்களில் மட்டுமல்ல கற்பிக்கும் முறையில்கூட இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்கள் எவ்வளவோ முன்னேறியிருந்தன. நிறையப் புத்தங்கள், உபகரணங்கள் புதிதுபுதிதாக வருகின்ற ஆராச்சி முடிவுகளைக்கூட பல்கலைக் கழக மாணவர் உடனுக்குடன் கற்கக் கூடியதாக இருந்தது.

கொஞ்ச நாட்கள்தான் ரங்கநாதன் படிப்பில் பின் தங்கி நின்றான்: புதுப் புது விடயங்களை அறிகின்றபொழுது, அவனுக்குக் கல்வியில் இருந்த ஆர்வம் மேலும் பெருகிற்று. திறமையாகக் கற்று, வெகு விரைவிலேயே வெள்ளைக்கார மாணவர்களுடன் போட்டிபோடத் துவங்கினான்: சில வேளைகளில் அவர்களையும் விஞ்சி நின்றான்.

ஒருநாள் அவனது பேராசிரியர் ட்டுறாமன் "மிஸ்ரர் ரங்கநாதன்! இலங்கேலை இருந்து வரேக்கை நீங்கள் எவ்வளவு பின் தங்கி இருந்தியள்: வெகு சீக்கிரத்திலை படிச்சு, இஞ்சை இருந்தே படிச்ச மாணவருக்கு ஈடாக வந்திட்டியள். சில வேளை அவையளையும் விடத் திறமாச் செய்யிறியள்!" என்று பாராட்டினார்.

"எல்லாத்துக்கும் உங்களுடைய வழிகாட்டல்தான் காரணம் சேர்" என்றான் ரங்கநாதன் அடக்கத்துடன்.

"ஒரு காலத்திலை நாங்கள் வெள்ளைக்கார இனத்தவர்கள்தான் மூளைசாலியள், திறமைசாலிகள். மற்ற இனத்தவரெல்லாம் எங்களையும் விடத் தாழ்ந்தவர்கள் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தம். உங்களைப் போலை பல கீழைத்தேச மாணவர்கள் இஞ்சை வந்து படிச்சுத் தங்களுடைய திறமையைக் காட்டியிருக்கிறார்கள். உங்களைப் போலை மாணவர்களைச் சந்திச்சதாலைதான், நாங்கள் எங்களுடைய அபிப்பிராயங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டது."

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையும் வெள்ளைக்காறநாடுகள்தான், கல்வியிலும் பொருளாதார வளர்ச்சியிலும் முன்னேறி இருந்தன. இப்ப எல்லா நாடுகள், எல்லா இனங்களும் முன்னேறுகின்றன. சந்தர்ப்பமும் வசதியும் சரியாய் அமைஞ்சால எல்லாரும்ம முன்னேறுவினம சேர்".

"ஒரு காலத்திலை நாங்கள்தான் உலகத்தை ஆளப் பிறந்தவர்கள், உலகத்துக்கு வழிகாட்டப் பிறந்தவர்கள் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தம். அதாலைதான் உலகத்திலேயே மிகப் பெரிய சாம்ராச்சியத்தை அமைச்சம். அந்தக் கொள்கை பிழை எண்டதை இப்ப உணர்ந்திட்டம். ஒவ்வொரு இனத்துக்கும் தன்னைத் தானே ஆளுகின்ற உரிமை இருக்கு, எண்ட கருத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டுட்டம். அதாலைதான சூரியன் அஸ்தமிக்காத அந்தப் பேரரசையே குலைச்சுட்டம்.

"சேர்! ஒரு காலத்திலை நீங்கள் மற்ற நாடுகளை ஆக்கிரமிச்சு பிடிச்சு ஆண்டியள். பிறகு காலம் மாறிவிட்டதை உணர்ந்து, அந்த நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கினியள். ஆனால் இப்ப அந்த நாடுகளில் இருந்து உங்களுடைய நாட்டுக்கு வாறவர்களுக்கு வாழ்க்கேலை முன்னேற எல்லா வாய்ப்புக்களையும் அளிக்கிறியள். தங்களுடைய சொந்த நாட்டிலேயே நிம்மதியாக இருந்து வாழமுடியாமல் ஓடியாற பலருக்கு நீங்கள் ஆதாரம் அளிச்சு, அவர்கள் முன்னேற எல்லா வசதி

களும் செய்து குடுக்கிறியள். இலங்கையிலை இருந்தே ஆயிரக்கணக்கான தமிழப் பொடியள் அகதியாக இந்த நாட்டுக்கு ஓடியந்திட்டாங்கள். அவங்களை நீங்கள் ஆதரிக்கிறது உங்களுடைய பெருந்தன்மையைக் காட்டுது! அதுக்காக நாங்கள் உங்களுக்கு நன்றியாக இருக்கிறம்!''

அவன் கூறியதைக் கேட்டுப் பேராசிரியர் ட்டுறாமன் நெகிழ்ந்து போனார்

படித்து முடிந்ததும் ஒரு கம்பனியில் வேலைக்குச் சேர்ந்தான். ரங்கநாதன். படிப்பைப் போலவே வேலையிலும் அவனுக்கு நல்ல ஆர்வம். படித்த படிப்பக்குப் பொருத்தமான வேலை என்பதால் அவனுக்கு அது 'இன்ரறஷ்டிங்காக' இருந்தது. படிப்பது ஆராய்ச்சி செய்வது திறமையாக வேலை செய்வது—இந்த வட்டத்தில்தான் அவனது வாழ்க்கை சுழன்று கொண்டிருந்தது. சில வேளைகளில் வெள்ளைக்காரர்களே அவனிடம் வந்து ஆலோசனை கேட்பார்கள்.

கையில் காசு வந்ததும் குடித்து வெறித்துக் கூத்தாடும் சில இளைஞர்களைப் போல ரங்கநாதன் ஒரு நாளும் நடந்து கொண்டதில்லை. இளம் இரத்தத்தில் சிற்றின்ப ஆசைகள் எழாமலிருக்குமா? அதுவும் கவர்ச்சியான பெண்களுடன் சுதந்திரமாகத் திரிந்து பழகும் நாட்டில் மனதுக்குக் கடிவாளம் போட்டு அந்தச் சபலங்களை அடக்கி விட்டான்.

கல்யாணம் செய்து கொள்வது பற்றி ரங்கநாதன் நினைத்தும் பார்க்கவில்லை. அதைச் செய்தால் புதிய பொறுப்புக்கள் வரும். அவற்றைச் சரிவர நிறைவேற்ற முயன்றால் படிப்பு வேலை முன்னேற்றங்கள் தடைபடும்—என்று கலியாணத்தை இயன்றவரை தள்ளிப் போடத் திட்டமிட்டிருந்தான்.

வீட்டுக்காரர் சும்மா இருப்பார்களா? 'கொண்ணனும் கொக்காவும் கல்யாணம் கட்டி விட்டார்கள். உனக்கும் வயது வந்து விட்டது. நெடுக உப்பிடி இருக்கக் கூடாது வந்து கலியாணத்தைக் கட்டிக் கொண்டு போ' என்று அப்பா பேராயிரவர் அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அவர்களது நச்சரிப்பைத் தாங்கமாட்டாமல் ஒரு குறுகிய லீவில் இலங்கைக்கு வந்தான் ரங்கநாதன். பல பெண்களைப் பார்த்து அவர்களில் சுகிர்தராணியை கொஞ்சம் பிடித்திருக்க, அவளையே கட்டச் சம்மதம் தெரிவித்தான்.

கல்யாணத்திற்கு முன்பு சுகிர்தராணியை ஒரு முறை சந்தித்துத் தெளிவாகச் சொன்னான்:

''சுகிர்தராணி! உல்லாசங்கள் கேளிக்கையளை அனுபவிக்கிறதுக்காக நீ இங்கிலாந்துக்கு வராதை! என்னுடைய மனைவியாக இருக்கிறத்துக்குத்தான் உன்னைக் கலியாணம் செய்யச் சம்மதிச்சன். அதுக்குச் சம்மதமானால் வா''.

சுகிர்தராணி 'சம்மதம்' என்று தலை அசைத்தாள்.

"அதுக்காக நான் உன்னைச் சிறைக் கைதிபோலை வீட்டுக்கை பூட்டி வைச்சிருப்பன் எண்டது கருத்தில்லை. எனக்கு உந்த உல்லா சங்களிலை ஈடுபாடு இல்லை. நான் போகிற இடங்களுக்கு உன்னை யும் கூட்டிக் கொண்டு போவன். அந்த நாடு பழகின பிறகு உனக்கும் எங்கையாவது போகவேணுமெண்டு போலை இருந்தா, அதுக்கும் சுதந்திரம் தருவன். சம்மதமா?

அதற்கும் 'சரி' என்றாள் சுகிர்தராணி.

படிப்பு, ஆராய்ச்சி, வேலை, உழைப்பு — என்று சுறுசுறுப்பாக வாழ்ந்த ரங்கநாதனுக்கு யாழ்ப்பாணத்தில் சும்மா இருக்க அலுப் படித்தது. இலங்கையில் நிலவிய சிங்கள – தமிழ் பகைமையும் அவ னுக்குப் பிடிக்கவில்லை. சிங்களவர் தமிழருக்குச் செய்கின்ற அநி யாயங்களையும் கேள்விப்பட, பத்திரிகைகளில் வாசிக்க, மனம் எரிச் சல்பட்டது. திருமணம் முடிந்த கையோடேயே இங்கிலாந்திற்குத் திரும்பிவிட்டான்.

வந்த புதிதில் சுகிர்தராணிக்கு இங்கிலாந்தைக் காட்டுவதற்காக அவளுடன் சில இடங்களுக்குப் போய் வந்தான் ரங்கநாதன். அவ னுக்கு நண்பர்கள், உறவினர்களும் குறைவு. இலங்கையைப் போல இங்கிலாந்தில் திடீரென்று உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் போய் இறங்கக் கூடாது. நாங்கள் 'விசிற்' பண்ணுகின்ற பொழுது அவர் கள் வீட்டில் இல்லாமல் இருப்பார்கள். அல்லது வேறு ஏதாவது முக்கியமான வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். நேரத்துடனேயே ஃபோன் பண்ணி, நேரம் இடம் குறிப்பிட்டே யாரையும் சந்திக்க முடியும். இல்லையென்றால் நேரமும் பணமும் வீணாகும். அந்த மாதிரி 'அப்போயின்ற்மென்ற் மேக்' பண்ணிச் சந்திக்க ரங்கநாத னுக்கு இங்கிலாந்தில் யாரும் இல்லை எனினும், புது மனைவிக்காகச் சில விசிற்றுகளைச் செய்தான்.

நாட்செல்ல, நாட்செல்ல, விசிற்றுகள் கொண்டாட்டங்களை மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டான். பின்பு சுகிர்தராணிக்கும் ஒரு கொம்பனியில் வேலை கிடைக்கவே தனிமைத் துயரை அவள் அதிகம் உணரவில்லை.

இருந்தாலும் சுகிர்தராணியின் இளம் உடம்பும் உள்ளமும் உடல் இன்பங்களுக்காகத் தவித்தன- ரங்கநாதனோ படிப்பு, உழைப்பு, என்று பறந்து கொண்டிருந்தான். அவர்களுக்கிடையில் வயது வித் தியாசம் பத்து. இருவரும் எதிரெதிர் போக்குகளைக் கொண்டிருந்த தினால் தானோ என்னவோ அவர்களுக்குப் பிள்ளைப் பாக்கியம் இல்லை.

# 4

ரங்கநாதன் இங்கிலாந்து வந்த காலத்தில்தான் நற்குணசிங்கமும் வந்தான் அகதியாக. தகப்பன் வினாசித்தம்பிக்கு அரசாங்க உத்தியோகம். விரும்பினால் படித்திருக்கலாம். நற்குணசிங்கத்திற்கு அந்த நாட்டம் இல்லை. ஓ. எல். பாஸ் பண்ணிவிட்டு, நண்பர்களுடன் ஊஸ்பாத்தி பண்ணிக் கொண்டு திரிந்தான். தமிழ் இளைஞர்கள் வெளி நாடு போகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், நானும் போகப் போகிறேன் என்று ஒற்றைக் காலில் நின்றான்.

'இவன் இருந்தப் போவதில்லை; இஞ்சை இருந்தால் உபத்திரவம். எங்கேயாவது போய் உழைத்துப் பிழைக்கட்டும்' என்று வினாசித்தம்பி காசு கொடுத்து அனுப்பிவிட்டார் மகனை.

இங்கிலாந்திற்கு வந்து நன்றாக உழைத்து, நன்றாகச் செலவழித்தான். எல்லாக் கெட்ட பழக்கங்களின் ஒட்டு மொத்த உருவமானான்.

றொசன்னா என்ற ஒரு பெண்ணைக் காதலித்தான். அவள் ஸ்பெயின் நாட்டில் இருந்து இங்கிலாந்திற்கு வந்து தனியாக வாழ்ந்து கொண்டிருந்தவள். இப்படியாக நாடு விட்டு நாடு போய், தனியனாக வாழும் ஆண்களும் பெண்களும் ஐரோப்பிய நாடுகளில் நிறைய இருக்கிறார்கள். எங்கு போனாலும் வேலை கிடைக்கும். வேற்று நாட்டிற்குப் போனால் நாட்டைப் பார்க்கலாம்; சுதந்திரமாகவும் வாழலாம்.

தனிமையில் வாடிய நற்குணசிங்கமும் றோசன்னாவும் சந்தித்துக் காதலித்ததில் அதிசயம் எதுவும் இல்லை. கொஞ்சக் காலம் கூடித் திரிந்து சுதந்திரமாகக் காதலித்தார்கள். றோசன்னா கருவுற்றதும் சொல்லிக்கொள்ளாமல் தலைமறைவாகி விட்டான் நற்குணசிங்கம். ஒழுங்கான வேலையோ, நிலையான இருப்பிடமோ இல்லாதவனுக்கு 'மாறு' வது சுலபமாக இருந்தது.

பிள்ளையைப் பெற்றெடுத்த பின்புதான் அவனைக் கண்டு பிடித்தாள் றோசன்னா. "உது என்ரை பிள்ளை இல்லை" என்று சொன்ன நற்குணசிங்கம், மறுபடியும் தலைமறைவாகி விட்டான்.

றோசன்னாவும் அவனைத் துரத்தவில்லை. வழக்குக் கணக்கு என்று போனால் கரைச்சல் இழுபடும். அவன்தான் தகப்பன் என்று நிரூபிப்பதும் லேசான காரியமில்லை.

அத்துடன் றோசன்னா, அவனது வாழ்க்கையில் இருந்து விலகி விட்டாள். எங்கே போனாள், என்ன ஆனாள் என்பது யாருக்கும் தெரியாது.

நற்குணசிங்கம் ரங்கநாதனுக்குத் தூரத்து உறவு. இங்கிலாந்து வந்த பிறகு தான் பழக்கம் அதிகரித்தது. அடிக்கடி வந்து காசுக்கு அழுவான். நச்சரிப்புத் தாங்காமல் ஏதோ கொஞ்சத்தைக் குடுத்து அனுப்பிடுவான் ரங்கநாதன்.

"நான் ஒரு வெள்ளைக்காறிச்சியைக் காதலிச்சிருக்கவே கூடாது. அவள் என்னை ஏமாத்திட்டாள். என்ரை இருதயமே உடைஞ்சு போச்சு!" என்று கதையை மற்றவளமாக ரங்கநாதனிடம் சொல்லி அழுதான் நற்குணசிங்கம். ரங்கநாதனுக்கு அவனது காதல் கதைபற்றி எதுவுமே தெரியாது. அவன் சொன்ன கதையை நம்புவதும் கஷ்டமாக இல்லை.—இந்த உதவாக்கரையை யார்தான் உதைத்துத் தள்ள மாட்டார்? கொஞ்சக் காசைக் கொடுத்து தேறுதல் கூறி அனுப்பி விட்டான்.

காதல் முறிவிற்குப் பிறகு நற்குணசிங்கத்தின் நடத்தை இன்னும் மோசமாயிற்று. அடிக்கடி தனது உறவினரிடம் வந்து "காசு, காசு" என்றான்.

அவன் ரங்கநாதனுக்குப் பெரிய தலை இடியாகப் போய்விட்டான். அதை நீக்குவதற்காக "நீ இன்னொரு கலியாணம் செய்து பாரன் தம்பி" என்றான்.

"ஆராவது பொருத்தமான பெண் இருந்தால் கொண்டு வாருங்கோ செய்யிறன்" என்றான் நற்குணசிங்கம்.

கல்யாணம் செய்து கொண்டால் அவன் ஒரு வேளை திருந்தக் கூடும் என்று எதிர்பார்த்து, ரங்கநாதனும் சுகிர்தராணியும் தங்கள் செலவிலேயே சாந்தியை இங்கிலாந்திற்கு வரவழைத்தனர்.

பெம்பிளை வந்திருக்கிறது என்று கேள்விப்பட்ட உடனேயே, பறந்தடித்துக் கொண்டு வந்துவிட்டான் நற்குணசிங்கம்.

'வாழ்க்கையில் ஆடாத ஆட்டங்கள் ஆடி, இளைத்துப் போய், ஒரு பெண்ணையும் கெடுத்துவிட்டு வந்து நிற்கும் எனக்கு, இப்படி ஒரு இளமையும் அழகும் வாய்ந்த பெண்ணா?' என்று வியந்தான். சாந்தியை உடனடியாகவே தன்னுடையவளாக்கிக் கொள்ள உள்ளம் துடித்தது.

ஆனால் சாந்திக்கு நற்குணசிங்கத்தைப் பிடித்தால் தானே? அவனைப் பார்த்ததும் அவள் நினைத்தாள்:

'தொந்தி சரிந்து, உடம்பு ஊதிப் பருத்து, முகத்தில் முதிர்ச்சியின் ரேகைகள் ஓடி, கன்னங்கள் நரைத்து, தலைமயிர் பாதி உதிர்ந்து, நாற்பத்தைந்து வயதுக்காரன் போலக் காட்சியளிக்கிறான். சிவந்த கண்கள் குடிகாரன் என்று எடுத்துச் சொல்கின்றன; அவற்றின் கீழே கருவளையங்கள்.

ஆளைப் பார்த்தால், வாழ்க்கையை முற்று முழுதாக அனுபவித்தவன் போலல்லவா காட்சியளிக்கிறான்.? இவன் எப்படி எப்படியெல்லாம் வாழ்க்கையைச் சுவைத்தானோ? அவற்றின் விளைவாக ஏதும் தொற்று நோய்களை வாங்கியிருந்தால்? ஒரு பாவமும் செய்யாமலே எனக்கும் அந்த நோய்கள்!

பார்ப்பதற்குப் பிள்ளை குட்டிக்காரன் போலவும் தெரிகிறது. கலியாணம் கட்டியிருப்பானோ? பெண்சாதி பிள்ளைகளை எங்காவது ஒரு மூலையில் விட்டு விட்டு, இங்கு வந்து என்னைக் கட்டப் பார்க்கிறானோ? அல்லது கலியாணம் செய்து, விவாகரத்து எடுத்தவனோ?

இவ்வளவு அனுபவப்பட்டவனுடன் என்னுடைய வாழ்க்கையை இணைத்துக் கொள்வதா? அப்படிச் சேர்த்தால் எனது வாழ்க்கை இன்பமாக அமையுமா? முதலாவது அது நிலைத்து நிற்குமா? ஏதாவது விபரீதங்கள் நடந்து விட்டால் ...? இந்த நாட்டில் என்னை யார் காப்பாற்றப் போகிறார்கள்?

வாழ்க்கையுடன் விளையாடக் கூடாது. ' எனக்கு மாப்பிளையைப் பிடிக்கவில்லை ' என்று சொல்லிவிட வேண்டியது தான்; அதை எப்படிச் சொல்வது?

சுகிர்தராணி தான் நற்குணசிங்கத்தையும் சாந்தியையும் அறிமுகம் செய்து வைத்து தனிய இருந்து பேசவிட்டவள்.

" சாந்தி எப்பிடி இருக்கு இங்கிலாந்து? "

" நல்ல அழகாய் இருக்கு. பெரிய கட்டிடங்கள் "

" கட்டிடங்கள் பெரிசெண்டு தெரியும் தானே! நான் கேட்டது மனிசரை? "

" மனிசரை நான் இன்னும் சரியாப் பாக்கேல்லை. ஆக மிஸ்ரர் அன்ட் மிஸ்ஸிஸ் ரங்கநாதனைத்தான் கொஞ்சம் பாத்திருக்கிறன். "

" என்ன சாந்தி வழி தெருவிலை கூட மனிசரைப் பாக்கேல்லையா? என்று சிரித்தான் " நற்குணசிங்கம்.

" வெளிப் பார்வைக்கு நல்ல நாகரிகமாய் இருக்கினம் "

" அப்ப குண நடை சரியில்லையோ ? "

" ஆக்களோடை சரியாப் பழகாமல் குண நடை பற்றி எப்பிடிச் சொல்ல முடியும் ? "

" நீங்கள் இந்த நாட்டை இன்னும் சரியாப் பார்க்கேல்லைப் போலை ?"

" இப்பதானே வந்து சேந்தன் "

" சாந்தி! உமக்கு விருப்பமானா, உம்மை நான் எந்த இடத்துக்கும் கூட்டிக் கொண்டு போகத் தயாராக இருக்கிறன்" என்ற நற்குணசிங்கத்தின் குரலில் ஆசை கொப்பளித்தது.

" இல்லை மிஸ்ரர் நற்குணசிங்கம்; நான் இப்ப அப்பிடியெல்லாம் உலாத்த விரும்பேல்லை "

" அப்ப எப்ப விரும்புவியள் ? "

" கொஞ்ச நாட்கள் இருந்து, ஆற அமர யோசிச்சு ... "

" நீங்கள் யோசிச்சு முடிவெடுக்கும் வரையும் மற்றவைக்குப் பொறுமை இருக்காது. " என்று சொல்லிச் சிரித்தான் நற்குணசிங்கம்.

"பொறுமையாக இருக்கப் பழகிக்கொள்ளுறது எல்லாருக்கும்தான் நல்லது" சாந்தியின் செவ்விதழ்களில் ஒரு அரைப் புன்னகைக் கீற்று இழையோடியது.

" சாந்தி! இவரைக் கலியாணம் செய்யத்தான் லட்சக்கணக்காகக் காசு சிலவழிச்சு, உன்னை இஞ்சை வரவழைச்சம் " என்று சொல்லிச் சிரித்துக்கொண்டு அங்கு வந்தாள் சுகிர்தராணி.

அவள் சொன்னது உண்மையானாலும், அதைக் கேட்கச் சாந்திக்குச் சங்கடமாகவும் எரிச்சலாகவும இருந்தது. முகம் சிவந்தது. ஒரு வறட்சிப் புன்னகையை உதிர்த்துவிட்டுப் பேசாமல் இருந்தாள்.

கல்யாணம் கட்டப் போறனீங்கள், நல்லாய்ப் பேசிப் பறைஞ்சு, ஆளை ஆள் வடிவாப் புரிஞ்சு கொள்ளுங்கோ! என்று மறுபடியும் சிரித்தாள் சுகிர்தராணி.

" எனக்கு ஆளை எல்லாம் புரிஞ்சும்போச்சு, பிடிச்சும் போச்சு" என்று சாந்தியைப் பார்த்துக் கண் சிமிட்டினான் நற்குணசிங்கம்.

சாந்திக்கு என்ன சொல்லுவதென்று தெரியவில்லை. சங்கடத்துடன் மௌனமாக இருந்தாள்.

" என்ன சாந்தி, ஒண்டும் சொல்லேல்லையே ? " என்றாள் சுகிர்தராணி.

பெண்கள் வாய்திறந்து தங்களுடைய விருப்பத்தைச் சொல்லுறதில்லை. மிஸ்ஸிஸ் ரங்கநாதன்! நீங்கள் பெண்ணாக இருந்தும், உங்களுக்கு இது தெரியேல்லையே! மௌனம் என்றால் சம்மதம் எண்டு அர்த்தம்" என்ருன் நற்குணசிங்கம் மகிழ்ச்சியுடன்.

'எனது மௌனத்தை இவர்கள் சம்மதம் என்று அர்த்தம் செய்து கொள்கிறார்களா ? இவர்களை இப்படி எண்ண விடுவது ஆபத்து.

அப்படி விட்டால் அடுத்த நடவடிக்கைக்குப் போய்விடுவார்கள். இதற்கு ஒரு தடை போட வேண்டும்.

"கலியாணம் என்டது ஆயிரம் காலத்துப் பயிர் எண்டு பெரியவை சொல்லுவினம். எதையும் ஆற அமர யோசிச்சுத்தான் முடிவெடுக்க வேணும்" என்றாள்.

இதைக் கேட்டதும் நற்குணசிங்கத்தின் முகம் ஒடிக் கறுத்தது. சுகிர்தராணியின் முக பாவத்தில் 'சாந்தி நீ என்ன சொல்லுறாய்?' என்ற கேள்விக் குறி தெரிந்தது.

இந்த உரையாடலை வளர விட்டால், ஏதும் இசக்குப் பிசக்கான கதைகளும் வரக்கூடும் என்று உணர்ந்த சுகிர்தராணி "சாந்தி இப்பதானே வந்து இறங்கினவ. வந்த உடனையே அவவை அதிர்ச்சிக்குள்ளாக்கக்கூடாது. அவ கொஞ்சம் 'றெஸ்ற்' எடுத்த பிறகு வந்து கதையுங்கோ நற்குண சிங்கம் அண்ணை" என்றாள்.

அவனும் ஒத்துக் கொண்டான்.

நற்குண சிங்கம் போன பின்பு, நீ ஏன் அவருக்கு அப்பிடிச் சொன்னாய்? என்றாள் சுகிர்தராணி.

"எப்பிடி அக்கா?"

"யோசிச்சுத்தான் முடிவெடுக்க வேணும் எண்டு"

இந்த விடயத்தில் ஒளிச்சு மறைச்சுப் பேசப்போக அது ஆபத்தாகவும் முடியலாம் என்று அஞ்சி, "அக்கா! எனக்கு நற்குண சிங்கத்தைக் கலியாணம் செய்ய விருப்பம் இல்லை!" என்று உண்மையைக் கூறினாள் சாந்தி.

சுகிர்தராணி அதிர்ந்து போனாள்.

"ஏன் சாந்தி அப்பிடி?"

சாந்தி. தான் பயந்த காரணங்களை கூறினாள்.

நற்குண சிங்கத்தை ஒரு பார்வையிலேயே மட்டிட்டு விட்டாளே என்று வியந்த சுகிர்தராணி, சாந்தியின் துணிவைக் கண்டும் அதிசயித்தாள். என்றாலும், தங்களது திட்டத்தைக் கைவிட விரும்பாமல், "அவருக்குக் கலியாணம் கட்டி வைக்கத்தானே உன்னை நாங்கள் இலங்கேலை இருந்து அழைச்சம்!" என்றாள்.

சிறிது நேரம் யோசனையில் நின்றுவிட்டு, "தெரிஞ்சு கொண்டும் நான் பிழைவிட விரும்பேல்லை. என்னுடைய வாழ்க்கையே பாழாகிடும். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ அக்கா!" என்றாள் தழுதழுத்த குரலில்.

"மன்னிக்கலாம் சுலபமாக. ஆனா, உன்னை இஞ்சை கொண்டு வாறதுக்கு அவர் சிலவழிச்ச ரண்டு லட்சம் ரூபாயையும் குடுக்கிறது அவ்வளவு சுலபமான வேலையில்லை!"

ஓ எக்கச்சக்கமாக மாட்டுப்பட்டுக் கொண்டோமே என்று சாந்தி கலங்கினாள். கண்கள் பனித்தன. ஜன்னல் கண்ணாடி ஊடாக, லண்டன் மாநகரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு, மௌன மாக நின்றாள்.

" இன்னும் கொஞ்ச நாள் தாறன். யோசிச்சு ஒரு நல்ல முடிவு எடு! "

# 5

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சுகிர்தராணிக்கு ஒரு காதல் ஏற்பட்டது. காதலனது பெயர் விஜயன்.

சுகிர்தராணி நல்ல அழகி. மெலிந்த உடலானாலும், சுறு சுறுப் பானவள். எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிப் பழகும் சுபாவம். தனது வெண் பற்கள் பளிச்சிட சிரித்துச் சிரித்துப் பேசுவாள். பணக் காரப் பெண். ஆடை அலங்காரங்களுக்குச் சொல்ல வேண்டுமா?

ரியூட்டறி வகுப்புகள் தொடங்குவதற்கு முன்பே பிள்ளைகள் வந்து, யாழ்நகர் சிறீதர், வெலிங்டன் தியேட்டர்களுக்குப் பக்கத்தில் உள்ள மரங்களின் கீழ் குழுமிவிடுவர். சுகிர்தராணி வந்து விட்டாள் என்றால் எல்லோருக்கும் தெரியும். படிப்பில் கவனமில்லாத எல்லா ஆண்களது கவனமும் அவளிடம் இருக்கும். எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்தாள்.

விஜயன் கொஞ்சம் கறுப்பானாலும் நல்ல உயரம். அவனுக்கு அழகான முகபாவம். எவருடனும் சுலபமாகச் சேர்ந்து பழகும் சுபா வம். அவன் சுகிர்தராணியின் கவர்ச்சியில் மயங்கியதிலோ, அவள் விஜயனிடம் கவர்ந்திழுக்கப்பட்டதிலோ வியப்பேதும் இல்லை. அவனே வலியச் சென்று அவளுடன் பேசினான். அவர்களது சந்திப்புகள் அடிக்கடி நிகழ, வெறும் சிரிப்பும் கதையுமாக இருந்தது. விரை விலேயே காதலாக மாறியது.

சாதாரணமாக அந்தக் காதல், ரியூட்டறிப் படிப்புக் காலத்துடன் முடிவுற்றிருக்கும். ஒரு வேளை அதற்குப் பிறகும் நீடித்திருக்கலாம். ஆனால் இடையில் கலியாணம் செய்வதற்காக ரங்கநாதன் இங்கி லாந்திலிருந்து வந்ததுதான் வினையாயிற்று. புறோக்கர் கலியாணத் தைப் பேசினார். சுகிர்தராணிக்குத் தெரியாமலே ரங்கநாதன் அவ ளைப் பொம்பிளை பார்த்தான் பிடித்து விட்டது. கலியாணத்திற் குச் சரி சொன்னான்.

சுகிர்தராணிக்கு விடயத்தைச் சொன்ன பொழுது முதலில் அவள் அதிர்ந்து போனாள். தனக்குச் சொல்லாமலே எல்லா ஏற்பாடு களையும் செய்தமைக்காகப் பெற்றோரைக் கடிந்து கொண்டாள்.

பிறகு நிதானமாக இருந்து யோசித்த பொழுது தான் அவளுக்குச் சில விடயங்கள் புரிந்தன. நல்ல உத்தியோகம், உழைப்பு, பத்து வயது கூடுதலானாலும் அழகான மாப்பிளை, இங்கிலாந்து வாழ்க்கை. இவை இலகுவில் கிடைக்கக் கூடியவை அல்ல. சபலம் தட்டியது. மனப் போராட்டமும் ஆரம்பித்தது.

இந்தக் கலியாணத்தைச் செய்வதா விடுவதா? அப்படிச் செய்வ தானாலும் விஜயனுக்கும் விடயத்தை விளங்கப்படுத்தி, அவனது சம்மதத்துடன் செய்வதா? அல்லது ஒன்றும் சொல்லிக் கொள்ளாமல், கலியாணத்தைக் கட்டிக் கொண்டு இங்கிலாந்திற்குப் பறப்பதா?

இறுதியில் இங்கிலாந்து செல்லத் தீர்மானித்துக் கொண்டு விஜய னுக்கு விடயத்தை மெல்ல அவிழ்த்து விட்டாள்.

" சுகிர்தராணி! நீ செய்ய நினைக்கிறது பச்சைத் துரோகம்! " என்று சீறினான் விஜயன்.

" அது துரோகம் தான் விஜயன். ஆனா எங்களுடைய நிலை யையும் எண்ணிப் பாருங்கோ. நாங்கள் பல்கலைக் கழகம் போவம் எண்டது என்ன நிட்சயம்? அப்பிடிப் போகாட்டா, எங்களுக்கு உத்தியோகமே கிடையாது. வாசிற்றிக்குப் போய்ப் படிச்சாலும் எப்ப வேலை கிடைக்குதோ? நாங்கள் எவ்வளவு காலமெண்டு காவல் இருக்கிறது? "

" காதல் கொண்டால் எவ்வளவு காலமும் காவல் இருக்கலாம் "

" படிப்புச் சரிவராட்டா எனக்கு உடனை கலியாணம் பேசுவினம். உங்களுக்கு வேலை ஏதும் வராட்டா, நான் எவ்வளவு காலமெண்டு காவல் இருக்கிறது? அவ்வளவு காலமும் பெற்றாரோடை சண்டை பிடிக்கவேணுமே! "

" இந்தக் காதலுக்கு இப்பிடி ஒரு முடிவைக் குடுக்கிறது எண்டு தீர்மானிச்சுக் கொண்டுதான் நீ காதலிக்கத் தொடங்கினியா? "

" இல்லை விஜயன். எனக்கு உங்களைப் பிடிச்சுது. எதையும் நினைச்சுப் பாராமல் காதலிச்சன். "

" நானும் அப்பிடித்தான் உன்னைக் காதலிச்சன். "

" இப்ப யோசிச்சுப் பாக்கிற பொழுது தான் பல விடயங்கள் புரியுது. என்னைச் சும்மா இருக்க விட்டிலை விடாயினம். ஏதோ ஒரு கலியாணத்திலை பிடிச்சு மாட்டத்தான் செய்வினம். அதிலும் பாக்க இது நல்லதில்லையா? இதிலை எனக்கு எவ்வளவோ அனு

கலங்கள் இருக்கு. தயவு செய்து என்னை மன்னிச்சுக் கொள்ளுங் கோ!" என்றாள் கெஞ்சலாக.

"சுகிர்தராணி! இது தான் உன்னுடைய முடிவென்டா, நான் தடுத்தாப் போலை தான் நீ கேக்கப் போறியா? சரி உன்னுடைய விருப்பப்படியே செய்!"

சரி என்று சொன்னானாயினும் விஜயனுக்குச் சரியான மனத் தாங்கல். சுகிர்தராணியை வெறுத்தான். பெண்களே மயக்குக்காரி கள். அவர்களை நம்பவே கூடாது என்ற முடிவுக்கு வந்திருந்தான்.

சுகிர்தராணி இங்கிலாந்திற்குப் பறந்து விட்டாள். அவளுடைய உள்ளத்திலும் காதல் உணர்வுகள் இல்லாமல் இல்லை. விஜயனுக் காக அவளும் வருந்தாமலில்லை. ஆனால் எதிர்பார்த்து நின்ற சுகபோக வாழ்வு பற்றிய நினைவுகள், எல்லாவற்றையும் மறைத்து விட்டன!

அவள் எதிர்பார்த்தபடியே அவளுக்கு வசதியான வாழ்க்கை அமைந்தது. தனது கணவன் ரங்கநாதன் படிப்பு ஆராய்ச்சியில் காட் டிய ஆர்வத்தைத் தன்னிடம் காட்டவில்லை. காட்சிகள் காணி வல்கள், களியாட்ட கொண்டாட்டங்களென்று தன்னை அடிக்கடி கூட்டித் திரியவில்லை என்பதைத் தவிர, அவளுக்கு வேறு எந்தக் குறையும் இருக்கவில்லை.

அன்று ரங்கநாதனும் சுகிர்தராணியும் ஹைட் பாக்கிற்கு உலாவச் சென்றார்கள். லண்டன் ஒரு 'கொங்கிறீட் யங்கிள்' என்று வர்ணிக்கப்படுகின்றது. அதாவது சீமெந்துக்காடு! எங்கு பார்த்தா லும் விண்ணைத் தொடும் சீமெந்துக் கட்டிடங்கள்தானே? வெயில் காலமானால் றோட்டில் சரியான வெக்கை. கண்ணும் ஒரேமாதிரி யான காட்சிகளைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போகும்.

இந்தக் குறைபாட்டை உணர்ந்து ஆங்கிலேயர்கள் லண்டன் மாநகரில் ஆங்காங்கே பெரிய பாக்குகளை நிர்மாணித்திருக்கிறார்கள். பச்சைப் பசேல் என்ற மரங்கள், செடிகள், கொடிகள். கொத்துக் கொத்தாக மலர்கள். நடுவில் சிறிய நீர் நிலைகளும் இருக்கும். எப் பொழுதும் ஜிலு ஜிலு வென்ற காற்று. மரங்கள் செடிகள் மலர்களின் நறுமணம், கொங்கிறீட் கட்டடங்களே கண்ணுக்குப் படாத இத மான இயற்கைச் சூழ்நிலை. ஆண்களும் பெண்களும் கைகோர்த்த படி உலாவி வருவார்கள். வாங்குகளில் இருந்து பேசுவார்கள். மேலே மலர்கள் பூச் சொரியும்.

சிறிது நேரம் உலாவிவிட்டு வந்து வாங்கில் இருந்தனர். ரங்க நாதன் வழக்கம்போல தனது படிப்பு ஆராய்ச்சி பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். சுகிர்தராணி போவோர் வருவோர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதோ தூரத்தில் தெரியும் அந்த மனிதன் யார்? அந்த மனித உருவத்தில் அவளது கண்கள் திடீரென்று நிலை குத்தி நின்றன. அது யார்? விஜயனா? சுகிர்தராணியின் இதயம் ஒரு துடிப்பை மறந்தது. அதே உயரம் அதே நிறம், அதே முக பாவம். உடல் சற்றுப் பருத்திருந்தாலும் அதே உடல் வாகு. சந்தேகமில்லை. விஜயனே தான்!

இவன் எப்பொழுது இங்கிலாந்து வந்தான்? எப்படி வந்தான்? ஏன் வந்தான்? இங்கே என்ன செய்கிறான்? இலங்கையில் உதறித் தள்ளி விட்டு வந்த காதலன் தான் என்றாலும், அவனைப்பற்றி அறிய சுகிர்தராணியின் உள்ளம் துடியாய்த் துடித்தது. பழைய காதல் சந்திப்புகள், கதைகள் மனதில் விரிந்தன.

"எக்ஸ் கியூஸ் மீ ரங்கநாதன்" என்று சொல்லி விட்டு, தான் மட்டும் எழுந்து விஜயனிடம் சென்றாள். கிட்டச் சென்று "ஹல்லோ விஜயன்" என்றாள். அவளைத் திடீரென்று கண்டதில் வியப்படைந்து போன விஜயன் "ஓ! சுகிர்தராணி: நீயா" என்றான்.

அவன் அவளை வெறுத்தானாயினும் இப்பொழுது அவளைக் கண்டதில் மகிழ்ச்சியடைந்தான் போலக் காணப்பட்டான். முகபாவத்திலும் குரலிலும் அந்த மகிழ்ச்சி வெளிப்பட்டது.

"விஜயன்! என்ன திடீரெண்டு?".

"என்ன சுகிர்தராணி நீ மட்டும் தான் இங்கிலாந்துக்கு வரலாமா?" கிண்டலாகச் சிரித்தாள்.

"அது தான் எப்ப வந்தியள்? எப்பிடி வந்தியள்? எண்டு கேக்கிறன்."

இலங்கேலை நடந்த 1983 ஆம் ஆண்டுக் கலவரத்துக்குப் பிறகு, தமிழர் அங்கை இருக்கேலாது எண்டு வெளிநாடுகள் தமிழ் அகதியளுக்கு இருக்க இடம் குடுக்குது. அந்தச் சலுகையைப் பயன்படுத்தி நானும் வந்துட்டன்."

"வந்து எவ்வளவு காலம்!"

"மூண்டு வரியம்."

"என்ன செய்யிறியள்?"

"ஒரு ரெக்னிக்கல் கோஸ் செய்யிறதாக ஒரு என்ஜினியறிங் நிறுவனத்திலை பதிவு செய்திட்டு, வெளிலை வேக் பண்ணுறன். நிறைய உழைச்சு வசதியாக வாழுறன். நீ எப்பிடி இருக்கிறாய்?

"கணவனோடை வசதியாகச் சந்தோஷமாக வாழுறன். ஒரு நாளைக்கு வீட்டுப் பக்கம் வாருங்கோவன்."

" ஏன் உங்க வீட்டுக்கு? நீ தான் என்னை வேண்டாம் எண்டு கூதறித் தள்ளீட்டு வந்துட்டியே! "

" நாங்கள் இனி நண்பர்களாகப் பழகுவம் "

" காதலர்களாக இருந்திட்டு, நண்பர்களாகப் பழக முடியாது ! "

" பிளீஸ் எனக்காக வாருங்கோ "

" நான் வாறது உன்னுடைய குடும்ப ஒற்றுமைக்கும் நல்லதில்லை. உன்னுடைய கணவன் என்னிலை சந்தேகப்படுவர். "

" இல்லை அவர் சந்தேகப்படமாட்டார். அவருக்கு நல்ல பரந்த மனப்பான்மை "

" இந்த விடயத்திலை எல்லாரும் ஒரே மாதிரித்தான். சுகிர்த ராணி, நான் உன்னோடை நண்பராகக்கூட பழக விரும்பேல்லை. நீ உன்னுடைய நண்பர்களோடை பழகு; நானும் என்னுடைய நண்பர் களோடை பழகுறன்! "

" விஜயன்! எனக்காக ஒரு முறை வாருங்கோ. பிளீஸ்! "

" இந்த நாட்டிலை தமிழர் குறைவு. இருக்கிற ஆக்களும் சந்திச் சுக் கொள்ளுறதில்லை. — எனக்கும் ஒரு வித்தியாசமான பொழுது போக்காய் இருக்கும். சரி ஒரு முறை வாறன் "

" வாருங்கோ உங்களை அவருக்கு இன்றொடியூஸ் பண்ணுறன் "

" இப்ப என்னத்துக்கு ? பிறகு வாறன் வீட்டுக்கு ".

" இப்ப அறிமுகமானால்தானே பிறகு வீட்டை வரலாம். பிளீஸ்! வாருங்கோ விஜயன்! " கெஞ்சினாள்!.

வேண்டா வெறுப்பாகப் போனான்.

" யாழ்ப்பாணத்திலை என்னோடை படிச்சவர் மிஸ்ரர் விஜயன். என்ரை கணவர் மிஸ்ரர் ரங்கநாதன் " என்று இருவரையும் அறி முகம் செய்து வைத்தாள் சுகிர்தராணி.

வழக்கமான கை குலுக்கல் சிரிப்பு. ஒப்பினையான பரஸ்பர விசாரிப்புடன் விடை பெற்றனர்.

விஜயனைச் சந்தித்ததில் இருந்து சுகிர்தராணிக்கு உள்ளம் குதூகலத்தில் துள்ளியது.

பழைய காதல் நினைவுகள் மனத்திரையில் நீல் ஓடின.

# 6

1981 ஆம் ஆண்டு சிங்களக் காடையர் யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தை எரித்த நிகழ்ச்சி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் அதிர்ச்சி அலைகளைப் பரப்பியது. விஜயன் அந்த நூல் நிலையத்தில் சேர்ந்து நூல்கள் எடுத்து வாசித்தவனல்ல; சில நாவல்களை நண்பர்களிடம் இரவல் வாங்கி வாசித்திருக்கிறான். வேலை இல்லாத வேளைகளில் நூல் நிலையத்திற்குப் போய், பேப்பர்கள் சஞ்சிகைகள் புரட்டி யிருக்கிறான். றெஃபறென்ஸ் பகுதிக்குள் போயிருந்து புத்தகங்களை எடுத்துப் பார்த்திருக்கிறான். வாசிப்பதற்கு மட்டுமல்ல. பொழுது போகாதவர்களுக்குப் பொழுதைக் கழிக்க ஒரு நல்ல இடமாகவும் அந்த நூல் நிலையம் திகழ்ந்தது.

நூல் நிலையம் எரிக்கப்பட்டது என்று கேள்விப்பட்டதும் அதிர்ச்சியுற்றான் விஜயன் — தனது வீடே எரிந்தது போல. உடனடியாகச் சென்று அதைப் பார்க்கக்கூட முடியவில்லை. சிங்களக் காடையரும், சிவில் உடைச் சிங்களப் பொலீசாரும் கண்களில் கோபாக்கினியும் கையில் துப்பாக்கியுமாக — ஏவல் பேய்கள் போல அங்கு மிங்குமாக " ஆவ் அவ் " என்று அலைந்து திரிந்து கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்க்கவே பயமாக இருந்தது.

நூல் நிலையம் மட்டுமா? யாழ். நகரக் கடைகள் பல கொள்ளையடித்துக் கொளுத்தப்பட்டன. பழைய மார்க்கெட் கட்டிடம் எரிந்து சாம்பலானது. அத்துடன் திருத்திப்படவில்லை அந்தக் கொடியவர்கள். யாழ்ப்பாணக் குடா நாட்டில் உள்ள நகரங்கள் எல்லாவற்றுக்கும் சென்று இரவோடிரவாகக் கடைகளைக் கொள்ளையடித்துக் கொளுத்தினர். லொறி லொறியாகப் பொருள்கள், தெற்கே போயின.

கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் வரை இந்தக் கொள்ளைகள், கொலைகள் - கொளுத்தி எரிப்பு அட்டூழியங்கள் நடைபெற்றன!

கொள்ளைக்காரர்கள் கொழும்புமாநகருக்குத் திரும்பிய பின்பு போய்ப் பார்த்தபொழுது, அந்த அழகான நூல்நிலையக் கட்டிடம் ஒரே கரி மயமாகக் கண்ணீர்சிந்தும் அளவுக்கு மயானக்காட்சி தந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே மிகவும் அழகான இடம் யாழ். நகர முற்றவெளி மைதானம். மணிக்கூட்டுக் கோபுரம் – புல்லுக் குளம் – திறந்தவெளி அரங்கு – பொதுசன நூல்நிலையம் – யாழ். மாநகரசபைக் கட்டிடம் – தொடர் மாடிக் கட்டிடங்கள் – சுப்பிரமணியம் பூங்கா – கோட்டை – பச்சைப் பசேல் என்ற புல்தரை எல்லாம் அணியாய் அமைந்த இடம். நூல் நிலையம் எரிக்கப்பட்டதனால், எழில் கொஞ்சும் அப் பிரதேசம் முழுவதுமே சோபை இழந்திருந்தது.

மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று பார்த்தார்கள். சிலர் கவலை தாங்காது கண்ணீர் சிந்தினர். சோழகக் காற்று ஒரு இலட்சம் நூல்கள் எரிந்த சாம்பலை அள்ளி வீசி, வந்தவர்களைக் குளிப்பாட்டியது.

'இப்படியே யாழ்ப்பாணக் குடாநாடு முழு வளத்தையும் எரிக்கப் போறாங்கள். இந்த நாட்டிலை இருக்கிறது ஆபத்து' என்று நினைத்துக்கொண்டான் விஜயன்.

அவன் வசதியான குடும்பத்துப் பிள்ளை. படிப்பிலும் நாட்டம் இருந்தது. கல்வி கற்கும் ஆர்வத்துடன் தான் ஏ. எல். படிக்கத் துவங்கினான். சுகிர்தராணி மீது காதல் ஏற்பட்ட பிறகு, உள்ளம் முழுவதையும் அவளே ஆக்கிரமித்துக்கொள்ள படிப்பில் 'இன்ரறெஸ்ட்' குறைந்தது.

சுகிர்தராணி தன்னை ஏமாற்றிவிட்டு இங்கிலாந்து போனது, விஜனுக்குப் பெரிய ஆத்திரம். 'இவளால் மட்டும்தான் வெளி நாடு செல்ல முடியுமா? நானும் போய்க் காட்டுகிறேன் பார்!' என்று கறுவிக் கொண்டிருந்தவனுக்கு நூல் நிலையத்தை எரித்த நிகழ்ச்சி, வெளி நாடு செல்ல மேலும் ஒரு தூண்டுதலாக அமைந்தது.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரம்தான், விஜயனது வாழ்வில் ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. சிங்களப் பகுதி முழுவதிலும் தமிழர் கொலை செய்யப்பட்டனர். தமிழ்ப் பகுதியில் அந்தக் கைங்கரியத்தை ஆமியும் பொலிசும் செய்தன. "தமிழர் எல்லாரையும் கொலை செய்யப் போறாங்கள். இனி இந்த நாட்டிலை தமிழர் வாழேலாது எனபொடியள் ஒடிட்டாங்கள். வெளிநாடுகளுக்கு. என்னையும் ஏதாவது ஒரு நாட்டுக்கு அனுப்பி வையுங்கோ!" என்று கத்தினான்.

அதன் பயனாகத்தான் அப்பா அவனைக் காசுகட்டி இங்கிலாந்திற்கு அனுப்பினார் படிக்க.

இங்கிலாந்து போய்ச் சேர்ந்த பின்பு தமிழ்ப் பொடியள் ஆயுதம் ஏந்திச் சிங்கள ராணுவத்துடன் உக்கிரமாகப் போரிடுகிறார்கள் என்று கேள்விப்பட்டு வியந்தான். அதையிட்டுப் பெருமைப்பட்டான். இனத்

திற்காகப் போராடி உயிர்த் தியாகம் செய்யும் போராளிகளை நினைத்துப் பார்த்தால் அவனுக்கு உணர்ச்சி பொங்கி மூச்சடைக்கும். மயிர்க் கூச்செறியும்; கண்கள் பனிக்கும். அவர்களுக்காக கண்ணீர் சிந்தினான் – ஆனால், தான்மட்டும் திரும்பிவர நினைக்கவில்லை.

விஜயனுக்கு சுகிர்தராணி மீதிருந்த காதல் செத்து விட்டது. அவளை நினைத்தால் அவனது உள்ளத்தில் இப்பொழுது எந்த உணர்வும் எழுவதில்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, யாழ்ப்பாணத்தில் அவள் தன்னை உதறித் தள்ளிவிட்டுக் கலியாணம் கட்டிக்கொண்டு போனபொழுது, அவள்மீது ஆத்திரப்பட்டான்; நான் ஒன்றும் இல்லாதவன் என்பதனால்தானே சுகிர்தராணி என்னை வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளி விட்டுப் போகிறாள் என்று நினைத்துப் பார்த்தபொழுது உள்ளம் புழுங்கினான். அவளை மட்டுமல்ல பெண் இனத்தையே வெறுத்தான்.

இப்பொழுது விஜயன் ஒன்றும் இல்லாதவனல்ல. இங்கிலாந்திற்கு அகதியாக வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. கடுமையாக வேலை செய்து உழைத்து ஒரு காரே வாங்கிவிட்டான்! வசதியாக வாழ்கிறான் படிப்பு ஒருபக்கம், உழைப்பு ஒரு பக்கம் என்று மிகவும் சுறுசுறுப்பான வாழ்க்கை. வேறு எதையும் திரும்பிப் பார்ப்பதல்ல. நினைப்பதற்கே நேரமில்லை. இப்பொழுது அவனுக்கு எவர்மீதும் வெறுப்பில்லை.

உலகத்தில் போட்டி, பொறாமை, வெறுப்பு, பகை ஆகியவை இருப்பதற்கு முக்கியமான காரணம் இல்லாமை. மற்றவர்களிடம் இருப்பது எங்களிடம் இல்லையே என்ற உணர்வு – ஏக்கம். எல்லோருக்கும் போதிய வசதிகள் ஏற்பட்டு விட்டால் எரிச்சல் பொறாமையும் குறையும். ஒரு காரணமும் இல்லாமலே மற்றவர்கள்மீது பொறாமைப்படுபவர்களும் இருக்கிறார்கள். அதுகள் திருத்த முடியாத ஜென்மங்கள்.

காதலல்ல, சுகிர்தராணியுடன் எந்த விதத் தொடர்பையும், வைத்துக்கொள்ள விஜயன் விரும்பவில்லை. அப்படி வைத்திருக்க வேண்டிய தேவையும் அவனுக்கில்லை. உழைப்பதற்கே நேரம் பத்தாது. வேலைத் தலத்திலேயே நிறைய நண்பர்கள்; அவர்களிடம்கூட நின்று பேச மனமில்லாமல், பறந்து பறந்து யந்திரமாக உழைக்கிறான். வேண்டுமானால் வெளியிலும் நண்பர்கள் தேடிக்கொள்ளலாம். இப்பொழுது எந்தப்பெண்ணும் அவனைக் காதலிப்பாள்! பிறகு ஏன் ஒரு கலியாணமான பெண்ணுடன் – தன்னை ஏமாற்றியவளுடன் மினைக்கெட வேண்டும்.

சுகிர்தராணி வருந்தி அழைத்ததினாலேயே விஜயன் அவளுடைய வீட்டிற்குப் போனான். அவள் அத்துடன் விடவில்லை. "படிப்பும் ஆராய்ச்சியும்தான் அவருக்கு முக்கியம். அவருக்கு என்னோட பேசவே

நேரமில்லை; இந்தநாட்டிலை எனக்கு நண்பர்களும் இல்லை; வாழ்க்கை அலுப்படிக்குது. நாங்கள் பழைய நண்பர்கள்; தொடர்ந்து நண்பர்களாகவே பழகுவம்; எங்களுடைய நட்புத் தொடர வேணும் பிளீஸ்! விஜயன்! எனக்காக இடைக்கிடை வந்து போங்கோ! என்று கெஞ்சாத குறையாக வேண்டினாள்.

அவளது முகத்தை மறுக்கமாட்டாமல், அவள்மீது இரக்கப்பட்டு தொடர்ந்தும் இடையிடை அவளது வீட்டிற்குப் போய் வந்தான்.

உண்மையில் சுகிர்தராணிக்கு வேறு நண்பர்கள் இல்லை என்று கூறமுடியாது. புதிய நண்பர்களை அவளால் பிடிக்க முடியாமலும் இல்லை. விஜயனது நட்பை அவள் தொடர விரும்பினாள். அவனைக் கண்டதுமே அடைபட்டுப் போயிருந்த பழைய காதல் ஊற்று, மீண்டும் சுரக்கத் தொடங்கியது. அவனுடன் பழகப் பழக அது பிரவாகமாகப் பாயலாயிற்று.

ரங்கநாதன் ஒரு நல்ல கணவன். அவன் தனது மனைவியை எந்த விதத்திலும் புறக்கணிக்கவோ அலட்சியப்படுத்தவோ இல்லை. மனைவி என்ற முறையில் சுகிர்தராணிக்கு உரிய மதிப்புக் கொடுத்தான். அளவாகப் பேசிப் பழகினான். ஆனால் அவளைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாடவில்லை;

சுகிர்தராணி அழகி. படிக்கின்ற காலத்தில் மாணவர்கள் எல்லோரதும் கவனத்திற்கும் ரசனைக்கும் இலக்காக இருந்தவள். கலியாணம் என்ற பந்தத்திற்குள் அகப்பட்டதும் அந்த முக்கியத்துவம் - ஆளைக் கவர்ந்திழுக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அவளது உள்ளம் காதலுக்காக ஏங்கியது. அவளுக்குச் சாப்பிட்டுச் சாப்பிட்டுவிட்டு, அழகான ஆடைகளையும் மாற்றி மாற்றி அணிந்துகொண்டு வீட்டில் அழகுப் பொம்மையாக இருப்பது அலுப்படித்தது. தனக்கு மீண்டும் காதல் 'திறில்' தரக்கூடிய விஜயனை தனது வலைக்குள் இழுத்துவிட பார்த்தாள்;

அவளது தந்திரங்களெல்லாம் விஜயனிடம் தோற்றுப் போயின. அவன் ஒரு பொழுதுபோக்காகவே அவர்கள் வீட்டிற்குப் போய் வந்துகொண்டிருந்தான். எப்பொழுதாவது போவான். அதுவும் ரங்கநாதன் இருக்கும் நேரமாகப் பார்த்து - ரங்கநாதன் வீட்டில் இருந்தால் அவனிடம் எந்தவிதவேறுபாடும் இன்றிப் பேசிப்பழகுவார். அவன் விஜயன் மீது சந்தேகப்பட்டாரோ இல்லையோ அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

வீட்டில் ரங்கநாதன் இல்லை என்றால் ரண்டொரு நிமிடங்களில் கதையை முடித்துக் கொண்டு புறப்பட்டுவிடுவான் விஜயன். அன்றும் அப்படித்தான் அவன் வந்த பொழுது ரங்கநாதன் வெளியே போயிருந்தார், ஒப்பினைக்கு சில நிமிடங்கள் சுகிர்தராணியுடன் பேசிவிட்டு

"எனக்கு அவசர வேலை இருக்கு போட்டுவாறன்" என்று புறப்பட்டான்.

"எங்களோடை கதை பேசத்தானே வந்தியள்? ஓடுறியளே?"

"ரங்கநாதன் அண்ணையும் இருப்பர் எண்டு நினைச்சு வந்தன், அவர் இல்லை; நான் பிறகு வாறன்."

"அவர் இல்லாட்டா என்ன? என்னோட பேசுங்கோவன்; நான் தானே உங்களை வரவழைச்சது?

"சுகிர்தராணி உன்ரை கணவன் இல்லாத நேரத்திலை வீட்டுக்கு வந்து உன்னோடை பேச நான் விரும்பேல்லை, அது அழகில்லை; உன்னுடைய கணவனும் என்னிலை சந்தேகப்படலாம்."

"இல்லை விஜயன்; அவர் சந்தேகப்படேல்லை"

"உனக்கு எப்பிடித் தெரியும்?"

"அவர் என்னிட்டை ஒருநாளும் இதுபற்றிப் பேசேல்லை."

"வெளிலை சொல்லாமல் உள்ளுர வேதனைப்படலாம் தானே? அப்பிடி அவரை வேதனைப்படுத்த நான் விரும்பேல்லை."

"இஞ்சை வராமல் விடுறத்துக்காக, சும்மா சாட்டுச் சொல்லாதேங்கோ விஜயன்."

"எங்களுடைய பழைய உறவை ரங்கநாதன் அறிஞ்சா?"

"அவருக்குத் தெரியாது; ஆர் சொல்லுறது?"

"இனிமேலும் நாங்கள் காதலர்களாக மாறலாம்தானே!"

"அதுதான் எனக்கு வேணும்" என்று ஆசையுடன் கூறி அழகாகப் புன்னகைத்தாள் சுகிர்தராணி.

"சீ! உப்பிடிச் சொல்ல உனக்கு வெட்கமாயில்லை?"

"இதிலை என்ன வெட்கம் விஜயன்.? நாங்கள் பழைய காதலர்கள் தானே? என்னுடைய கணவர் என்னைக் காதலிக்கேல்லை. அலட்சியப்படுத்துறார். இந்த நிலேலை நாங்கள் பழையபடி காதலிக்கலாம் தானே? காதல் மனித இயற்கை. மனிதத் தேவை; அதை மறுக்காதேங்கோ!"

"உங்களுடைய கணவர் உங்களை அலட்சியப்படுத்துறதாக எனக்குப் படேல்லை."

"அது உங்களுக்கு எப்பிடித் தெரியும்? எனக்கல்லோ தெரியும். அவர் என்னைத் திரும்பியும் பாக்கிறதில்லை."

"வெளிநாட்டு உத்தியோகத்துக்கும் உழைப்புக்கும் ஆசைப்பட்டு, நீதானே இந்தக் கலியாணத்தைச் செய்தனி?"

“உத்தியோகமும் உழைப்பும் மட்டும் வாழ்க்கைக்குப் போதாது: எண்டதை இப்பதான் உணருறன்.” என்றாள் ஒரு சோகக் கதா நாயகி பாணியில்.

“அப்பிடி நினைக்கிறதே பிழை சுகிர்தராணி. நீ கலியாணம் சட்டிட்டாய். சண் நிறைஞ்ச கணவர். நல்ல உழைப்பச்சாறன். அவ ரோடை நீ திருப்திப்பட்டுக் கொள்ளுறதுதான் நல்லது!”

“எப்பிடித் திருப்திப்பட முடியும்? என்னுடைய அழகு, இளமை எல்லாம், பாழாகுதே! விஜயன்! நான் உங்களிட்டைக் காதல் பிச்சை கேட்கிறன்!” உண்மையான உணர்ச்சிச் செறிவில் அவளது குரல் தழுதழுத்தது.

“அந்த மாதிரி வெறும் உடற்பசிக்கு ஆள் தேடுறது எண்டா, நான் மட்டும் தானா? உங்கை எத்தனை பேர் கிடைப்பினம்?”

“நீங்கள் என்னைப் பிழையா விளங்கிட்டியள் விஜயன். நான் அந்த மாதிரி உடல் பசிக்கு ஆள் தேடேல்லை! விபச்சாரம் செய்ய வெளிக்கிடேல்லை. எனக்குத் தேவை காதல்! என்னை உண்மையா கவே நேசிக்கிற ஒருவர்! நாங்கள் பழைய காதலர்கள். அந்தக் காதலை நான்தான் முறிச்சன் ஒத்துக்கொள்ளுறன். ஆனா இப்பவும் அந்தக் காதல் தீ என்னுடைய உள்ளத்திலை கொளுந்து விட்டு எரியுது —எனக்கு நீங்கள்தான் வேணும் விஜயன்!”

சுகிர்தராணிக்குக் கண்கள் கலங்கி, இரண்டு கண்ணீர்த் துளிகளைச் சிந்தினாள்.

“நாங்கள் யாழ்ப்பாணத்திலை காதலிச்சம். அது வேறை கதை. இப்ப இன்னொருத்தருடைய மனைவியோடை நான் காதல் செய்யத் தயாராக இல்லை”

“அவரே என்னைப் புறக்கணிக்கிற பொழுது...?”

“சுகிர்தராணி! நான் உன்னோடை ஒரு நண்பனைப் போலை தான் பழகுவன். அதுக்கு மேலை போகவேணும் எண்டு நீ விரும்பினா. நான் இஞ்சை வராமலே விட்டுடுறன்!” என்றான் விஜயன் உறுதி யான குரலில்.

“ஐயையோ! அப்பிடிச் செய்துடாதேங்கோ! கட்டாயம் வாருங் கோ!” என்று கெஞ்சினாள் சுகிர்தராணி.

“சரி வாறன்” என்றான்.

போவதைக் குறைத்துக்கொண்டான்.

# 7

பஸ்ஸர் ஒலித்தது; எழுந்து சென்று கதவைத் திறந்த விஜயன், முன்னால் நின்ற சுகிர்தராணியைப் பார்த்துத் திகைத்து விட்டான்;

இவள் ஏன் இங்கு வந்தாள்?

விஜயன் எதையும் ஒழுங்குக் கிரமமாகச் செய்பவன்; படிப்பில் மட்டுமல்ல எல்லாவற்றிலுமே ஒழுங்கு முறைமை; இங்கிலாந்திற்கு வந்ததில் இருந்து அவன் படிப்பிலும் வேலை செய்து உழைப்பதிலும் வேகமாக முன்னேறியதற்கு அவனது அணுகு முறைதான் முக்கிய காரணம்;

அறையில் பொருள்கள் வைத்தது வைத்த இடத்தில் இருக்கும். கண்ணை மூடிக் கொண்டு அவற்றை எடுத்துவிடுவான்;

இங்கிலாந்திற்கு வந்த புதிதில் மோகன்குமார் என்ற நண்பனுடன் ஒரே அறையில் குடியிருந்தான்; அவனும் இலங்கையைச் சேர்ந்தவன்; இவனைப் போலவே வேலை செய்து படித்துக்கொண்டிருந்தான். இருந்தாலும் இருவரது படிப்புகளும் வேறு; ஆளை ஆள் சந்திப்பதில்லை. வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓடிக் கண்ணாம் பூச்சி விளையாடுவது போன்ற அந்த வாழ்க்கை பிடிக்காததால் தனி அறைக்கு மாறினான்;

கொஞ்சம் செலவு அதிகமாக இருந்தாலும் தனி அறை வாழ்க்கை மிகவும் வசதியாக இருந்தது; நினைத்த நேரம் நினைத்ததைச் செய்யலாம். எப்படியும் இருக்கலாம். மற்றவர்களது தலையீடு இல்லை; ஆனால் தனி அறைக்கு வந்த பிறகு, நான் மட்டும் தானே என்று தனது ஒழுங்கு கட்டுப்பாடுகளைக் கொஞ்சம் தளர்த்தி இருந்தான்.

"என்ன என்னை எதிர்பார்க்கேல்லையா?"

தனது உடல் நிறத்திற்குப் பொருத்தமான றோஸ் நிறத்தில் ஸ்கேட் - பிளவுஸ். உதட்டில் லிப்ஸ்ரிக், மேக்கப்; கருங் கூந்தல் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது; மாய மோகினி போல் நின்ற சுகிர்தராணி அவனைப் பார்த்து மந்தஹாசமாகப் புன்னகைத்தாள்;

" இல்லை? "

" உங்களைத் தேடி வந்த என்னை உள்ளே அனுமதிக்கப் போற தில்லையா? "

" சரி சரி வாருங்கோ உள்ளுக்கு " அவள் வந்தது பிடிக்கா விட்டாலும், புன்சிரிப்புடன் உள்ளே அழைத்துச் சென்று " இருங்கோ" என்று கதிரையைக் காட்டினான்.

அறை சில நாட்களாகக் கூட்டப்படவில்லை. புத்தகங்கள் அடுக்குக் குலைந்திருந்தன. அவனது டிறவுசரும் சேட்டும் படுக்கை மீது கிடந்தன.

சுகிர்தராணி கதிரையில் இருக்க, உடுப்புகளை எடுத்து ஸ்ராண்டில் போட்டுவிட்டு, படுக்கையில் இருந்த விஜயன் ' ஏது இந்தப் பக்கம்? " என்று கேட்பது போல அவள் முகத்தைப் பார்த்தான்.

" விஜயன், நீங்கள் ஏன் வீட்டுப் பக்கம் வாறதில்லை! அது தான் நான் உங்களைத் தேடி வந்தன். "

" வந்தனே! "

" ஒரு மாதத்துக்கு முன்னம். "

" இல்லை ரண்டு கிழமை இருக்கும். "

" என்ன செய்து கொண்டிருந்தியள்? "

" படிச்சுக் கொண்டிருந்தன் " என்று மேசை மீது கிடந்த தனது நோட்சைக் காட்டினான்.

" நான் வந்து உங்கடை படிப்பைக் குழப்பீட்டனா? " மெல்லப் புன்னகைத்தான்.

" என்ன விஜயன் நான் வந்தது பிடிக்கேல்லையா! "

" இல்லை Embarrassing கா ( சங்கடம் ) இருக்கு " அசட்டுச் சிரிப்புடன் நெளிந்தான்.

சுகிர்தராணி எழுந்து விஜயனுக்குப் பக்கத்தில் படுக்கையில் இருந்து " எனக்கு Embracing (தழுவுதல்) இருக்கு: என்று அவனது கண்களுக்குள் பார்த்துச் சிரித்தாள்.

விஜயன் சற்றுவிலகி இருந்து " நீங்கள் உப்பிடிச் சொல்லக் கூடாது! " என்றான்.

குசினிக் கதவு திறந்திருந்தது. சூட்டடுப்பில் ஆவிபறந்து கொண்டிருந்தது. " என்ன சமைக்கிறியள்? " விஜயனது அனுமதிக்குக் காத்திராமலே சுகிர்தராணி எழுந்து அடுப்பங்கரைக்குச் சென்றாள்.

" இறைச்சி வதக்கிறன் " என்று சொல்லிக் கொண்டே விஜயனும் அவள் பின்னால் வந்தான்.

" நான் சமைக்கட்டா? "

" வேண்டாம். " " வேண்டாம். "

" ஏன் விஜயன் பயப்பிடுறியளா? பயப்பிடாதேங்கோ! நான் நல்லாச் சமைப்பன். என்ரை சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தான், ரங்கநாதன் நல்ல திடகாத்திரமாக இருக்கிறார். " -சிரித்தாள்.

" உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? "

" சிரமமா? இது சந்தோஷமல்லோ! தூள் எங்கை? "

கபேட்டைத் திறந்து தூளை எடுத்துக் கொடுத்து விட்டு, அவளைத் தடுக்க முடியாமல் பார்த்துக் கொண்டு நின்றான் விஜயன். சுகிர்தராணி இறைச்சியைக் கிளறியபடியே சொன்னாள்: " இண்டைக்கு நானும் உங்களோடை சாப்பிடப் போறன். "

" ஐயோ! என்னுடையது மோசமான சாப்பாடு! "

" இல்லை. அது நல்லாய் இருக்கும். நானும் சாப்பிடுறன். " -சிரித்தாள்.

" ஆகப் பாண்தான் இருக்கு. அப்பிடியானால் ஓடிப்போய் வெளியிலை ஏதாவது வாங்கியாறன் "

" ஒண்டும் வாங்க வேண்டாம். இஞ்சை இருக்கிறதே போதும். கூடுதலாக ரண்டு துண்டை வெட்டினால் போச்சு "

பாணைத் துண்டங்களாக்கி பட்டர் பூசினாள். படிப்பு மேசை தான் சாப்பாட்டு மேசையும். பாணையும் இறைச்சியையும், சோசையும் மேசையில் வைத்ததும், ' சரி இருங்கோ. " விஜயன் சொன்னபடி கேட்க, தானும் எதிர்பக்கத்தில் இருந்தாள்.

சாப்பிடத் துவங்கியதும் " எப்பிடி இருக்கு என்னுடைய விருந்து. "

" இது விருந்தா? "

" உங்களோடை பகிர்ந்து கொள்ளுறத்தாலை எனக்கு இது விருந்து தான். எப்பிடி இருக்கு என்ரை சமையல்? "

" இது என்னுடைய வீட்டுச் சமையல் சுகிர்தராணி. உங்க வீட்டுச் சமையலைப் பற்றியல்லோ கேக்க வேணும்? "

" தாராளமாய் விருந்து வைக்கிறனே! வீட்டை வாருங்கோ; நீங்கள் தான் வரமாட்டியளே! "

" சோதினை முடியட்டும். வாறன். "

" எப்ப முடியும்? "

" இன்னும் சரியா ஒரு மாதம். "

' என்னிட்டைச் சாப்பிட வந்தியளெண்டா, நான் உங்களையும் ரங்கநாதன் மாதிரிக் கொழுக்கப்பண்ணீடுவன்! " - சிரித்தாள்.

" எனக்கு இப்பிடி மெல்லிசா Trim மா இருக்கத்தான் விருப்பம்"

"விஜயன் நீங்கள் மெல்லிசா ஹான்ட் சம்மா இருக்கிறதுதான் எனக்கும் விருப்பம் ""

" அது வேலை செய்து, செய்து, படிக்கிறத்திலைதான் உடம்பு இப்பிடி இறுக்கமாய் இருக்கு. உடம்பாலை வேலை செய்யிறதை விட்டனெண்டா, உடம்பு ஊதிடும்".

"எனக்குத் தினமும் வந்து உங்களுக்குச் சாப்பாடு சமைச்சுத் தர வேணும்போலை இருக்கு."

"வேண்டாம் சுகிர்தராணி. சோதினை முடியட்டும் அதுக்கு முன்னம் உடம்பைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது கண்டதையும் திண்டு" என்று சிரித்தான்.

" நான் நல்ல உருசியாச் சமைச்சுத் தருவன்" என்றவள் இனிமையாகப் புன்னகைத்தாள்.

"வேண்டாம் ருசிதான் உடம்பைக் கெடுக்கிறது."

சாப்பிட்டு முடித்ததும் "கோப்பியா? சீயா?" என்றாள்.

"ரண்டும் இருக்கு. நீ விரும்பியதைப் போடு."

" உங்களுக்குப் பிடிக்கிறதுதான் எனக்கும் பிடிக்கும்."

"எனக்கு எல்லாம் சரிதான்."

"விஜயன்! உங்களுக்கு அப்பிடிக் குறிப்பாய் ஒண்டிலும் விருப்பம் இல்லையா?

"இல்லை. எனக்கு எல்லாம் சரி."

சுகிர்தராணி கோப்பி கலந்துகொண்டு வந்தாள். அதை ரண்டு முறை உறிஞ்சிவிட்டு விஜயன் சொன்னான்:

"என்ரை அறைக்கு விசிட் பண்ணினதுக்கு நன்றி சுகிர்தராணி. தயவு செய்து இனிமேல் வராதையும்".

" விஜயன் தன்னை அலட்சியப்படுத்துகின்றான்; விலகிப் போகப் பார்க்கிறான் என்பது, சுகிர்தராணிக்குத் தெரிந்திருந்தாலும் அவன் அப்படி முகத்தில் அடித்தாற்போலக் கூறியது அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது. இருந்தாலும் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

"ஏன் என்னை வரவேண்டாம் எண்டு சொல்லுறியள்?"

"நீ இஞ்சை வாறது, உன்ரை கணவனுக்குப் பிடிக்காது."

"அவருக்கு இது தெரியாது."

" அவருக்குத் தெரியாமல் நீ இஞ்சை வாறது எனக்குப் பிடிக்கேல்லை; எனக்கும் சோதனை வருது."

" நான் இஞ்சை வராமல் விடுறதானல், நீங்கள் என்னை வீட்டை வர வேணும்."

" சரி வாறன்." என்ருன். போகவில்லை

# 8

பரீட்சை முடிந்த பின்புதான் விஜயன் ஒரு நாள் சென்றான். ரங்கநாதன் தனது அறையில் எதையோ படித்துக் கொண்டிருந்தார். வழக்கம்போல சுகிர்தராணிதான் வரவேற்றுக் கதை பேசினாள்.

ஆர்வம் இல்லாமல் அவளுடன் எதை எதையோ பேசிக்கொண்டிருந்த விஜயன் சுவிச் போட்டாற்போலத் திடீரென்று உசாரானான்.

எதிரில் ஒரு அழகான இளம்பெண். சொக்கலெற் நிறத்தில் அரைப் பாவாடையும் சேட்டும் அணியப்பெற்றிருந்த உடல், நடக்கும் பொழுது துவண்டது. அரையில் அணிந்திருந்த பெல்ற் சின்ன இடை என்றது. பளிச்சென்ற முகத்தில் ஒரு குழந்தைச் சாயல். நெற்றியில் இருந்த சாந்துப் பொட்டு தமிழ்ப்பெண் என்று கூறிற்று.

அந்தப் பெண் அவர்களைத் தாண்டிப் போனாள், அவளை இன்னும் ஒரு முறை பார்க்கவேண்டும் என்ற ஆசையை விஜயனால் கட்டுப்படுத்த முடியவில்லை, திரும்பிப் பார்த்தான். அதே நேரம் என்ன நினைத்தாளோ அவளும் திரும்பிப் பார்த்தாள். அவனைலும் நோக்கினான் – அவளும் நோக்கினாள் தான்! கண்ணோடு கண்ணிணை கவ்விற்று.

அழகிய அகன்ற விழிகள். மருட்சி, பயம், குழந்தைத் தனம். எல்லாவற்றையும் அந்தக் கண்களில் கண்டான். ஒரு கணம் தான். அடுத்த நொடியில் அவள் முகத்தை வெட்டித் திருப்பி. நிமிர்ந்து நடந்து போனாள். ஒற்றைப் பின்னலாகப் போட்டிருந்த கருநாகச் சடை அவனது கண்களில் பதிந்தது.

சாந்தி சுகிர்தராணியை விட நிறம் குறைவுதான். ஆனால் அவளையும்விட அழகானவள் என்றுதான் சொல்லவேண்டும். சுகிர்தராணியின் அழகு, அட்டகாசமான அழகு. அவள் ஒப்பனை மூலம் அதை மேலும் மிகைப்படுத்தியிருந்தாள். சாந்தியின் அழகு அடக்கமான அழகு. அதில் ஒரு பெண்மையும் பவித்திரமும், குழைவும் இருந்தன.

யார் இந்த அழகிய இளம் பெண்? இந்த வீட்டில் இவளை முன்பு ஒரு நாளும் காணவில்லையே! புதிதாக வந்திருக்கிறாளோ? ஏன்?.

நடந்தவை எல்லாவற்றையும் சுகிர்தராணியின் கண்கள் ஒன்று விடாமல் கவனித்துப் பதிவு செய்து கொண்டன. அவளது முகம் கறுத்தது. விஜனுக்குச் சாந்தியைப்பற்றி அறியும் ஆவல் மீதூரவே "யார் இது?" என்றான் மெதுவாக.

"ஒரு பெண்" அவனது விசாரிப்புப் பிடிக்காததால், சுருக்கமாகப் பதில் சொல்லிக் குறும்புப் புன்னகை பூத்தாள்.

"அது தெரியாமல் கேக்கேல்லை. தமிழ்ப் பெண் போலை இருக்கே எண்டு கேட்டன்".

"இலங்கேலை இருந்து வந்தவள், வந்து ரண்டு வாரமாகுது, எனக்குத் தங்கை முறையான பெண். பேர் சாந்தி."

விஜயன் தொடர்ந்தும் அவளைப் பற்றிக் கேட்காமல் இருக்கட்டும் என்பதற்காக, விபரங்களை மள மள வென்று சொன்னாள் சுகிர்தராணி.

"ஏன் வந்தவ?"

"கலியாணம் கட்ட."

"இளம் பெண்ணாயிருக்கே."

"இளம் பெண்ணைத்தான் கலியாணம் கட்டுவினம். பெரிய மனிசியளையல்ல." சுகிர்தராணி தனது வெறுப்பையும் சேர்த்துப் பெரிதாகச் சிரித்தாள்.

"யார் மாப்பிளை?"

"நற்குண சிங்கம். அவருடைய உறவினன். எனக்குப் ஃபிறெண்ட்."

"ஓ அவரா? என்று இழுத்தான் விஜயன்.

"ஏன் அப்பிடிக் கேக்கிறியள்?".

"மிஸ்ரர் நற்குணசிங்கத்தை எனக்குத் தெரியும். அவருக்கு வயது நாப்பதுக்கு மேலை இருக்கும். இந்தப் பிள்ளைக்கு அதிகமாப் போனு, - இருபதுதான் இருக்கும்."

"இல்லை. முப்பத்தெட்டு. இருபது வயது வித்தியாசத்திலும் கலியாணம் செய்யலாம்.

"அவர் முந்தி ஒரு முறை கலியாணம் கட்டி விட்டவர்."

"அதாலைதான் இப்ப கட்டப் போறார்—சரி விஜயன், உந்தக் கதையை விட்டுட்டு, வேறை ஏதும் பேசுவம."

விஜயன் விடவில்லை "அது மட்டுமில்லை, அவர் மிக மோசமான குடிகாறன். டிறக்சும் பாவிக்கிறாரோ தெரியாது. உடம்பும் கெட்டுப்போச்சு, ஆளைப் பார்க்கவே தெரியுது."

விஜயன் தொடர்ந்து சாந்தியைப் பற்றிப் பேசியது சுகிர்த ராணிக்கு எரிச்சலூட்டியது. நற்குணசிங்கத்தைப் பற்றி அவன் குறை கூறியது, தன் மீதே குற்றம் சாட்டுவது போல இருந்தது.

"எல்லாத்துக்கும் சம்மதிச்சுத்தானே பெற்றார் அனுப்பி இருக்கினம். நீங்கள் ஏன் அது பற்றிக் கவலைப்படுறியள்?" என்றாள் சற்றுக் காரமாக.

"நற்குணசிங்கத்தைப் பற்றி அவைக்குத் தெரிஞ்சிராது. உங்கடை சொந்தக்காறர் எண்டதுக்காக கோபியாதேங்கோ. இப்பிடித்தான் எத்தினையோ யாழ்ப்பாணத்துப் பொம்பிளைப் பிள்ளையள் ஏமாற்றப்பட்டு, வெளிநாடுகளுக்கு வந்து கஷ்டப்படுதுகள்!"

"நீங்கள் இப்ப இந்தக் கலியாணத்தைக் குழப்பாதேங்கோ!"

"நான் குழப்பேல்லை; ஆனா அந்தப் பிள்ளையும் பாவம்." என்று சொன்ன விஜயன் சற்றுப் பொறுத்து "அந்தப் பிள்ளையை ஒருக்காக் கூப்பிடுங்கோவன்." என்றான்.

"சுகிர்தராணிக்கு இப்பொழுது பற்றிக் கொண்டு வந்தது. உணர்ச்சியை வெளிக்காட்டாது, கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, "அவளை ஏன் உங்களுக்கு!" என்றாள்.

"சும்மா ஒருக்காப் பேசிப் பாப்பம்."

"அதொண்டும் பேச வேண்டாம்!"

"நானொண்டும் அந்தப் பிள்ளையைப் பிடிக்க மாட்டன். சும்மா நாலு வார்த்தை பேசுவம். ஊரில் புதினத்தையாவது அறிவம்." என்று விஜயன் சிரித்தான், அவளது 'மூடை' மாற்ற.

"கலியாணம் கட்டப் போற பிள்ளை ..."

"இப்பவெல்லாம் இலங்கையிலையே பொடியளும் பெட்டையளும் சோடியாப் பேசிப் பழகுதுகள்; நீங்கள் இங்கிலாந்து வந்த பிள்ளையை மூடி வைச்சிருக்கப் பாக்கிறியளே!" — சிரித்தான்.

அதற்கு மேலும் அழைக்காவிட்டால் விஜயன் கோபிப்பான் என்று பயந்த சுகிர்தராணி, "சாந்தி இஞ்சை வாரும்." என்று கூப்பிட்டாள். சாந்தி வந்து நின்றாள்.

"இருக்கலாமே" என்றான் விஜயன்.

இருந்தாள்.

உங்களுடைய பேரென்ன மிஸ்?"

"சாந்தி."

"என்னுடைய பேர் விஜயன்" மிஸ். சாந்தி எப்பிடி இருக்கு இங்கிலாந்து?"

"நீ வந்து ரண்டு கிழமைதானே? நான் இன்னும் இங்கிலாந்தைப் பாக்கேல்லை!"

"யாழ்ப்பாணத்திலை உங்களுடைய ஊர் எது?

"யாழ்ப்பாண ரவுண்? நீராவியடி."

"இலங்கையைப்பற்றிச் சொல்லுங்கோ: யாழ்ப்பாணம் எப்பிடி இருக்கு?"

"பொடியளுக்கும் ஆமிக்கும் இடையே சரியான சண்டை நடக்குது. எந்த நேரமும் 'பொம்பர் வந்து குண்டு போடும்: எங்கை போடுவன் எண்டு சொல்லேலாது: ஹெலீலை வந்து, சுளட்டிச் சுடுவன், யாழ்ப்பாணம் முழுக்க: படு பயங்கரம்."

"அதாலைதான் இங்கிலாந்துக்கு ஓடி வந்தியளா?" என்று சிரித்தான் விஜயன்:

"விஜயன் நீங்கள்கூட சண்டைக்குப் பயந்துதானே ஓடிவந்தியள். இப்ப சாந்தீட்டைக் கேக்கிறியளே!" என்றாள் சுகிர்தராணி:

"என்ன மிஸ்டர் விஜயன், இலங்கேலை நடக்கிற தமிழ்-சிங்கள சண்டையைப் பற்றி பேப்பர்களிலை எல்லாம் வருகுதே. நீங்கள் வாசிக்கிறதில்லையா?" என்று கேட்டுக் கொண்டு அந்த இடத்திற்கு வந்தார் ரங்கநாதன்.

அவர் வந்ததும் சாந்தி எழுந்து ஒதுங்கி நின்றாள். "இரு பிள்ளை" என்று சொல்லிவிட்டு ரங்கநாதன் இருந்து கொள்ள, சாந்தியும் நுனிக் கதிரையில் நிமிர்ந்து இருந்தாள்.

"பேப்பரிலை கொஞ்சம் தானே வருகுது: இவ நேரை நிண்டு பாத்துட்டு வந்தவ, விபரமாச் சொல்லுவ எண்டு கேட்டன்."

"1983 இனக் கலவரத்தின் போது கொழும்பிலை தமிழ்க் கடையளை எரிச்சதெல்லாம் இஞ்சை ரீ. வி. லை காட்டினாங்கள். றேடியோவிலை இன்னும் விளக்கமாகச் சொன்னாங்கள்."

"அப்பிடியா? நான் அப்ப இலங்கேலை. 58 லும், 77 லும். 83லும் சிங்களவர் தமிழரைத் துரத்தித் துரத்தி அடிச்சாங்கள் இலங்கை முழுக்க. தமிழர் இப்பிடி ஆயுதம் ஏந்திச் சிங்களவரை எதிர்த்துப் போராடுவங்கள் எண்டு நான் கனவிலும் நினைச்சிருக்கேல்லை!" என்றான் விஜயன்,

"83 லை விடுதலைப் புலியள் ஆமிக்குக் கண்ணி வெடி வைச்ச தோடையே தமிழ் சிங்களப் போர் துவங்கீட்டுதே!" என்றார் ரங்கநாதன்.

"ஓ! திண்ணைவேலீலை. அப்ப ஆமிக்காறன் யாழ்ப்பாணக் குடாநாடு முழுக்க வீடு வீடாகப் பூந்து தமிழரைச் சுட்டான். அதோ

டை தமிழரை அடக்கிப் போடலாம் எண்டு நினைச்சான்; முடி யேல்லை!'' என்றான் விஜயன்.

"அதுக்குப் பிறகு தானே போராட்டம் தீவிரம் அடைஞ்சிருக்கு'' என்றாள் சுகிர்தராணி.

"ஒரு இனத்தையும் அடக்கி ஆள முடியாது. வரலாற்றுக் காலம் முழுக்கத் தமிழர்தான் சிங்களவரை ஆக்கிரமிச்சது. சோழர் முழு இலங்கையையுமே பிடிச்சு ஆண்டார்கள். தொடர்ந்து ஆள முடிஞ் சுதா? சோழப் பேரரசு வலிமை குன்றின உடனை, சிங்களவர் சுதந் திரம் பெற்றுட்டாங்கள். இப்ப சிங்களவர் தமிழரை நசுக்கப் பாக் கினம். இந்தப் போரிலை சிங்களவர் தோற்கிறதும் நிட்சயம்!'' என்றார் ரங்கநாதன்.

"விடுதலைப் புலியள்தான் தீவிரமாய் போராடுறாங்கள்.'' என் றாள் சாந்தி மெல்லிய குரலில்.

"சரி, நீர் சொல்லும் சாந்தி. என்ன நடக்குது யாழ்ப்பாணத் திலை?'' என்றார் ரங்கநாதன்.

"நீங்கள் இதுவரை அவவிட்டை யாழ்ப்பாணக் கதையளைக் கேக்கேல்லையா?'' என்றான் விஜயன்.

"எனக்கு வேலைக்குப் போகவும், வீட்டுக்கு வந்து படிக்கவும்தான் நேரம் சரி.''

"அவருக்கு வீட்டிலை இருக்கிற ஆக்களோடையே பேச நேர மில்லை. இப்ப நீங்கள் வந்தபடியால், வந்திருந்து பேசுறார்'' என் றாள் சுகிர்தராணி.

"சரி சொல்லும் சாந்தி.''

"பொடியள் ஆமியைக் காம்புகளுக்குள்ளை அடைச்சுட்டாங்கள். ஆமிக்காறர் கோட்டைக்குள்ளை இருந்து ரவுணுக்குச் 'ஷெல்' லடிக் கிறாங்கள்.''

"முழு நகரத்துக்குமா?''

"இல்லை. கடைத் தெருவுக்கும். பஸ் ராண்டுக்கும்தான். சில வேளை குடியிருப்புக்களுக்கை வந்துவிழும். இரவிலை அடிச்சாத்தான் பயங்கரம். ஷெல் எங்கை விழும் எண்டு தெரியாது. நித்திரையும் கொள்ள முடியாது''.

இனி உந்த ஆமிக் காம்புகளை அடிச்சாத்தான் யாழ்ப்பாணச் சனம் நித்திரை கொள்ளலாம்போலை! என்று விஜயன் சிரித்தான்.

"மிஸ்ரர் விஜயன், நீங்களும், போய் போராடுற பொடியங்க ளோடை சேர்ந்து ஆமிக் காம்புகளை அடியுங்கோவன்'' என்று சிரித் தார் ரங்கநாதன்.

"அவரை ஏன் நீங்கள் இலங்கைக்குக் கலைக்கிறியள்?" என்றாள் சுகிர்தராணி.

"இளந்தாரிளாய் இருக்கே, போய்ப் போராடட்டும் எண்டு சொன்னன்". என்று சிரித்தார் ரங்கநாதன்.

"ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு திறமை வேணும் அண்ணை. ஆயுதம் ஏந்திப் போராடுற திறமை எனக்கில்லை."

அப்ப, உமக்கு படிச்சு வேலைபார்த்து உழைக்கிற திறமைதான் இருக்குப்போலை?";

"உள்ளதுதான். நான் இந்த நாட்டுக்கு வந்ததாலை எவ்வளவோ படிச்சன். நல்லா உழைச்சன். இந்தச் சோதினையும் பாஸ்பண்ணினா, இன்னும் திறமான வேலை கிடைக்கும்".

"நான்கூட இந்த நாட்டுக்கு வந்து எவ்வளவோ படிச்சு உழைச்சு முன்னேறியிருக்கிறன். வாழ்க்கை வளங்களைத் தேடி எத்தினையோபேர் வெளிநாடுகளுக்கு வாறாங்கள். எல்லாரும் இந்த மாதிரி முன்னேறுறதில்லை. இதுகும் ஒரு தனித் திறமைதான்" என்றார் ரங்கநாதன்.

"சிலர் உழைச்சதை எல்லாம் சிலவழிச்சுட்டு, வெறும் கையுமாய் நிக்கிறாங்கள்!" என்றான் விஜயன்.

"நற்குணசிங்கம் மாதிரி" என்று சொல்ல நினைத்த ரங்கநாதன் ஏன் சாந்தியின் முன்னால் அவனை அவசரப்பட்டுக் குறை சொல்வான் என்று நாவை அடக்கிக்கொண்டார்.

'இவன் நற்குணசிங்கத்தைத்தான் குத்திக் காட்டுகிறான்' என்று நினைத்த சுகிர்தராணி "சரி சாந்தி, இனி அறைக்குப் போம்" என்றாள்.

"ஏன் கலைக்கிறாய்? இருந்து பேசட்டும்" என்றார் ரங்கநாதன்.

"இவ்வளவும் பேசினது காணும். இங்கிலாந்துக்கு வந்த பெண் திடீரெண்டு அதிகம் பேசக்கூடாது".

"இது இலங்கையில்லை, இங்கிலாந்து"

"அதுதான் அளவாய்ப் பழகவேணும் எண்டு சொல்லுறன். -நீர் போம் சாந்தி";

அக்கா அப்படித் தன்னை விரட்டியது சாந்திக்குப் பிடிக்கவில்லை என்றாலும் 'அவளது தயவில் இருப்பவள் அவள் சொல்கிறபடி நடந்து கொள்வது நல்லது - சின்ன விஷயங்களிலையாயினும் என்று நினைத்துக் கொண்டு எழுந்து அறைக்குச் சென்றாள்.

சாந்தியை எழுப்பிக் கலைத்தது ரங்கநாதன் விஜயன் இருவ

ருக்கும் பிடிக்கவில்லை என்பது அவர்களது முகபாவத்தில் ஏற்பட்ட மாறுதல்களில் இருந்தே தெரிந்தது.

அதன் பிறகு கதை அவ்வளவு சுவைக்கவில்லை. சிறிது நேரத்தில் விஜயனும் விடைபெற்றான்.

மிக விரைவில் சாந்தியை நற்குணசிங்கத்திற்குக் கட்டி வைத்து விடவேண்டும் என்று சுகிர்தராணி தீர்மானித்துக்கொண்டாள்.

## 9

வீட்டுக்குப் போன பிறகும் விஜயனால் சாந்தியின் அழகிய முகத்தை — குழந்தைச் சாயல் வீசிய முகத்தை மறக்க முடியவில்லை. அவள் பார்த்த அந்தப் பார்வை எப்பொழுதும் கண்ணுக்குள் நின்றது.

படிக்கப் போவது, வேலை செய்வது, உழைப்பது, சாப்பிடுவது, தூங்குவது என்று தான் அவனது வாழ்க்கை யந்திர கதியில் போய்க் கொண்டிருந்தது. எப்பொழுதாவது நாடகம், படம், கொண்டாட்டம் என்று போவான். வேலை செய்யும் இடத்திலும் வழி தெருவிலும் பல அழகிய பெண்களைப் பார்த்திருக்கிறான். அவர்கள் யாரும் அவனது மனதைத் தொட்டதில்லை. எல்லாம் அந்தந்த நேரத்துடன் சரி.

காதல் முறிவுக்குப் பிறகு பெண்களையே வெறுத்தவன், தனது வாழ்வில் இனிக் காதலுக்கு இடமில்லை என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று இந்தப் பெண் முன்னால் வந்து நிற்கிறாளே! இது அழகு மயக்கமா? காதலா? அனுதாபமா?

சாந்தியின் குடும்பநிலை என்ன? பணக்காறியா, ஏழையா? ஏழை என்பதால்தான், ஒன்றையும் விசாரியாமல் அவளை இங்கு அனுப்பி வைத்தார்களா? இந்தப் பெண் நற்குணசிங்கத்தைக் கட்டுவதைத் தடுக்காமல் விடுவதா?

நற்குணசிங்கத்தை அவனுக்கு நன்றாகத் தெரியும். குடிகாறன். பவுடர், டிறக்ஸ், வியாபாரம் செய்தவன். அவனுக்கும் அந்தப் பழக்கம் இருக்க வேண்டும். எங்கோ ஒரு கலியாணம் கட்டி, விட்டதாகவும் கேள்வி. ஏன் விட்டானோ? சாந்தியை அவனுக்குக் கட்டி வைப்பது கிளியை வளர்த்துப் பூனையிடம் கொடுப்பது போலல்லவா?

'உலகத்தில் உப்பிடி ஆயிரம் நடக்கிறது. எல்லாவற்றையும் என்னால் தடுக்க முடியுமா? நடக்கிறது நடக்கட்டும்'' என்றும் ஒரு

குரல் உள்ளே இருந்து எழத்தான் செய்தது. இருந்தாலும் விஜய னுக்கு மனம் கேட்கவில்லை; இந்தக் கலியாணத்தை எப்படியும் தடுக்க வேண்டும். எதற்கும் சாந்தியிடம் ஒரு முறை தனிமையில் பேசிப் பார்க்க வேண்டும்;

நான் சாந்தியிடம் பேசியது சுகிர்தராணிக்குப் பிடிக்கவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது. அவள் மீண்டும் என்னைத் தன்னு டைய வலைக்குள் இழுத்து விடப்பார்க்கிறாள்: அவள் காதலி என் னும் போது காதலிக்கவும், வேண்டாம் என்று சொல்கிற பொழுது விலகிப் போகவும் நான் ஆளல்ல. மேலும் இன்னொருவன் மனைவி யை நான் காதலிக்க விரும்பவில்லை. சுகிர்தராணியை நினைத்துப் பயந்து கொண்டிருந்தால், சாந்தியைக் காப்பாற்ற முடியாது: சுகிர்தராணிக்குத் தெரியாமல் சாந்தியைச் சந்திக்க வேண்டும்.

சுகிர்தராணி காலையில் எங்கோ பகுதிநேர வேலை செய்கிறாள். அந்த நேரத்தில் வீட்டிற்குப் போனால் சாந்தி தனிமையில் இருப் பாள். சந்திக்கலாம்.

இதே போலச் சாந்தியும் விஜயனை நினைத்துக் கொண்டிருந் தாள்: தான் இன்னொருவனைக் கலியாணம் செய்ய வந்தவள். விஜயனைத் திரும்பவும் சந்திப்பளோ என்பது கூடத் தெரியாது: இந்த நிலையில் விஜயனது தீவிரத்துடன் அவள் அவனைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இருந்தாலும் அந்த அழகான முகத்தையும் கம்பீர மான தோற்றத்தையும் அவளால் இலகுவில் மறக்க முடியவில்லை.

விஜயன் தன்னைத் திருப்பி அழைத்துப் பேசியது அவளது மனதில் ஒரு சலனத்தையும் ஏற்படுத்தியிருந்தது. அதே நேரத்தில், அவனை நற்குண சிங்கத்துடன் ஒப்பிட்டும் பார்த்துக் கொண்டாள்.

யார் இந்த விஜயன்? இவர் என்ன செய்கிறார்? எப்படிப் பட்டவர்? அவனைப்பற்றி மேலும் அறிய ஆவலாக இருந்தது. அதே நேரத்தில் சுகிர்தராணியிடம் கேட்கப் பயமாகவும் இருந்தது.

அவளது ஆவலைத் தீர்க்கக் கடவுளாகவே பார்த்து அனுப்பி வைத்தது போல, ஒரு நாள் விஜயன் வந்தான். ரங்கநாதனும் மனைவியும் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியே போயிருந்தனர். ஜன்னலூடாக விஜயனைக் கண்டபொழுதே சாந்தியின் உள்ளம் ஒரு முறை துள்ளிக் குதித்தது. தனது உருவம் முழுமையாகத் தெரியும் படி ஜன்னலின் முன்னால் வந்து நின்றுகொண்டு "மிஸ்ரர் அண்ட் மிஸ்ஸ் ரங்கநாதன் வெளிலை போயிருக்கினம்" என்றாள்.

"நான் அவையைக் காண வரேல்லை. உம்மைக் காணத்தான் வந்தன்."

சாந்திக்கு வியப்பை அடக்க முடியவில்லை, "ஏன் என் னைக் காண? என்று கேட்டவள், கண்களை அகலத் திறந்து. அவனை விழுங்கி விடுவது போலப் பார்த்தாள்.

"சாந்தி உம்முடைய தனிப்பட்ட விடயம் சம்பந்தமாகப் பேசுறத்துக்கு மன்னிக்கவேணும். ஏன் ஒண்டையும் விசாரியாமல் உம்மை இங்கிலாந்துக்கு அனுப்பியிருக்கினம், கலியாணம் கட்ட ?"

"இல்லை விசாரிச்சுத்தான் அனுப்பினவை: சுகிர்தராணி எனக்கு அக்கா முறை. அவவை நம்பி அனுப்பியிருக்கினம். இந்த மாதிரி உழைப்பு உத்தியோக மாப்பிளை ஊரிலை எனக்குக் கிடையாது என்டபடியால் அனுப்பினவை."

"நீங்கள் கலியாணம் செய்ய வந்திருக்கிற திருவாளர் நற்குண சிங்கத்தின்ரை குண நடை சரியில்லை. இதை உங்களுக்கு அறிவிக்கத்தான் நான் முக்கியமாக வந்தன்."

"ஏன் என்ன செய்கிறார் ?"

"சரியான குடிகாறன். பவுடர் வியாபாரம் செய்தவர். முன்னம் ஒரு கலியாணம் கட்டி விட்டுட்டார் எண்டு கேள்வி. அந்தப் பெண் ஆர்? என்ன ஆனாள் எண்டு எனக்குத் தெரியாது."

இவற்றையெல்லாம் முன்பே ஊகித்துத்தான் சாந்தி அவனைக் கட்ட மறுப்புத் தெரிவித்தாள். இப்பொழுது அந்தச் செய்திகளை விஜயனது வாயிலிருந்து கேட்க, எல்லாம் ஊர்ஜிதமாயிற்று. அவளுக்குப் பயமும் அதிகரித்தது. இருந்தாலும் எந்தவித உணர்ச்சியையும் வெளிக் காட்டாது, "அப்பிடியா? எனக்குத் தெரியாது. சொன்னதுக்கு நன்றி" என்றாள்.

"அநியாயமாக ஒரு பெண் ஏமாற்றப்படக்கூடாதே எண்டு உங்களை எச்சரிக்கத்தான் வந்தன், சரி, நான் வரட்டா ?"

"நீங்கள் உங்களைப் பற்றி ஒண்டும் சொல்லேல்லையே!"

"இலங்கேலை தமிழருக்கு எதிராகச் சிங்கள ஆமி செய்யிற அநியாயங்களாலை, எத்தினையோ ஐரோப்பிய நாடுகள் தமிழ் அகதியளுக்கு தங்க இடம் குடுக்குதுகள். 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தோடை நான் இலங்கேலை இருந்து வெளிக்கிட்டன்."

"இப்ப என்ன செய்யிறியள் ?"

"இஞ்சை ஒரு ரெக்னிக்கல் கோசுக்கு றெஜிஸ்ரர் பண்ணீட்டு வேலை செய்து, செய்து, உழைச்சுச் சீவிக்கிறன்"

"உவ்வளவுந்தானா ?" என்றாள் சற்று ஏமாற்றத்துடன்,

"இப்போதைக்கு இவ்வளவும் போதும்தானே! பிறகு தேவையெண்டா, இன்னும் விபரமாகச் சொல்லுறன்" என்று கூறிச் சிரித்துவிட்டுச் "சரி வரட்டா ?" என்றான்.

தான் கலியாணத்துக்கு மறுத்ததையும். அப்படியானால் வந்த செலவைத் தரவேண்டும் என்று சுகிர்தராணி கேட்டதையும்பற்றி

சாந்தி எதுவும் கூறவில்லை: இவன் யார்? என்ன நோக்கத்துடன் பழகுகிறானோ? ஏன் அவசரப்பட்டுச் சொல்லுவான்? தேவை வந்தால் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்துக்கொண்டு, "சரி போட்டு வாருங்கோ" என்று புன்னகைத்தாள்.

நற்குணசிங்கத்திற்கும் சாந்தியைச் சந்தித்துவிட்டுப் போனநாள் தொடக்கம் அவள் நினைவாகவே இருந்தது. இவ்வளவு அழகா! இது எனக்காகவே யாழ்ப்பாணத்திலிருந்து வந்தது. இந்த இளமை, அழகு முழுவதும் எனக்கே சொந்தமாகப்போகின்றனவா? எனக்கு இவ்வளவு அதிர்ஷ்டமா? அவனால் அந்த நல்ல செய்தியை நம்பவே முடியவில்லை.

மீண்டும் ஒரு முறை சாந்தியைச் சந்தித்துப் பேச ஆசைப் பட்டான்.

ஆசைகளை நெஞ்சிலே தேக்கிக்கொண்டு ஓடோடி வந்தால், வீட்டில் சுகிர்தராணியும் ரங்கநாதனும் இருக்கிறார்கள். அவர்களுடன் பேசவே நேரம் சரியாக இருக்கிறது. சாந்தி கண்ணில் படுவதே இல்லை. நற்குணசிங்கம் வெட்கம் ரோசத்தை அவ்வளவு பொருட்படுத்தாதவனாயினும் "சாந்தியைக் கூப்பிடுங்கோ" என்று கேட்க வெட்கமாக இருந்தது. பேசாமலே திரும்பிப் போய்விடுவான்.

ஒரு நாள் எப்படியும் சாந்தியைச் சந்தித்துப் பேசியே விடுவது என்ற உறுதியான தீர்மானத்துடன் மற்றவர்கள் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து வந்தான். விஜயனைப்போலவே வெளியே நின்று பேசினான்.

"மிஸ்ரர் அன்ட் மிஸ்ஸிஸ் ரங்கநாதன் வெளிலை போயிருக்கினம்" என்றாள் சாந்தி. "நான் உங்களைத்தான் சந்திக்க வந்தனான் சாந்தி" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் நற்குணசிங்கம். "சொறி அவை வந்த பிறகு வந்து சந்தியுங்கோ" என்று சொல்லி விட்டு விருட்டென்று உள்ளே மறைந்து விட்டாள்.

நற்குணசிங்கத்திற்கு முகத்தில் அடித்தாற்போலிருந்தது. சாந்தி என்னை விரும்பவில்லையோ?' என்ற ஐயம் முதன்முதலாக எழுந்தது. 'இப்படியே பார்த்துக்கொண்டிருந்தால், இவள் எனக்குக் கிடைக்காமல் போய்விடுவாளோ?' என்ற பயமும் கூடவே எழுந்தது. உடனடியாகச் சுகிர்தராணியுடன் பேசி கலியாணத்திற்கு ஒழுங்கு செய்ய வேண்டும்.

கலியாணத்தை உடனடியாக நடத்துவதில், நற்குணசிங்கத்திற்கு இருந்த ஆவல் சுகிர்தராணிக்கும் இருந்தது. ஒன்று அவனைத் திருப்திப்படுத்துவது. இரண்டாவது தனது பாதையிலிருந்து சாந்தியை அகற்றுவது. விஜயன் சாந்திமீது கண்ணைப் போட்டுவிட்டான் போலிருக்கிறதே! அந்தக் கவனம் காதலாக மாறிவிட்டால் அவளு

டைய திட்டமெல்லாம் பாழ்! நற்குணசிங்கம் இதுபற்றிப் பேசிய பொழுது சுகிர்தராணி கலியாணத்தை உடனடியாக நடத்தச் சம்மதித்தாள்.

"என்ன வடிவா யோசிச்சுத் திர்மானிச்சுட்டியா?" என்றாள் சுகிர்தராணி சாந்தியிடம் ஒருநாள்.

"நான் அப்பவே தீர்மானிச் சுட்டனே அக்கா."

"என்ன திர்மானம்?" சுகிர்தராணி ஆவலாகக் கேட்டாள்.

"எனக்கு நற்குணசிங்கத்தைக் கட்டச் சம்மதமில்லை!"

"அதுக்காகத்தான் பாடுபட்டு உன்னை இஞ்சை வரவழைச்சது என்டதை மறந்துபோகாதை!"

"அதுக்காக நான் எனக்குப் பிடிக்காதவரைக் கட்டி வாழ்நாளெல்லாம் கஷ்டப்படச் சம்மதமில்லை." சாந்திக்குக் குரல் தழுதழுத்தது.

"அந்த ரண்டு லட்சம் ரூபாயையும் எப்பிடித் தரப்போறாய்? அப்பனுக்கு எழுதி வாங்கித் தாறியா?"

"அப்பா ஒண்டும் உங்களிட்டை உதவி கேக்கேல்லை. நீங்கள் கேட்டுக் கொண்டதுக்காகத்தான் என்னை அனுப்பி வைச்சார். எனக்கு ஒரு வேலை எடுத்துத் தாருங்கோ. உங்கடை காசை நான் உழைச்சுத் தாறன்"

"நீ இஞ்சை கலியாணம் கட்ட வந்தவளே தவிர, உழைக்க வரேல்லை. வேலைக்குப் போக ஏலாது. உடனடியாகக் கலியாணம் செய்ய வேணும்!"

"நான் என்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கத் தயாரில்லை" என்ற சாந்தியின் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன.

எங்களுடைய செலவில் யாழ்ப்பாணத்திலிருந்து அனாதையாக வந்த ஏழைப் பெண்ணுக்கு இவ்வளவு திமிரா? என்று நினைத்துப் பார்க்க, சுகிர்தராணிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சாந்தியை அறையலாம்போலக் கைகள் துரு துருத்தன. தன்னைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக்கொண்டு, "நம்பிக்கைத் துரோகம் செய்துட்டு. நீலிக் கண்ணீர்" வடிக்கிறியா?" என்றாள் கோபமாக.

"தெரிஞ்சுகொண்டும் என்னுடைய வாழ்க்கையை நானே பாழாக்கூறதா?"

"அதொண்டும் பாழாகாது. நற்குணசிங்கம் நல்ல உழைப்பாளி. நல்ல ஆம்பிளை. நீ தான் ஏமாத்தப் பாக்கிறாய்?

கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக ஓட, நிலத்தைப் பார்த்தபடி சாந்தி மௌனமாக நின்றாள். சுகிர்தராணி அவளுக்

ளுக் கிட்டப் போய்க் கையை உலுக்கி, "நீயாகச் சம்மதிச்சுக் கலியாணம் செய்யாட்டா, உன்னை அவருக்குக் கட்டாயக் கலியாணம் செஞ்சு வைப்பம். தெரிஞ்சுகொள்!" என்றாள்.

"இந்த நாட்டிலை பெண்களுக்குச் சுதந்திரம் இருக்கு" என்றாள் சாந்தி கலங்கிய குரலில்.

"சுதந்திரம் இருக்குது சரி. நீ எந்தக் கோடு கச்சேரிக்குப் போவாய்? உனக்குப் போகத் தெரியுமா? சட்டத்தரணியளுக்குக் குடுக்க உன்னிட்டைக் காசிருக்கா? பொலீஸ் ஸ்ரேஷனுக்குத்தானும் போவியா? நீ பிரசா உரிமை அற்றவள். இந்த நாட்டுக்குக் களவாக வந்தவள்! அதை மறந்துடாதை!"

சுகிர்தராணி கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள். சாந்திக்குத் தலை சுற்றத் தொடங்கியது. பொங்கி வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். கண்கள் நீர் சிந்துவதை மட்டும் அவளால் தடுக்க முடியவில்லை.

"முரண்டு பிடிக்காதை! முரண்டு பிடிச்சியோ, கஷ்டப்படப் போறது நீதான். புத்திசாலித்தனமா நடந்து கொள்" என்று சொல்லி விட்டு சுகிர்தராணி போய் ரீ. வி. பார்க்கத் தொடங்கினாள்.

கட்டாயமாகக் கலியாணம் செய்து வைப்பாளாம்! அப்படியும் செய்வார்களோ? ஏன் செய்ய மாட்டார்கள்? அவர்களைத் தடுக்க என்ன இருக்கிறது? என்னுடைய உதவிக்கு வர யார் இருக்கிறார்கள்? நற்குணசிங்கத்தைக் கட்டி கஷ்டப்படுவதைவிட, திரும்பி இலங்கைக்கே சென்று, வாழ்நாள் முழுவதும் வறுமையில் உழலலாம். யாழ்ப்பாணம் போவதானாலும் காசு வேணுமே! அனுப்பி வைப்பார்களா? வந்து சேர்ந்த காசே கொடுக்கவில்லை. மேலும் பணத்தைச் செலவழித்து என்னைத் திருப்பி அனுப்புவார்களா? அவர்களுக்கு அப்படி என்ன அவசரம்?

தனது அனாதரவான அகதி நிலையை இப்பொழுதுதான் முழுமையாக உணர்ந்து கொண்டாள் சாந்தி. என்ன செய்வதென்றும் தெரியவில்லை. ஓடிச் சென்று, படுக்கையில் விழுந்து விம்மி விம்மி அழுதாள்.

## 10

காலை நேரம். ரங்கநாதன் பத்து மணிக்கு கொம்பனியில் நிற்க வேண்டும். அதற்கு முன்பு தான் எழுதி வைத்திருந்த குறிப்புகளைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

உத்தரவில்லாமலே உள்ளே வந்து ரங்கநாதனுக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்ந்தான் நற்குணசிங்கம், அவன் அருந்தியிருந்த மதுவின் நெடி அவனையும் முந்திக் கொண்டு வந்து ரங்கநாதனது முகத்தில் அடித்தது.

"எக்ஸ்கியூஸ் மீ ரங்கநாதன் அண்ணை! நீங்கள் எனக்குக் கலியாணம் கட்டி வைக்கவெண்டுதானே சாந்தியை இலங்கேலை இருந்து எடுப்பிச்சனீங்கள்? இன்னும் ஏன் அவளை எனக்குக் கட்டித் தராமல் வைச்சிருக்கிறியள்?" என்றான்.

காலையில் வந்து தொணதொணத்துத் தனது வேலையை கெடுக்கிறானே என்று ரங்கநாதனுக்கு எரிச்சலாக வந்தது. திரும்பி நற்குணசிங்கத்தின் முகத்தைப் பார்த்தான். குடிவெறியில் முகம் உப்பி, கண்கள் சிவந்திருந்தன. அவனது கன்னங்களில் நின்ற வியர்வைத் துளிகள் அவன் வீட்டிலிருந்து விழுந்தடித்துக் கொண்டு வந்திருக்கிறான் என்பதை எடுத்துக் கூறின.

"நீ முதல்லை குடிக்கிறதை நிப்பாட்டு. பிறகு உன்ரை கலியாணத்தைப் பற்றிப் பேசுவம்."

"நான் இப்ப குடிக்கிறதில்லை அண்ணை." என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"காலேலையே குடிச்சுட்டு வந்திருக்கிறாய்! நாறுது." என்று சொல்லி ரங்கநாதன் தனது மூக்கைப் பிடித்தான்.

கொஞ்சம் தான் அண்ணை. கொஞ்சம் கூடா இருக்கட்டுமெண்டு. நீயே சொல்லண்ணை. இந்தக் குளிர்ச் சுவாத்தியத்துக்கு எப்பிடிக் குடிக்காமல் இருக்கிறது?"

"சரி நீ போத்திலையே கட்டிப் பிடிச்சுக் கொண்டிரு. உனக்கேன் கலியாணம்?"

"அப்ப சாந்தியை நீயே வைச்சிருக்கப் போறியா?"

"ஓ, நானே வைச்சிருக்கிறன். நீ போ!" என்று கோபமாகச் சொன்ன ரங்கநாதன், மீண்டும் தனது குறிப்புகளைப் புரட்டத் துவங்கினான்.

"சும்மா பகிடிக்குச் சொன்னாக் கோபிக்கிறியே அண்ணை!" என்று அவனது நாடியைத் தடவினான் நற்குணசிங்கம்.

"நீ என்னுடைய உறவினன், நண்பன் எண்டதுக்காக உனக்கு இதுவரை எவ்வளவோ உதவியள் செய்தன்..."

"அதுதான் இவ்வளவும் செய்தனி. இன்னும் கொஞ்சம் செய்யன்". பரிதாபமாகப் பல்லிளித்தான்."

"நீ திருந்தேல்லை. கலியாணம் செய்தாவது திருந்துவாய் எண்டு

நான் யாழ்ப்பாணத்திலை இருந்து பொம்பிளை இறக்குமதி செய்து வைச்சிருக்கிறம்."

"அது தான் அவளைக் கெதியாக் கட்டித்தாவன் அண்ணை—நான் திருந்த!"

"நற்குணசிங்கம்! நான் உறுதியாச் சொல்லுறன்: நீ குடியை விடும் வரை, சாந்தியை உனக்குக் கட்டித்தர முடியாது!"

"எப்பிடி அண்ணை பழகின பழக்கத்தை விடுறது?"

"சரி, விட்டுடாதை! அப்ப அதோடையே இருந்து கொள்" என்று சொல்லிவிட்டுத் தனது குறிப்புகளைப் பார்த்துக் கொண்டிருந்த ரங்கநாதன் சற்றுப் பொறுத்து. "ஒரு நிரந்தர வேலை கூட இல்லை!" என்றான்.

"என்னை ஒருத்தனும் வைச்சிருக்கிறானில்லையே! நான் என்ன செய்ய?"

"குடிச்சுட்டுப் போனா, ஆர் வைச்சிருப்பன்?" என்று காரமாகச் சொன்ன ரங்கநாதன், "என்னைக் கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விடு!" என்று சொல்லி ஃபைல்களை மூடி வைத்து விட்டு, கண்ணை மூடிக் கொண்டு கதிரையில் மவுனமாக இருந்தார்.

நற்குணசிங்கம் "சரி சாந்தியை நீயே வைச்சிரு!" என்று எரிச்சலாகக் கூறிவிட்டு, எழுந்து விட்டினுள் சென்றான்.

காலையிலேயே 'மேக்கப்' போட்டு ஸ்ரைலாக டிறெஸ் பண்ணிக் கொண்டு நின்றாள் சுகிர்தராணி. உதட்டுக்கு லிப்ஸ்ரிக்கும், தலை மயிர் குதிரைவாலுமாக சிக்கான சில்க் உடையில் மிடுக்காக நின்ற சுகிர்தராணி, ஒரு பந்தயக் குதிரையை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தாள். அந்தக் கோலத்தில், ஐந்து ஆறு வயது குறைத்தே அவளுடைய வயதை யாரும் மதிப்பிடுவார்கள்.

சோர்வாக உள்ளே வந்த நற்குணசிங்கத்தை, "என்ன காலமை வெள்ளண எழும்பி ஓடியந்திட்டியள்?" என்று கேட்டுச் கலீர் என்று சிரித்தாள். அவனுக்கு அவள் தன்னைக் கிண்டல் செய்து சிரிப்பது போல இருந்தாலும், வந்த நோக்கத்தை நிறைவேற்றாமல் போவதா என்று, "நீங்கள் எனக்கு இன்னும் கலியாணம் செய்து வைக்கேல்லையே எண்டதை ஞாபகப்படுத்த வந்தன்" என்றான்.

"அதுக்கு என்னிட்டை வந்து கேட்டிருக்கலாமே? ஏன் அவரைப் போய்க் குழப்பினியள்?"

உங்களிட்டை முறைப்பட்டு முறைப்பட்டுக் களைச்சுப் போய்த் தான் அவரிட்டைப் போனன். அவராவது அக்கறை எடுத்துச் செய்து வைப்பரெண்டு. இனி அவர் தானே குடும்பத் தலைவன்!

" இருந்தாலும் வீட்டு அலுவல் எல்லாம் நான் சொன்னபடி தான் நடக்கும். தெரியாதா? " மிடுக்காகப் புன்னகைத்தாள்.

" தெரியும் சுகிர்தராணி. எண்டாலும் என்னுடைய அவசரத்திலை அவரையும் ஒருக்கா தட்டிப் பாப்பம் எண்டு ... " பல்லிளித்தான்.

" அவசரப்படாதையும் மிஸ்ரர் நற்குணசிங்கம். எல்லாம் நான் செய்து வைப்பன். "

" அவசரப்படாமல் எப்பிடி? வயது முப்பத்தொம்பது ஆகுது. எவ்வளவு காலமெண்டு காவல் இருக்கிறது? "

அப்பொழுது ரங்கநாதன் கையில் பிறீஃப்கேசுடன் வந்து " போட்டு வாறன் ராணி " என்று சொல்லிவிட்டு வெளியே போனார்.

அவர் போகும் வரை மௌனமாக இருந்த நற்குணசிங்கம் " சுகிர்தராணி உங்களிட்டை ஒண்டு கேக்கட்டா? " என்றான் குரலைத் தாழ்த்தி.

" என்ன? சரி கேளும். "

" பிறகு என்னிலை கோபிக்கப்படாது! " பல் இளித்தான்.

" கோபிக்கேல்லை சொல்லு "

" ரங்கநாதன் அண்ணைக்கு சாந்திலை சபலம் ஏதும் இருக்குமோ!"

" இல்லை. ஏன் அப்பிடிக் கேக்கிறாய்! "

" சாந்தி அழகாய் இருக்கிறாள் ... "

" நானும் அழகாய்தானே இருக்கிறன் " என்று சுகிர்தராணி சிரித்தாள்.

" ரங்கநாதன் அண்ணைக்கும் அதிக வயதில்லை. ஒரு அழகான இளம் பெண் அடிக்கடி கண் முன்னாலை வளைய வளைய வந்தால்...?"

' அப்படியும் இருக்குமோ? ' என்ற கேள்வி சுகிர்தராணியின் மனதில் ஒரு முறை பளிச்சிட்டது. ஒரே ஒரு முறைதான். அடுத்த கணம் அவள் மனதே அவளுக்குப் பதில் சொன்னது! ' சீச்சீ ! அப்பிடி இருக்காது. படிப்பு உழைப்பிலை தான் அவருக்கு நாட்டம். அந்தப் பக்கம் அவருக்குப் பலவீனம் இல்லை. என்னிலை அவர் காட்டுற இன்ரறெஸ்டிலை இருந்தே தெரியுதே! '

" இல்லை அவருக்கு படிப்பு, உழைப்பு முன்னேற்றத்திலைதான் நாட்டம். அந்த சைட்டிலை கவர்ச்சி இல்லை " என்றாள்.

" அழகைக் கண்டா உடனை பாயிறது தானே ஆம்பிளை மனசு..."

" நீங்கள் உங்களைக் கொண்டு சொல்லூறியள் போலை? முன்னம் ஒருக்காக் கலியாணம் கட்டி விட்டனீங்களல்லோ? " என்று சிரித்தாள் சுகிர்தராணி

"அந்த விஸ்வாமித்திரரே மேனகேன்ரை அழகிலை மயங் கேல்லையா?"

"அது புராணம், கட்டுக்கதைதானே?—ஓ! இந்தக் குடிவெறிக்கை நீங்கள் புராணக் கதையளையும் படிச்சு வைச்சிருக்கிறியள்!" என்று சிரித்தான்.

"நான் கேட்டதை மன்னிச்சுக் கொள்ளுங்கோ! சும்மா கேட்டன்."

"கலியாணம் கட்டுற ஆசேலை" என்று சுகிர்தராணியும் சிரித்தாள்.

"தயவு செய்து இதை ரங்கநாதன் அண்ணேட்டைச் சொல்லீடாதை."

"இல்லை. நான் சொல்லமாட்டன்."

"அப்ப ஏன் கலியாணத்தைக் கடத்துறார்?"

"அதைச் சாந்திட்டையே கேளும்" என்று சொன்ன சுகிர்தராணி, "சாந்தி! சாந்தி!" என்று அழைத்தாள். சாந்தி உள்ளே அறையில் இருந்து "ஓம்" என்று குரல் குடுத்தாளே தவிர வரவில்லை. அவளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நற்குணசிங்கத்திற்கு ஏமாற்றமாக இருந்தது.

விறு விறுவென்று சாந்தி இருந்த அறைக்குச் சென்ற சுகிர்தராணி "ஏன் கூப்பிட்டா வந்தா என்ன?" என்றாள் கோபமாக.

நற்குணசிங்கம் வீட்டுக்கு வந்தது சாந்திக்குத் தெரியும். தன்னை அழைப்பார்கள் என்றும் அவள் ஊகித்ததால், நித்திரை போல நடித்துப் படுக்கையில் படுத்திருந்தவள் இப்பொழுது சுகிர்தராணியின் சுடு சொல்லைக் கேட்டதும், அப்பொழுது தான் எழுந்திருப்பவள் போல எழுந்திருந்து, சோம்பல் முறித்துக் கொண்டாள்.

"நற்குணசிங்கம் வந்திருக்கிறார். எழும்பி வா. வந்து பேசு."

"எனக்குச் சுகமில்லை. இப்ப பேசேலாது."

"பொய் சொல்லுறாய்"

"உண்மையைத்தான் சொல்லுறன். இப்ப அவரோடை பேசினனெண்டாத் தலையிடி கூடும்"

சாந்தி வரமாட்டாள் என்பதை உணர்ந்து கொண்ட சுகிர்தராணி திரும்பி வந்து "சாந்திக்குச் சுகமில்லையாம்" என்றாள்.

"இல்லை பொய்."

"உள்ளது தான் அவளுக்கு உம்மோடை பேசப் பிடிக்கேல்லை"

அவன் பதறிப் போனான். "ஏன் பிடிக்கேல்லை? நான் என்ன அழகாய் இல்லையா?"

"அழகில்லையா? குடிச்சுக் குடிச்சு நல்ல அழகு! சிரித்தாள்."

"என்னுடைய குடிப்பழக்கத்தைக் கிண்டல் செய்யாதேங்கோ சுமித்ராராணி. என்ன செய்யிறது நான் குடிச்சுப் பழகீட்டனே!"

"உதை விட்டாத்தான் உமக்குக் கலியாணம் அல்லது சாந்தி சம்மதியாள்!"

குடியை விடாட்டாக் கலியாணமே நடவாமல் போயிடுமா? நல்ல அழகான பெண் அனியாயமாகக் கை நழுவிப் போயிடுவள். என்ன செய்யலாம்? "நான் பழகீட்டனே! குடிக்காட்டா எனக்கு உடம்பு இயங்காது. காலேலும் ஒரு பெக் அடிச்சுட்டுத்தான் வந்தன். என்னவோ நீங்கள் தான் பாத்து..."

"அவள் சம்மதியாட்டா, என்னாலை ஒண்டும் செய்ய முடியாது. முதல்லை நீர் திருந்த வேணும்!"

"நான் எப்பிடித் திருந்த?" இப்பொழுது தன்னிரக்க உணர்ச்சி நற்குணசிங்கத்தை முற்றாகவே ஆட்கொண்டது. குடிக்கப் பழகியதற்காக முதன் முதலாக உண்மையாகவே வருந்தினான்.

"சரி குடியை விடேலாட்டா, கடைசி அதை விட்டது போலை நடியும்."

"சரி அப்பிடிச் செய்யிறன். அது செய்யலாம்." என்றான் உற்சாகமாக.

"நீர் நடிச்சாலும், குடிச்சுட்டுவந்தாக் குடி மணக்கும். ஒண்டும் குடியாமல் வந்து சாந்தியோடை பேசிப் பழக வேணும்."

"சரி, முயற்சி செய்யிறன்" என்றவன் ஒரு கணம் யோசித்து விட்டு, "ஒரு ஐடியா மிஸ்ஸிஸ் ரங்கநாதன், இவள் அனாதைதானே? கேக்க ஆளில்லை. வலோற்காரமாகக் கலியாணத்தைச் செய்து கொண்டால் என்ன?" என்றான்.

"அப்பிடியும் செய்யலாம். ஆனா அப்பிடிச் செய்தா உமக்குத் தான் கஷ்டம். நெடுகச் சண்டையாயிருக்கும். அந்தக் கலியாணம் நிலைக்காது. இது இலங்கையல்ல. ஒரு பெண் தனிச்சும் வாழலாம். உங்கை எத்தனையோ பெண்கள் தனிச்சு வாழுதுகள். சாந்தி உன்னிட்டை இருந்து தப்பி ஓடப்பாப்பள். அதிலும் பாக்க, நான் சொன்ன வழி நல்லது தானே?"

"சரி முயற்சி செய்யிறன்"

"நேரமாகுது நானும் வெளிக்கிட வேணும்." என்று

எழுந்து நின்றாள் சுகிர்தராணி.

"எனக்கும் எத்தினையோ அலுவல்கள் இருக்கு. நானும் வெளிக்கிடுறன்." என்று நற்குணசிங்கமும் எழுந்தான்.

வந்த புதிதில்தான் சுகிர்தராணி சாந்தியை உள்ளே விட்டுப் பூட்டி விட்டுச் சாவியைத் தான் கொண்டு போனாள். இப்பொழுது அப்படி இல்லை; சாவியைச் சாந்தியிடமே கொடுத்துவிட்டுப் போவாள். இந்த ஏற்பாட்டில் ஒரு நன்மையையும் அவள் எதிர்பார்த்தாள்; நற்குணசிங்கம் வீட்டுப் பக்கம் வந்து சாந்தியுடன் பேசி அவளது மனதை மாற்றலாம். அவனை வலோற்காரம் செய்தாலும் சுகிர்தராணிக்குச் சந்தோஷமே.

தான் வந்தது பற்றியும் வீடு பூட்டியிருந்ததால் தான் சாந்தியிடம் பேச முடியாமல் போனது பற்றியும் நற்குணசிங்கம் சுகிர்தராணியிடம் சொல்லியிருந்தான். விஜயன் வந்து போனது பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது.

ஒரு நாள் சுகிர்தராணி இல்லாத நேரத்தில் விஜயன் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் சாந்திக்கு நாடி நரம்புகளிலெல்லாம் புது இரத்தம் பாய்வது போலிருந்தது. வழக்கமான பதிலைச் சொன்னாள்;

"நான் மிஸ்ரர் அன்ட் மிஸ்ஸிஸ் ரங்கநாதனைச் சந்திக்க வரேல்லை; உம்மைச் சந்திக்கத்தானன் வந்தான். கதவைத் திறந்தியளானால் ஆறுதலாக இருந்து பேசலாம்."

சாந்திக்கு அவனை உள்ளே அழைத்து வந்து கதை பேச ஆசையாக இருந்தது. அதே நேரத்தில், இதை சுகிர்தராணி அறிந்தால் என்ன சொல்வாளோ என்று பயமாகவும் இருந்தது. விஜயனை அவளுக்குச் சரியாகத் தெரியாவிட்டாலும் தனது இக்கட்டான நிலையை அவனுக்கு எடுத்துச் சொல்லலாம் என்று, உள்ளுணர்வு கூறியது. கடைசியாக, அவளது கதையை அனுதாபத்துடன் கேட்க ஒரு சீவன். அவளது உணர்ச்சிப் போராட்டம் முகத்தில் பிரதிபலித்தது.

"என்ன யோசிக்கிறியள்?" என்றான் விஜயன்.

"ஒண்டும் இல்லை" என்று சொல்லிக் கதவைத் திறந்து, "வாருங்கோ" என்றாள். விஜயன் உள்ளே வந்து கதிரையில் இருந்ததும் தானும் அவனுக்கு முன்னாலுள்ள ஒரு கதிரையில் இருந்தாள்

"சரி இஞ்சைவந்த கதையை விளக்கமாச் சொல்லுங்கோ!" சொன்னான்.

"அப்ப ஏன் கலியாணம் இன்னும் நடக்கேல்லை?"

"எனக்கு நற்குணசிங்கத்தைப் பிடிக்கேல்லை"

"நான் சொன்ன கதையாலையா?"

"நானே எல்லாத்தையும் கிச்சன். அவருக்கு வயதும் அதிகம்."

"இப்ப என்ன நடக்கப் போகுது?"

"நான் அவரைக் கட்ட மாட்டனெண்டு, சுகிர்தராணி அக்காவுக்குச் சொல்லிட்டன். அவ கட்டச் சொல்லி வற்புறுத்துறா. இல்லையெண்டா, நான் இங்கிலாந்து வாறதுக்கு அவர் சிலவழிச்ச ரண்டு லட்ச ரூபாயையும் தரட்டாம்."

"நீர் எப்பிடிக் குடுக்க முடியும்?"

"அது தான் என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை" என்றாள் கவலை தோய்ந்த குரலில்.

"சுகிர்தராணிக்கு என்ன சொன்னீர்?"

"ஒரு வேலை எடுத்துத் தாருங்கோ. உழைச்சுத் தாறன் எண்டன். அவ அதுக்குச் சம்மதிக்கேல்லை. கட்டட்டாம். உவரைக் கட்டுற நேரம், நான் திரும்ப யாழ்ப்பாணமே போகத் தயார். என்னை யார் அங்கை அனுப்பி வைப்பினம்?"

"அவரைக் கொண்டு காசைச் சிலவழிச்சுட்டுக் கலியாணம் கட்டாமல் இலங்கைக்குப் போறது நம்பிக்கைத் துரோகமில்லையயா சாந்தி?"

"நம்பிக்கைத் துரோகம்தான். ஆனா நான், நானாகக் கேட்டு வரேல்லை. இவைதானே அழைச்சது தங்களுடைய தேவைக்காக. உலகம் தெரியாத ஒரு இளம் பெண்ணை இப்பிடி ஏமாத்துறதும் பிழைதானே!"

"இப்ப என்ன செய்ய யோசிக்கிறியள்?"

"நான் செய்யக் கூடியது ஒண்டும் இல்லை. நற்குணசிங்கத்தைக் கட்ட மறுக்கலாம். அவ்வளவு தான்." என்றாள் தழுதழுத்த குரலில். கண்கள் கலங்கியிருந்தன.

விஜயனுக்குச் சாந்தியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இந்தக் குழந்தைப் பெட்டையை இப்படி ஏமாற்றி அழைத்து வந்து, சிக்கலில் மாட்டி வைத்து விட்டார்களே! இந்த மாதிரி எத்தனை யாழ்ப்பாணத்து இளம் பெண்கள் அக்கரைகள் பச்சை என்று நம்பி வந்து ஆபத்தில் மாட்டிக் கொள்கிறார்கள்? நிர்ப்பந்தத்தில் தமக்குப் பிடிக்காதவர்களுக்குக் கட்டி வைக்கப் படுகிறார்கள்.

இவளுக்கு உதவி செய்வோமா?

இந்த மூன்று ஆண்டுகளில் விஜயன் நிறையக் காசு உழைத்து வைத்திருக்கிறான். அவளை விடுவிப்பதற்கு வேண்டிய அளவு காசு

அவனிடம் இருக்கிறது. கொடுக்கலாம்; கொடுத்துச் சாந்தியை விடுதலை செய்தால், அவளுக்குப் பொருத்தமான ஒரு வேலை எடுத்துக் கொடுப்பதிலும் அதிக கஷ்டம் இராது; அவளே அந்தக் காசை உழைத்துத் தரக்கூடும்?

நான் காசு கொடுத்தாலும் அவர்கள் சாந்தியை விடுதலை செய்வார்களா? கல்யாணம் கட்டத்தான் வேண்டும் என்று நிர்ப்பந்திக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அதற்காகச் சுகிர்தராணி என்மீது கோபித்துக் கொள்ளவும் கூடும். பறவாயில்லை. அவையெல்லாம் பிறகு. முதல்லை சாந்தியைக் காப்பாற்றுவம்.

"சாந்தி, நானே அந்தக் காசை அவைக்குக் குடுக்கிறன். " என்று சொல்லிப் புன்னகைத்தான்

தனது செவிகளையே சாந்தியால் நம்பமுடியவில்லை. இந்த அன்னிய தேசத்தில் தனக்கு உதவ ஒரு சீவன் இருக்கிறதா? தனக்கும் விடுதலையா?

"நீங்கள் ஏன் இந்தக் காசைக் குடுக்கிறியள்?" என்றாள் தயங்கித் தயங்கி.

"ஏன் நான் குடுக்கக் கூடாதா சாந்தி?"

"அதல்ல, அதுக்குரிய காரணத்தை அறிவம் எண்டு கேட்டன்."

"அன்னிய நாட்டிலை ஒரு இக்கட்டான சூழ்நிலேலை மாட்டுப் பட்டு நிக்கிற ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு உதவி செய்யத்தான்!"

அந்தப் பதில் சாந்திக்குச் சற்று ஏமாற்றத்தைத் தந்தது. "சாந்தி நான் உன்னை விரும்புகிறேன். இந்தக் காசைக் குடுத்து நான் உன்னை என்னுடையவளாக்கப் போறன்." என்று சொல்லுவான் என்று எதிர்பார்த்தாளோ?

"விஜயன், இந்தக் கதையை நான் உங்களுக்குச் சொன்னன் எண்டு அறிஞ்சா சுகிர்தராணி அக்கா கோபிப்ப."

"நானாகவே முன் வந்து தாறது போலை அவவுக்குச் சொல்லுறன்."

"என்னாலை உங்களுக்கு வீண் சங்கடம். பணச் செலவு." என்றாள் சாந்தி சங்கடத்துடன்.

"இதென்ன பெரிய காசு! உது மாதிரி நான் எவ்வளவோ உழைப்பன். மனிசருக்கு மனிசர் உதவி செய்யாட்டாப் பிறகு மனிசராக இருந்தென்ன?"

# 11

விஜயன் உழைப்பில் மட்டும் தான் கண்ணாயிருந்தான். கலியாணத்தைப் பற்றி சிந்தித்தும் பார்க்கவில்லை. நிறைய உழைத்து மிச்சம் பிடித்து விட்டான்தான். கலியாணம் செய்து கொண்டால் செலவு ரட்டிப்பாகுமே!

இப்பொழுது இருக்கிற அறை போதாது. ஒரு சிறிய அப்பாட்மெண்டாவது எடுக்க வேணும். குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான்கள். இனி இரண்டு மூன்றானால் அது வேறு கரைச்சல்.

கலியாணம் கட்டுவதானாலும் யாரைக் கட்டுவது? வெள்ளைக்காறிச்சியள் வேண்டாம். அவளவேன்ரை போக்கு நமக்குச் சரிப்பட்டு வராது. வேறு சாதிக்காறியளானாலும் பொருத்தமாக வரவேண்டுமே!

அன்று சாந்தியைச் சந்தித்து விட்டு வந்த பொழுதுதான் முதன் முதலாகக் கலியாணம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான். சாந்தி எல்லா விதத்திலும் எனக்குப் பொருத்தமான பெண்தான். அழகு, இளமை படிப்பு எல்லாம் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக உலகமறியாத சின்னப் பெண். காசைக் கொடுத்து விட்டு அவளை அழைத்து வந்து, நானே கலியாணம் செய்து கொண்டாலென்ன?

சாந்தியிடம் தனக்கு இரக்கம் தான் ஏற்பட்டது போலிருந்தது விஜயனுக்கு. இப்பொழுது அது பற்றியே சிந்திக்கச் சிந்தித்துப் பார்க்க அது காதல் என்பது புரிந்தது. கல்யாண ஆசையும் உண்டாயிற்று.

எப்பொழுதோ கலியாணம் கட்டத்தானே வேணும்? சாந்தி எனக்கு மிகவும் பொருத்தமான பெண். அவளையே கட்டுவம். இதை சுகிர்தராணி விரும்பமாட்டாள்தான். என்னைத் தன்னுடைய வலைக்குள் போட முயல்பவள் இதை எப்பிடி வரவேற்பாள்? அவளைக் கவனிக்க முடியாது. அத்துடன் அவளிடம் இருந்து தப்புவதற்கும் இந்தக் கலியாணம் உதவி செய்யும்.

ஒரு நாள் திட்டமிட்டு வீட்டுக்குச் சென்று சுகிர்தராணியிடம் பேச்சுக் கொடுத்தான்.

" சாந்தியை இங்கிலாந்துக்குக் கொண்டுவர, எவ்வளவு காசு சிலவழிச்சிருக்கிறியள்? "

" ரண்டு லட்சம் ரூபாய் "

" நான் அந்தக் காசைத் தாறன். "

" நீங்களேன் தாறியள்? "

" நானே சாந்தியைக் கலியாணம் கட்டலாம் எண்டு பாக்கிறன். "

இந்தப் பதிலைக் கேட்டவுடன் சுகிர்தராணி அதிர்ந்து போனாள். அவளது முகம் இருண்டது. அப்பிடியானால் விஜயன் சாந்தியை விரும்புகிறானா? தான் அவனிடம் அந்தப் பழைய காதலைப் புதுப்பிக்க எடுத்த முயற்சி எல்லாம் தோல்வி!

" சாந்தி நற்குணசிங்கத்தைத்தானே கட்ட வந்தவள்? "

" அப்ப ஏன் இன்னும் கட்டேல்லை? "

" அவர் கலியாணத்துக்கு ஆயத்தமாக இல்லை. "

" அல்லது சாந்திக்குச் சம்மதம் இல்லையோ? "

" ஏன் அப்பிடிக் கேக்கிறியள்? "

" ரண்டு பேருக்கும் கண வயது வித்தியாசம். அவர் குடிகாறன்: கெட்ட நடத்தை உள்ளவர். உடம்பும் கெட்டுப் போச்சு... "

" விஜயன் உமக்கு எப்பிடி அதெல்லாம் தெரியும்? "

" தெரிஞ்சதிலைதான் சொல்லுறன். அதாலை சாந்தி அவரைக் கட்ட மறுத்திருக்கலாம். "

" நீங்கள் சாந்திக்கு இது பற்றிச் சொன்னியளா? "

" இல்லை. நான் ஏன் சொல்லுறன்? "

" நற்குணசிங்கம், ரங்கநாதனுடைய சொந்தக்காறன். அவர் தான் சாந்தியை எடுப்பிச்சது அவள் ஆரைக் கட்ட வந்தாளோ அவரைத் தான் கட்டவேணும். "

விஜயன் அதற்கு மேல் கதையை வளர்க்கவில்லை. வளர்த்தால் பிடி கொடுக்க வேண்டி நேரிடும். சுகிர்தராணி தானும் சாந்தியும் சந்திப்பதற்குத் தடை போடக் கூடும். சாந்தியை எங்காவது கொண்டு போய் ஒளிக்கலாம். வலோற்காரமாகக் கலியாணம் கட்டியும் கொடுக்கலாம். சாந்தியுடனான தொடர்பை துண்டிக்கக் கூடிய எதையும் செய்யக் கூடாது.

இந்த உரையாடலுக்குப் பிறகு விஜயன் சாந்தியைக் காதலிக்கிறானோ என்ற பயம் சுகிர்தராணிக்கு வலுத்து விட்டது: சாந்தியின் கலியாணத்தை விரைவாக முடித்துவிடத் தீர்மானித்துக் கொண்டாள். ஒரு நாள் இது பற்றிக் கணவனுடன் பேச்செடுத்தாள்.

" சாந்தி – நற்குணசிங்கம் கலியாணத்தை உடனடியாகச் செய்து வைக்க வேணும். இன்னும் ஏன் கடத்துவான்?"

" நற்குணசிங்கம் திருந்துவன் எண்டுதான் இந்தக் கலியாணத்துக்கு ஒழுங்கு செய்தன். அவன் திருந்துறதாக் காணேல்லை."

" கலியாணத்தைக் கட்டிக் குடுத்தாத் திருந்தக் கூடும்."

" நாங்கள் சிலவழிச்ச காசும் தரேல்லை."

" உழைச்சுத் தருவர்."

" நான் நினைக்கேல்லை சுகிர்தராணி. இவ்வளவு காலமும் தராதவன் இனியா தரப்போறான்?"

" அப்ப அவருக்குக் கலியாணம் கட்டி வைக்கேல்லையா?"

" சாந்தியும் அவனை விரும்பேலைப் போலை இருக்கு."

" என்ன விரும்பேல்லையா? அவளோடை பேசிப் பாத்தியளா?"

சாந்தியை முதல் முதலாகப் பார்த்த அன்றே 'இந்தக் குழந்தைப் பெட்டைக்கும், நற்குணசிங்கத்தாக்கும் சரிப்பட்டு வராது' என்று ரங்கநாதன் நினைத்துக் கொண்டார். வயது கொஞ்சமானால் பறவாய் இல்லை. முகத்தில் ஒரு முதிர்ச்சி கூட இல்லையே! 'உலகம் தெரியாத இந்தப் பிள்ளையை உலகத்தில் உள்ளதெல்லாவற்றையும் அனுபவித்து விட்டு நிற்கும் நற்குணசிங்கத்திற்குக் கட்டி வைப்பது பாவம்.'

ஆனால் தனது அபிப்பிராயத்தை அவர் யாரிடமும் கூறவில்லை. சுகிர்தராணியும் சாந்தியுமே தீர்மானித்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டார்.

சாந்தியைக் காட்டி, நற்குணசிங்கத்தைத் திருத்தலாம் என்று பார்த்தார். அவனும் திருந்துகிற வழியாக இல்லை. எனவே அவர் கலியாணத்திற்கு அவசரப்படவில்லை.

ஒரு நாள் சுகிர்தராணி வீட்டில் இல்லாத பொழுது சாந்தியே அவரிடம் வந்து, " நற்குணசிங்கத்தைக் கலியாணம் செய்ய எனக்கு விருப்பம் இல்லை. தயவு செய்து என்னை மன்னியுங்கோ!" என்றாள் குரல் தாழதழுக்க.

" ஏன் விருப்பம் இல்லை?"

சாந்தி காரணங்களைக் கூறி, அழாத குறையாகக் கெஞ்சினாள்.

" சரி கவலைப்படாதை பிள்ளை. நாங்கள் அப்பிடிச் செய்து வைக்கேல்லை!"

" அக்கா, நான் அவரைத்தான் கட்டவேணும் எண்டு வற்புறுத்துறா."

" சாந்தி பயப்பிடாதையும்! உம்முடைய விருப்பத்துக்கு மாறாக

உமக்குக் கலியாணம் நடவாது! சரிதானே!" என்று ரங்கநாதன் சிரித்தார்.

"சரி" என்று தலை ஆட்டினாளாயினும் சாந்திக்கு உள்ளூரப் பயமாகத்தான் இருந்தது. அன்னிய நாடு எல்லாரும் அன்னியர். தெரிந்த அக்காவே இப்பிடிச் செய்ய நினைக்கிற பொழுது, மற்றவர்கள் என்ன தான் செய்ய மாட்டார்கள்?

ரங்கநாதன் இதுபற்றித் தமது மனைவியிடம் எதுவும் சொல்லவில்லை. அவளாகவே வரட்டும் என்று காத்திருந்தார்.

"ஓம், ஒரு நாள் கேட்டன். சாந்தி சம்மதம் இல்லை என்டு சொன்னாள்." என்றார்.

"ஆட்டைக் கேட்டு ஆரும் ஆணம் காச்சுறதில்லை! இதுக்கெண்டு தானே வந்தவள்? இனி அவளை என்ன கேக்கிறது?" என்றாள் சுகிர்தராணி காரமாக.

"சுகிர்தராணி! நீ நல்ல உவமை சொல்லுறாய்! என்று சொல்லிச் சிரித்த ரங்கநாதன் "அந்தப் பிள்ளேன்ரை விருப்பம் இல்லாமல் ஒண்டும் செய்யக் கூடாது!" என்றார்.

"அப்ப என்ன? அவளை இப்பிடியே வைச்சுக் கொண்டிருக்கப் போறியளா?"

"அப்பிடி வலோற்காரமாகக் கலியாணம் செய்து வைக்கிறது ரண்டு பேருக்குமே நல்லதில்லை. அது நிலைக்காது!"

அவ்வளவில் கதையை விட்டு விட்டாள் சுகிர்தராணி.

'இவர் சொல்லுறதைச் சொல்லட்டும். கடைசிலை நான் நினைக்கிறது தானே நடக்கிறது.' என்று தீர்மானித்துக் கொண்டு, சுகிர்தராணி தனது திட்டத்தை நிறைவேற்ற வேறு வழிகளில் இறங்கினாள்.

நடந்ததை நற்குணசிங்கத்திடம் சொன்னாள். கதையைக் கேட்டதும் அவனுக்கு காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போகப் போகிறானே என்று பயம் வந்து விட்டது. அதே நேரத்தில் விஜயன் மீது ஆத்திரம் ஆத்திரமாகவும் வந்தது.

"அப்படியானால் ஆளையே அபேஸ் பண்ணிவிடுறன்." என்றான் ஆக்ரோஷமாக.

"என்ன செய்யப் போறியள்?"

"எனக்கு எத்தினையோ வகையான நண்பர்கள் இருக்கிறார்கள். கேட்டால் எதுவும் செய்து தருவார்கள்."

சுகிர்தராணிக்குப் பயம் வந்துவிட்டது. அவள் விஜயனை இழக்கத் தயாராக இல்லை. "சும்மா விசர் வேலையள் பாத்து, நீங்களும் ஆபத்திலை மாட்டிக் கொள்ளாதேங்கோ!" என்றாள்.

" அப்பிடி ஒரு ஆபத்திலும் மாட்டிக் கொள்ளாமல் கருமம் பாக்க எனக்குத் தெரியும். "

" அதை விட்டுட்டுக் கலியாணத்தைக் கெதிப்பண்ணுற அலுவலைப் பாரும். "

" அப்ப அவனை ஒருக்கா வெருட்டி விடுறன். பிறகு அவன் இதிலை தலையிடான். நான் கலியாணம் கட்டலாம். "

" சரி என்னவோ நடத்துங்கோ. என்னை இதிலை மாட்டி விடக் கூடாது! "

" இல்லை இல்லை. ரண்டாம் பேருக்கும் தெரியாமல் மிரட்டுவிக்கிறன் " என்று பலமாகச் சிரித்தான். அவன் என்ன செய்யப் போகிறானோ என்று சுகிர்தராணிக்குக் கொஞ்சம் கலக்கமாகத்தான் இருந்தது.

நற்குணசிங்கம் கோழை. காசுக்காகத்தான் போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டிருந்தான். அதனால் கொஞ்சப் பணம் சம்பாதித்தானாயினும், தானே அந்தப் போதைவஸ்திற்கு அடிமையாகி விட்டதால், சேர்த்த பணமும் போய்விட்டது. உடல் வலுவும் குன்றி விட்டது.

விஜயன் ஒரு காரி. சில வேளை தன்னை அடித்தாலும் அடித்து விடுவான் என்று பயந்து, தனது பயத்தையும் மறந்து, அவனுடன் கதை பேசி வெருட்டுவதற்காக கொஞ்சம் மது அருந்தி விட்டுத்தான், அவனது அறைக்குச் சென்றான்.

ஏதோ வேலையாக இருந்த விஜயன் நற்குணசிங்கம் வந்ததும் எழுந்து வரவேற்று இருக்க வைத்து, " என்ன விசேஷம்? " என்றான்.

" என்னுடைய பாதையில நீ குறுக்கிடுகிறாய் ! "

" என்ன குறுக்கீடு? எங்கை குறுக்கிடுறன்? " ஒன்றும் தெரியாதவன் போலக் கேட்டான் விஜயன்.

" நல்லா யோசிச்சுப் பார். "

" நீ விளக்கமாகச் சொல்லன். "

" எனக்காக யாழ்ப்பாணத்திலை இருந்து வந்திருக்கிற சாந்தியை நீ தட்டிக் கொண்டு போகப் பாக்கிறாய். "

" இல்லை. எனக்கு அப்பிடி ஒரு திட்டமும் இல்லை. "

" திட்டம் போட்டுட்டு, இப்ப நான் அறிஞ்சுட்டனெண்டு பயப்பிடுறாய் போலை? " ஏளனச் சிரிப்புச் சிரித்தான்.

" நான் ஏன் உனக்குப் பயப்பிடவேணும்? "

" சாந்தி வந்த செலவைத் தாறதாகவும், அவளை நீயே கட்டச் சம்மதம் எண்டும், மிஸ்ஸிஸ் ரங்கநாதனுக்குச் சொல்லியிருக்கிறாய்! "

"சாந்தி விரும்பினால் கட்டூறம் எண்டன். அவள் உன்னை விரும்பினால் நீயே அவளைக் கட்டு. இதுக்கு என்னிலை ஏன் கோபிக்கிறாய்?"

"விஜயன்! எனக்காக எடுப்பிச்ச பொம்பிளையை நீ கட்ட நினைக்கிறது பிழையல்லா?"

"இன்னொரு நாட்டிலை இருந்து அகதியாக வந்து தட்டத்தனிய நிக்கிற இளம் பெண்ணை வலோற்காரமாகக் கலியாணம் செய்யிறதும் பிழைதான்!"

"உனக்கு ஆர் சொன்னது வலோற்காரமாகக் கட்டப்போறனெண்டு? சாந்தீன்ரை பூரண சம்மதத்தோடைதான் நான் அவளைக் கலியாணம் செய்யப் போறன்."

"அப்ப கலியாணத்தைச் செய்யிறத்துக்கு என்னிட்டை ஏன் வந்தனி?" விஜயன் கிண்டலாகச் சிரித்தான்.

"நீ இதிலை அனாவசியமாகத் தலையிடுறாய்!"

"மிஸ்ரர் நற்குணசிங்கம்! நீர் கலியாணத்தைக் கட்டிட்டா, எனக்குத் தலையிட வாய்ப்பே இல்லையே! போய்க் கலியாணத்தைச் செய்யும். உமக்கும் சாந்திக்கும் எந்தவிதப் பொருத்தமும் இல்லை. அதாலை உமக்குப் பயமாயிருக்கு, அவள் என்னை விரும்பீடுவளோ எண்டு."

"இல்லை, இது எல்லாவிதத்திலும் பொருத்தமான கலியாணம் தான்; நீ இதிலை தலையிட்டுக் கெடுக்காதை!"

"நான் எப்பிடிக் கெடுக்க முடியும் மிஸ்ரர் நற்குணசிங்கம்!" மீண்டும் நக்கல் சிரிப்புச் சிரித்தான்.

"விஜயன்! நீ இதிலை தலையிட்டா, என்ன செய்வன் தெரியுமா?"

"தெரிய வேண்டிய அவசியமில்லை. இது சுதந்திர நாடு. இதிலை நானும் நான் விரும்பியதைச் செய்யலாம்; நீயும் நீ விரும்பியதைப் போய்ச் செய்!"

"நீ ஒரு அகதியாக இந்த நாட்டுக்கு வந்தவன்."

"நற்குணசிங்கம், நீயும் அகதியாகத்தான் வந்தவன்!"

"எனக்கு இந்த நாட்டுப் பிரஜா உரிமை இருக்கு. உனக்கு அதில்லை. படிக்கிறம் எண்ட சாட்டிலை வந்து பேருக்கு எங்கையோ பதிவு செய்திட்டு வேலை செய்து உழைக்கிறாய். உதை நான் அறிவிப்பன்."

"எதையும் அறிவிக்கலாம். எதுக்கும் நான் பதில் சொல்லுவன். ஆனா நீ செய்யிற சட்டவிரோதச் செயல்களும் எனக்குத் தெரியும்;

அதுகளை நான் அறிவிச்சா உன்னாலை பதில் சொல்ல முடியாது!"
விஜயன் வெற்றிப் புன்னகை பூத்தான்.

தான் செய்யும் சட்டவிரோதச் செயல்கள் விஜயனுக்குத் தெரியா தென்று நினைத்துக் கொண்டிருந்த நற்குணசிங்கம் கலவரமடைந்து " என்ன சொல்லுறாய்? நான் அப்பிடி ஒண்டும செய்யேல்லையே!" என்றான்.

"எல்லாம் எனக்குத் தெரியும்."

"விஜயன், எனக்கு எத்தினையோ நண்பர்கள் கையாட்கள் இருக்கிறார்கள். எதுக்கும் துணிஞ்சவங்கள். சொன்னா ஒரு நிமிஷத் திலை உன்னைத் தீர்த்துக் கட்டிடுவங்கள். கவனமாயிரு!"

"நான் எதுக்கும் தயார். நீ செய்யிறதைச் செய்து பார்!" என்று சொன்ன விஜயன் எழுந்து போய் நற்குணசிங்கத்தின் பக்கத் தில் நின்று "உது சொல்லத்தான் மினைக்கெட்டு இஞ்சை வந்தியா? சரி நீ இனி எழும்பிப் போகலாம்!" என்றான்!

அவன் தனக்கு அடித்து விடுவானோ என்று பயந்த நற்குணசிங்கம் விருட்டென்று எழுந்து, நடந்து கதவுக்குப் பக்கத்தில் நின்று, "புத்தி சாலித்தனமாக நடந்து கொள்!" என்று கூறிவிட்டு வெளியேறினான்.

## 12

விஜயனுக்கு நிறைய வேலை இருந்தது. காலையில் படிப்பு, மாலையில் வேலை.

உடல் உழைப்புத்தான்—மூட்டை தூக்குதல், பெட்டிகள் சாமான் களை அடுக்கி வைத்தல், கழுவித் துடைத்தல், தும்பு தூசி தட்டுதல், இப்படிப் பல. இரவு ஆறு மணி வரை வேலை. சில வேளைகளில் ஏழு எட்டு மணியும் செல்லும். நன்றாக வேலை செய்து களைத்துப் போய் அறைக்கு வந்தால் அடித்துப் போட்டது போலத் தூங்குவான்.

கடும் உடலுழைப்பு இல்லாமல் படித்தால் இன்னும் நன்றாகப் படித்துத் திறமாகப் பாஸ் பண்ணலாம் தான். ஆனால் படிக்கும் செலவை யார் தருவார்கள்? அது மட்டுமா? ஏனைய செலவுகள்...?

இந்த நாட்டில் மருத்துவச் செலவுக்கும் காசு குடுக்கவேண்டும்!

தேக சுகம் நன்றாக இருக்கும் வரை தான் இப்படி உழைக்கலாம். ஏதாவது நோய் நொடி வந்தால், வயது போனால், உழைக்கும்

வேகம் குறையும். வரும் காலத்தையும் கவனத்தில் கொண்டு உழைக்க வேண்டும்.

நிறைய உழைத்து விட்டான் என்றாலும், தனது வேகத்தைக் குறைத்துக் கொள்ளவில்லை விஜயன்;

நான் 'இலங்கைக்குத் திரும்பிப் போகப் போவதில்லை; இந்த நாட்டிலேயே வாழப்போகிறேன். கல்யாணம் செய்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, பின்பு எல்லோரும் இருக்க ஒரு வீடு வாங்கி ...

ஓ! இந்தச் செலவுகளுக்குத் தான் எல்லை ஏது? ஆசைகளும் தேவைகளும் பெருகப் பெருக, செலவுகளும் வளர்ந்து கொண்டே போகும்!

வேலைக் கடுமையிலும் களைப்பிலும் வேறு எதையும் நினைக்க தோன்றாது. காலையில் களைப்புக் குறைவாக இருக்கும் நேரத்தில் தான் சாந்தியின் நினைவு வரும்.

காலையில் செய்வதற்கும் பல வேலைகள் இருந்தன. தானே சமைத்துச் சாப்பிட வேண்டும். பாடக் குறிப்புகளைப் பார்க்க வேண்டும். இருந்தாலும் சாந்தியின் நினைவும் வரும்.

'வாழ்க்கையில் ஒரு முறைதான் காதல் பிறக்கும், என்று யாரோ சொன்னானாம். அல்லது ஏதாவது புத்தகத்தில் வாசித்தேனோ? —அனுபவத்தில் பிறக்காத விடயம் தெரியாத கூற்று.

பள்ளியில் படிக்கின்ற காலத்தில், ரீன் ஏஜ் ( Teen Age ) வயதில் வந்த முதல் காதல் பசுமரத்தாணிபோல மனதில் நன்றாகப் பதியத் தான் செய்தது. என்னை என்ன மாதிரி உலுக்கிவிட்டது அந்தக் காதல்! அந்தக் காதல் அத்திவாரத்தில் இருந்து என்னென்ன கற்பனை மாளிகைகள் எல்லாம் கட்டினேன்! எல்லாவற்றையும் சுகிர்தராணியே உடைத்தெறிந்து விட்டாள். அத்துடன் அந்தக் காதலும் போய்விட்டது. சுகிர்தராணி மீது ஆத்திரம் ஏற்பட்டதால், அந்தக் காதல் நினைவுகளை இலகுவாக மறக்க முடிந்தது.

இப்பொழுது என் உள்ளத்தில் மீண்டும் காதல் தோன்றி இருக்கிறதே! அன்னிய நாட்டிற்கு வந்து அனாதரவாக நிற்கும் ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு உதவ வேண்டும் என்ற அனுதாபத்தில் பிறந்த காதலானாலும் ஒரு காலத்தில் சுகிர்தராணி என் உள்ளத்தை ஆக்கிரமித்தது போல, இப்பொழுது சாந்தியின் நினைவு என் உள்ளத்தை ஆட்கொண்டுள்ளதே!

இது காதல் தான்! இல்லை என்றால் சாந்தியின் நினைவு அடிக்கடி வருவானேன்? வந்தால் அவளது எழில் உருவம் மனதை விட்டு அகலாது இருப்பானேன்?

அவளது பேச்சு, சிரிப்பு, குழைவு, இனிமை எல்லாமே என்னை மயக்குகின்றன. எனக்கும் வயது வந்து விட்டது. அவர்களுடைய

காசைக் குடுத்து விட்டுச் சாந்தியைக் கல்யாணம் செய்ய வேண்டியது தான்; உடனடியாகச் செயல்பட வேண்டும். இல்லையென்றால் ஏதாவது விபரீதங்கள் நடந்து விடும்.

நான் தீர்மானித்தால் மட்டும் போதுமா? சாந்தி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாளோ? நற்குணசிங்கத்தைக் கட்ட மறுப்பது வேறு; என்னைக் கல்யாணம் செய்வது வேறு. அவளும் யாரையாவது நினைத்துக் கொண்டிருக்கிறாளோ?

காதல் இல்லாமலா என்னுடன் இவ்வளவு காலமும் நெருங்கிப் பழகுகிறாள்? என்னைக் கண்டதும் அவளது கண்களில் ஒரு ஒளி வீசுகின்றது. இதழ்களில் புன்னகை மலர்கின்றது. ஓடி வந்து கதவைத் திறந்து, ஆவலாக வரவேற்று இருந்து கதை பேசுகிறாள்! தனது பிரச்சினைகள் கவலைகளைக் கூட என்னிடம் சொல்லி, ஆறுதல் பெற நினைத்திருக்கிறாள். சரி அடுத்த சந்திப்பின் போது கேட்டு விடுவோமே!

அடுத்த நாள் ரங்கநாதன் வீட்டிற்குச் சென்ற விஜயன்,

"ஒண்டுக்கும் பயப்பிடாதை சாந்தி! நான் எப்பிடியும் அவேன்ரை காசைக் குடுத்து, உன்னை என்னுடையவளாக்குவன்!" என்று உறுதியாகக் கூறினான்.

சாந்திக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை.

இவர் ஏன் இப்படிச் சொல்கிறார்?

கொஞ்சக் காசா? ரண்டு லட்சம்!

என்னையும் தன்னுடையவள் ஆக்குவாராமே!

இவரை நம்பலாமா?

"என்ன சொல்லுறியள் விஜயன்?" என்றாள் முகத்தில் வியப்புக் குறியுடன்.

"சாந்தி! உனக்கு ஆட்சேபனை இல்லையெண்டால், அவேன்ரை காசைக் குடுத்துட்டு, நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளப் போறன்." என்று மென்மையாகக் கூறிச் சிரித்தான் விஜயன்.

அந்த முகமும் சிரிப்பும் ஏமாற்றுபவையாகத் தெரியவில்லை. சாந்திக்கு நம்பிக்கை பிறந்தது. விஜயனைச் சந்தித்த முதல் நாளே ஏனோ சாந்திக்கு அவன் மீது ஒரு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

"நீங்கள் சொல்லுறது உண்மையா விஜயன்!"

"உனக்கு நான் ஏன் பொய் சொல்லப் போறன்? நீ என்ன சொல்லுறாய் சாந்தி?"

அவள் முகத்தை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று வந்த இந்த அதிஷ்டத்தை சாந்தியால் இன்னமும் நம்ப முடியாமல்தான் இருந்தது. மனதில் வியப்பு, திகைப்பு, மகிழ்ச்சி சந்தேகம் பயம்...

என்ன சொல்வதென்று தெரியாமல் சிறிது நேரம் மௌனமாய் இருந்து விட்டு "ஏன் என்னைக் கலியாணம் செய்யத் தீர்மானிச்சியள்?" என்றாள்.

"நான் உன்னைக் காதலிக்கிறன் சாந்தி! ஐ லவ் யூ!"

அவனது இதழ்களில் இளநகை பூத்து நின்றது.

அவள் எதிர்பார்த்த வார்த்தைகள் கடைசியாக விஜயனது வாயிலிருந்து உதிர்ந்து விட்டன. அவை அவள் காதில் தேன் வார்த்தன!

நிலத்தில் தான் நிற்கிறேனா?

அல்லது இறக்கை கட்டிப் பறந்து மேலெழுந்து, இந்த லண்டன் மாநகரத்து மாடிகளின் சிகரங்களை எல்லாம் தொட்டுத் தொட்டு, அதற்கு மேலேயும் எழுந்து, காற்றில் மிதந்து, முகில்களில் மூழ்கித் திளைத்து ...

இது கனவோ கற்பனையோ இல்லை, நிஜம்தான் என்பதற்கு அத்தாட்சியாக விஜயன் எதிரில் இருக்கிறான், புன்னகை மாறாத முகத்துடன்.

சாந்தி வானவெளியில் இருந்து இறங்கி வந்தாள்.

"அண்டைக்கு நீங்கள் இப்பிடிச் சொல்லேல்லையே! வேறை காரணமல்லோ சொன்னியள்?" என்றாள் மெல்லிய குரலில். மகிழ்ச்சியில் கண் இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன.

அண்டைக்கு நான் உன்னிலை அனுதாபப்பட்டன். ஆபத்திலை மாட்டுப்பட்டு நிக்கிற ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு உதவி செய்ய நினைச்சன். பிறகு வீட்டிலை போயிருந்து, வடிவா யோசிச்சுப் பாத்த பொழுதுதான், நான் உன்னைக் காதலிக்கிறன் எண்டது புரிஞ்சுது.

"எப்ப தொடக்கம் காதலிக்கிறியள்?" மகிழ்ச்சியின் ரேகைகள் ஓட, சாந்தியின் முகம் மலர்ந்திருந்தது. "உன்னைக் கண்ட பொழுதே காதலிக்கத் துவங்கிட்டன்." என்று சொல்லிச் சிரித்தவன் "ஏன் சாந்தி நீர் என்னைக் காதலிக்கேல்லையா?" என்றான்.

"விஜயன், நானும் உங்களைக் கண்ட நேரத்திலை இருந்தே காதலிக்கிறன்" என்று நாணம் கலந்த சிரிப்புச் சிரித்தாள் சாந்தி.

"இனி என்ன காசைக் குடுத்துட்டுக் கலியாணத்தைக் கட்ட வேண்டியது தானே!"

"விஜயன் என்னாலை உங்களுக்கு வீண் சங்கடமாப் போச்சு."

"இல்லைச் சாந்தி சந்தோஷம். இந்த நாட்டிலை எத்தினையோ

சாதிப் பெண்கள் இருக்கினம். ஆனா அவையளை எனக்குப் பிடிக் கேல்லை. உன்னைச் சந்திச்சத்தாலை தானே, எனக்கு மனதுக்குப் பிடிச்ச ஒரு பெண் கிடைச்சாள்?''

"நான் ஒரு அகதி."

"நானும் அகதி தானே சாந்தி. ரண்டொரு வரியம் முந்தி வந்த அகதி." சிரித்தான்.

"கலியாணத்தைக் கட்டிக் குடும்பம் நடத்தினாச் சிலவுகள்...?"

"நான் போதியது உழைச்சு வைச்சிருக்கிறன். சமாளிக்கலாம் எண்டதிலைதானே கலியாணம் கட்ட முடிவு செய்தனான். இப்ப இல்லாட்டாலும் எப்பவோ, யாரையோ கலியாணம் செய்து கொள் ளப் போறவன் தானே நான்? உன்னைச் சந்திச்சது என்னுடைய அதிஷ்டம்!"

"சுகிர்தராணி அக்கா எங்களுக்குத் தடை விதிச்சால் ...?"

"அதைத் தாண்டுறது நானல்லோ. ரங்கநாதன் அண்ணேட்டும் சொல்லுவன். அவர் ஒரு ஜென்ரில்மன். பிழையான கருமங்கள் செய்ய லேசிலை சம்மதியார்."

"அவரிட்டை நானும் சொல்லியிருக்கிறன். நற்குணசிங்கத்தைக் கட்ட முடியாதெண்டு. அவர் அனுதாபத்தோடை கேட்டார். கட் டாயக் கலியாணம் செய்து வைக்க மாட்டன் எண்டார். சுகிர்தராணி அக்கா தான் குழப்புறா."

"ஓம் சாந்தி, அவதான் காரணம்."

"என்னுடைய ஒன்றை விட்ட அக்காவாயிருந்தும், அவ ஏன் எனக்குத் துன்பம் செய்ய முயற்சிக்கிறாவோ எனக்குத் தெரியேல்லை."

"எனக்குத் தெரியும்."

"என்ன சொல்லுங்கோ" என்றாள் ஆவலாக.

தங்களது பழைய காதல் கதையையும் இப்பொழுது சுகிர்த ராணி தன்னைப் பழையபடி அவளது காதல் வலையில் சிக்கவைக்க முயல்வதையும் சொன்னான். வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள் சாந்தி.

சுகிர்தராணி விஜயனுடன் பழகிக் கொள்ளும் முறையில் ஏற்கனவே சற்றுச் சந்தேகம் கொண்டிருந்தாள் சாந்தி. அவனுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவது, அவனது பகிடிகளுக்கு அநாவசியமாக விழுந்து விழுந்து சிரிப்பது, அவனை அடிக்கடி வீட்டுக்கு வரும்படி அழைப்பது, எல்லாவற்றையும் சாந்தி கவனித்திருக்கிறாள். எல்லாமே சற்று மிகையாகத்தான் பட்டன. இருந்தாலும் 'லண்டன் மாநகரல்லவா? அப்படித்தான் பழகுவார்கள்' என்று தனக்குத்தானே சமாதானமும்

சொல்லிக் கொள்வான்: ஏன், இலங்கையில் கூட, சமூக பழக்க வழக்கங்களில் எத்தனையோ மாற்றங்கள் வந்துவிட்டனவே!

இப்பொழுது விஜயனது கதையைக் கேட்ட பொழுது எல்லாமே ஓடி வெளிச்சது சாந்திக்கு. ஓ, இதுவா சங்கதி? இதனால்தானா சுகிர்தராணி அக்கா விழுந்து விழுந்து... என்ன இருந்தாலும் சுகிர்த ராணி அக்கா கணவனுக்கு — அதுவும் அந்த நல்ல மனிதருக்கு இப் பிடித் துரோகம் செய்ய நினைக்கக் கூடாது!

சுகிர்தராணி அக்கா, சாந்தியின் மதிப்பில் ஒரு படி இறங்கி விட்டாள்.

"இதுக்கு உங்களுடைய பதில் என்ன?"

"அது தான் சொன்னனே, இன்னொருத்தனுடைய மனைவி யோடை நான் காதல் செய்ய விரும்பேல்லை. அதோடை இது ரங்கநாதனுக்குச் செய்யிற பெரிய துரோகம் இல்லையா?"

"ஓம்"

"என்ன சந்தேகமாயிருக்கா? இப்படியும் ஒருத்தன் சந்தர்ப்பத் தைத் தவற விடுவானா? எண்டு யோசிக்கிறியளா?"

"இல்லை, இல்லை."

"நான் தான் உன்னைக் காதலிக்கிறனே சாந்தி. விளங்கேல் லையா?"

"விளங்குது விஜயன். நல்லா விளங்குது" இருவரது சிரிப்புக் களும் சேர்ந்து ஒலித்தன.

சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டு "சாந்தி உமக்கு எந்த நேரமும் வீட்டுக்குள்ளை அடைபட்டுக் கிடக்க அலுக்கேல்லையா?"

"அலுப்போ, சரியான அலுப்பு! நேரமே போகுதில்லை!"

"இந்த லண்டன் சிற்றியைச் சுத்திப் பாக்க உமக்கு ஆசை இல்லையா?"

"ஆசையோ? கொள்ளை ஆசை! எப்பிடிப் போறது? ஆர் கூட்டிட்டுப் போவினம்?"

"நான் கூட்டிட்டுப் போறன். வாறீரா?"

விஜயன் அப்படித் திடீரென்று அழைப்பு விட்டது சாந்திக்கு அதிர்ச்சியாகவும் அதே வேளை மகிழ்ச்சியாகவும் இருந்தது. "எப்பிடிப் போறது விஜயன்? சுகிர்தராணி அக்கா அறிஞ்சா?"

"அதைப் பற்றிப் பயப்பிடாதையும். என்னோடை வரச் சம்மதமா?"

"நான் உங்களோடை வரச் சம்மதமெண்டு எப்பவோ சொல்லீட்

டளே!" சாந்தியின் முகம் நாணத்தில் சிவந்து, புன்னகையில் மலர்ந்தது.

"சரி நாளைக்கு ஆயத்தமாயிரும்; நான் வந்து கூட்டிகூட்டுப் போறன்."

"சுகிர்தராணி அக்காவுக்குத் தெரிய வந்தா...?"

"அவவுக்கு நான் மறுமொழி சொல்லுறன்."

"விஜயன், நீங்கள் வந்து மறுமொழி சொல்லுறதுக்கிடையில அவ என்னைத் திண்டு தண்ணி குடிச்சிடுவ."

இல்லை சாந்தி அவ அப்பிடிச் செய்யமாட்டா. நான் வந்து கூட்டிகூட்டுப் போனதெண்டதை அறிஞ்சா, நாங்கள் காதலர்கள் எண்டதை ரங்கநாதனும் மனைவியும் அறிவினம். அதோடை சுகிர்தராணி தன்னுடைய கெட்ட எண்ணங்களையும் கைவிடக் கூடும். நற்குணசிங்கமும், இனிச் சரிவராதெண்டு உன்னைக் கட்டுற ஆசையை விடக் கூடும். நாங்கள் காதலர்கள் எண்டதை இந்த மாதிரி மற்றவைக்கு அறிவிப்பம்."

"எனக்கு என்னவோ பயமாயிருக்கு."

"பயப்பிடாதை சாந்தி. எல்லாத்துக்கும் நான் பொறுப்பு!"

"சரி வாறன்." என்றாள் சாந்தி தயக்கத்துடன்.

அப்பொழுதே நெஞ்சம் காதல் கீதம் பாடத் துவங்கியது.

## 13

ஒவ்வொரு கணமும் விஜயனை எதிர்பார்த்துக் கொண்டு, கண்கள் ரோட்டில் பதிய மேல்மாடி பல்கனி சுவரில் சாய்ந்து நின்றாள் சாந்தி. வீதியால் வரிசை வரிசையாகக் கார்கள் பறந்து கொண்டிருந்தன. புத்தம் புதிய பளபளக்கும் கார்கள். கண்ணுக் கெட்டிய தூரம் வரை லண்டன் மாநகரின் மஞ்சுதோய் மாடிகள் தெரிந்தன. காலை பத்து மணி. இருந்தாலும் சுடாத இளம் வெய்யில்.

திடீரென்று ஒரு கார் அவர்களது மாடி வீடுகள் பக்கம் வந்து நின்றது. சாந்தி கண்களைத் தீட்டிக் கொண்டு பார்த்தாள். விஜயன் கார் ஸ்ரெயறிங் வளையத்தைப் பிடித்த படியே வெளியே தலை

நீட்டி அவளைப் பார்த்துக் கை காட்டிச் சிரித்தான். அவளது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட சிரிப்பு அது. அவர்களது கண்கள் சந்தித்துக் கொண்டன. சாந்தியின் உள்ளத்திலும் உடலிலும் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. மாடிப் படிகளைத் தாவி ஓடிச் சென்று விஜயனுக்குப் பக்கத்தில் நிற்க வேண்டும் போல உள்ளம் குறுகுறுத்தது.

அவசரப்படாதே. அவன் தான் இரண்டு நிமிடங்களில் மேலே வரப்போகின்றானே!

காரைப் பாக் செய்து விட்டு, விஜயன் மேலே வந்தான். எந்த வித ஒப்பனையும் செய்து கொள்ளாமல் எளிமையான தோற்றத்தில் நின்றாலும் சாந்தி அழகாகத்தான் இருந்தாள்; ஆனால் அவளை அந்தக் கோலத்தில் பார்க்க விஜயனுக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது.

"வெளிலை உலாத்தக் கூட்டீட்டுப் போக வாறன் எண்டு சொல்லீட்டுப் போனனே. என்ன சாந்தி இப்பிடி நிக்கிறாய்?"

"நீங்கள் வருவியளோ எண்டு சந்தேகம், விஜயன். அதோடை அக்கா அறிஞ்சா என்ன சொல்லுவவோ எண்டு பயம்."

"நான் உனக்குச் சொன்ன சொல் தவறுவனா? சுகிர்தராணி எதையும் சொல்லட்டும். கெதியா வெளிக்கிட்டு வா."

உள்ளே ஓடினாள் சாந்தி. அவளது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்த படியே வரவேற்பறையில் உள்ள ஒரு குஷன் நாற்காலியில் சாய்ந்திருந்தான் விஜயன்.

சாந்தி வந்தாள். றோஸ் நிறத்தில் பூக்கள் போட்ட பச்சை நிற ஃபுறெக். நீண்ட தலைமயிரை வாரி இரட்டைப் பின்னலாகப் போட்டிருந்தாள். அன்ன நடை பயின்று வந்தவள் விஜயனுக்கு முன்னால் நின்று கண்களால் அவனை அழகாகப் பார்த்துப் புன்னகை செய்தாள். அவளது உடலை இறுகப் பிடித்திருந்த ஃபுறொக்கில் மேலும் மெல்லியதாகத் தெரிந்த அவளது இடையை இரண்டு கைகளாலும் பிடித்து விடலாம் போல இருந்தது விஜயனுக்கு. அவளை அப்படியே அள்ளிக் கொள்ள கைகள் துடித்தன.

"சாந்தி உன்னை உந்தக் கோலத்திலை பாக்கப் பள்ளிக்கூடத்திலை படிக்கிற பெட்டை போலை இருக்கு" என்று சிரித்தான்.

"பல்கலைக் கழகம் கிடைச்சிருந்தா, இப்ப படிச்சுக் கொண்டு தானே இருப்பன்?"

"ஏன் லிப்ஸ்ரிக், கண்ணுக்கு மை ஒண்டுமில்லை?"

"பழக்கமில்லை." என்றாள் புன்முறுவலுடன்.

"இந்த நாட்டிலை அதெல்லாம் கட்டாயம்."

"இந்த நாட்டிலை தொடர்ந்து இருந்தாப் பிறகு பழகுறன்."

"தொடர்ந்து இராமல், வேறை எங்கை போய் போறாய்? சரி வா, காறுக்குப் போவம்."

லிஃப்ற்றில் வேறு ஆட்களும் இருந்ததால், சாந்தி விஜயனுடன் நெருங்கி நிற்க வேண்டியதாயிற்று. அவளுடைய தலை தனது காதளவில் இருப்பதை அவன் கவனித்தான். லிஃப்டின் மஞ்சள் பல்ப் வெளிச்சத்தில் அவள் தங்கப் பதுமையாகக் காட்சியளித்தாள். அவளது ஸ்பரிசம் அவனுக்குக் கிளுகிளுப்பூட்டியது. சாந்திக்குக் கீழே தரை இறங்குவதாகப்படவில்லை. புஷ்பக விமானத்தில் விஜயனுடன் ஏறி, மேலே, மேலே, மேலே பறப்பதாக உணர்ந்தாள்.

காரில் ஏறியதும் விஜயன் முன் கதவைத் திறந்து விட்டு "ஏறு சாந்தி" என்றான். அவள் ஏறிப் அவனுக்குப் பக்கத்தில் இருந்ததும் கார் பிய்த்துக் கொண்டு ஓடத் தொடங்கியது.

சாந்திக்குக் கார் ஓட்டம் அவ்வளவு பழக்கமில்லை. யாழ்ப்பாணத்தில் ஆசுப்பத்திரிக்கு அம்மாவைக் கொண்டு போக ஒரு முறை ஏஃபோட்டிக் கார் ஒன்றில் ஏறியிருக்கிறாள். லண்டனில் ரங்கநாதனும் மனைவியும் அவளைத் தங்களது காரில் ஏற்றி வீட்டுக்கு அழைத்து வந்தனர்; பின்பு ஒரு நாள் எங்கோ உலாவக் கூட்டிச் சென்றனர். அவ்வளவுதான் அவளது கார் ஓட்டம். இப்பொழுது புத்தம் புதிய காரில் லண்டன் மாநகரில் ஓடுகிறாள், அவளது மனதைக் கவர்ந்த விஜயனுக்குப் பக்கத்தில் அமர்ந்து. உல்லாசப் பிரயாணம்தான். ஆனால் அவளது உள்ளத்தில் பயம், பதட்டம், மகிழ்ச்சி காதல் எல்லா உணர்ச்சிகளும் அலைமோதிக் கொண்டிருந்தன.

சாந்திக்கு தனது கெட்டித்தனத்தைக் காட்ட வேண்டும் என்பதற்காக, விஜயன் வழக்கத்திலும் பார்க்க வேகமாகக் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். மற்றக் கார்களும் வாகனங்களும் பின்நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. விஜயன் நெளிந்து வளைந்து காரை லாவகமாக வெட்டி எடுத்து மற்றக் கார்களை முந்திக் கொண்டு ஓடியது சாந்திக்குக் கிளு கிளுப்புக்குப் பதில் கலக்கத்தையே ஏற்படுத்தியது. "எனக்குப் பயமாயிருக்கு. கொஞ்சம் மெதுவாப் போங்கோ" என்று சொல்லவும் பயமாக இருந்தது. விஜயன் தன் பக்கம் கவனத்தைத் திருப்ப கார் எதிரில் வரும் வாகனத்துடன் மோதிவிட்டால்...?

"என்ன சாந்தி பேசாமல் இருக்கிறாய்?"

"விஜயன், நீங்கள் உவ்வளவு வேகமாகப் போறது எனக்குப் பயமாயிருக்கு. தயவு செய்து கொஞ்சம் மெதுவாப் போங்கோ!"

"இதெல்லாம் எனக்குப் பழக்கம்." என்ற விஜயன் சிரித்தபடியே காரின் வேகத்தை இன்னும் கொஞ்சம் கூட்டினான்.

"எனக்குப் பழக்கமில்லை. விஜயன் பிளீஸ்!" என்று கெஞ்சவே அவன் காரின் வேகத்தைச் சற்றுத் தணித்தான். இப்பொழுதுதான் சாந்தி கார்ச் சவாரியை அனுபவிக்கத் தொடங்கினாள்.

"இப்ப எங்கை போறம்?"

"நீ சொல்லுற இடத்துக்குப் போவம்."

"எனக்கு இந்த நாட்டிலை ஒரு இடமும் தெரியாது."

"முதல்லை ஒரு மியூசியத்துக்குப் போவம்: அரும்பொருள் காட்சியகம். உலகின் எத்தினையோ நாடுகளிலை இருந்த கலைச் செல்வங்களையெல்லாம் கொண்டு வந்து வைச்சிருக்கிறாங்கள். பக்கத்திலை ஒரு பாக் இருக்கு. மரங்கள் பூஞ்செடியள். உலா வரலாம்."

"எனக்கென்ன தெரியும்? உங்களுக்குப் பிடிச்சா எனக்கும் சரி."

இங்கிலாந்து நாட்டிற்கு வந்ததிலிருந்து அந்த நாட்டின் பிரமாண்டமான கட்டடங்களையும் விசாலமான நீண்ட வீதிகளையும், அழகு கொஞ்சும் பூங்காக்களையும் பார்த்துப் பிரமித்திருக்கிறாள் சாந்தி. இந்த நகரைச் சுற்றிப் பார்க்க மாட்டோமா? இதன் ஒரு பகுதியைப் பார்க்கவே எத்தனை நாட்கள் எடுக்கும். இதையெல்லாம் யார் கூட்டிக் கொண்டு போய்க் காட்டப் போகிறார்கள்? என்றெல்லாம் எண்ணி ஏங்கியிருக்கிறாள். அந்த வாய்ப்பு இவ்வளவு விரைவாக வலியத் தேடி வரும் என்று அவள் கனவு கூடக் காணவில்லை. இந்த உல்லாசப் பயணத்தினால் ஏற்படப் போகும் சங்கடங்களையும் அவள் எண்ணிப் பாராமல் இல்லை. ஆனால் அந்தப் பயத்தை மூளையின் ஒரு மூலையில் ஒதுக்கி விட்டு, காதலனோடு காரில் போகும் அந்தக் கணத்தின் இன்பத்தை, 'திறிலை' அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

சாந்தியைச் சந்தித்ததிலிருந்து. — அவள் மீது காதல் கொண்டதிலிருந்து அவளை அழைத்துக் கொண்டு லண்டன் மாநகரம் முழுவதையும் அவளுக்குக் காட்ட வேண்டுமென்று, விஜயனுக்கு ஆசை ஆசையாக வந்தது. தனது காரில் அவளை ஏற்றிச் சென்று பாக்குகள், மியூசியங்கள், பட மாளிகைகள், நாடக அரங்குகள், பெரிய பெரிய கடைகள் என்று அவளுக்குக் காட்ட வேண்டும். அவள் அவற்றைப் பார்த்து, மூக்கின் மேல் விரலை வைத்து ஒரு குழந்தைப் பிள்ளைத்தனத்துடன் வியப்பதைத் தான் பார்த்து மகிழ வேண்டும்.

பெரிய பெரிய கடைகளுக்கு அவளை அழைத்துச் சென்று அழகான ஆடைகளை அவளுக்கு வாங்கிக் கொடுத்து. அவள் அவற்றை அணிந்து வர அந்த அழகுக் கோலத்தைத் தான் பார்த்து மகிழ்ந்து. அவளைக் ஹோட்டல்களுக்கும் இன்களுக்கும் அழைத்துச் சென்று வெள்ளைக்காரர்கள் சாப்பிடும் சத்துள்ள சுவையான உணவு வகைகளை இருவருமாக உண்டு மகிழ்ந்து, கதை பேசிச் சிரித்து இன்னும் இப்படி எத்தனையோ ஆசைகள். அந்த ஆசைக் கனவுகள் இன்று முதல் உண்மையாகப் போகின்றன.

முதலில் ஒரு ஆடைகள் விற்கும் நிலையத்திற்குச் சாந்தியை அழைத்துப் போனான் விஜயன். அந்தப் பிரமாண்டமான கட்டடத்தில் எங்கு பார்த்தாலும் தைத்த ஆடைகள். பருத்தி, ரெறிலின், நைலோன், நைலெக்ஸ், சரிகை கம்பளி. இன்னும் இனம் தெரியாத எத்தனையோ வகைகள். கண்ணாடிப் பெட்டிகளில், பிளாஸ்டிக் கவர்களில் வெட்டை வெளியில் தொங்கிக் கொண்டு, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்த அந்த ஆடைக் குவியல்களைப் பார்த்த சாந்தி "இது தான் நீங்கள் சொன்ன மியூசியமா?" என்றாள்.

அவளது அந்தக் குழந்தைப்பிள்ளைத் தனமான கேள்வி விஜயனுக்கு மகிழ்வூட்டியது. "இல்லைச் சாந்தி இது ஒரு தைத்த ஆடைகள் விற்பனை நிலையம்" என்று அவளைப் பார்த்து லேசாகச் சிரித்தான்.

"என்னை ஏன் இஞ்சை கூட்டியந்தியள்?"

"உனக்கு ஒரு அழகான சட்டை வாங்கித்தர"

"இந்தச் சட்டை அழகாய் இல்லையா?" என்று தான் அணிந்திருந்த சட்டையைத் தொட்டுக் காட்டினாள் சாந்தி.

"உது அழகுதான் சாந்தி. ஆனா இலங்கை ஸ்ரைல். இந்த நாட்டு நாகரிகத்துக்கு ஏற்ற அழகான துணியிலை தைக்கப்பட்ட அழகான சட்டை வாங்க வேணும்."

"விலைகூட வருமே விஜயன்."

"நான் அணிஞ்சிருக்கிற உடுப்பைப் பார். இதுக்கு பொருத்தமாக—மாச்சாக, நீயும் ஆடை அணிய வேண்டாமா? அதுதான் ஃபாஷன்."

விஜயனை முதன் முதலாகச் சந்தித்ததிலிருந்து அவனது அழகிய முகம் தான் சாந்தியின் மனத்திரையில் நிற்கிறது. மெல்லிய உயர்ந்த உடம்பு. கூர் மூக்கு, அடர்ந்த புருவங்கள் எப்பொழுதும் சிரிக்கும் கண்கள், நன்றாக வாரிவிடப்படாமல் பறந்து கொண்டிருக்கும் தலைமயிர்—எதையும் அவளால் மறக்க முடிவதில்லை. இப்பொழுதுதான் முதன் முதலாக அவனது உடையைக் கவனித்தாள்.

பிறவுண்நிற சூட் அவனது மேனி நிறத்துடன் இழைந்திருந்தது. அளவாக வெட்டித் தைக்கப்பட்ட அந்த உடை அவனது உயரத்தையும் பருமனையும் சற்றுக் கூட்டிக் காட்டிற்று. மெல்லிய கோடுகள் ஓடும் ரெறிலின் சேட், அழகான ரை. விஜயன் அழகானவன் மட்டுமல்ல, நாகரிகமானவன். வெள்ளைக்காரரது ஸ்ரைலை அப்படியே பின்பற்றியிருக்கிறான். அவனது உடைக்குத் தனது உடை மாச் இல்லைத்தான்.

தனது அழகையும் உடையையும் சாந்தி பார்த்து ரசிக்கிறாள்

என்பதை உணர்ந்து கொண்ட விஜயன் லேசாகப் புன்னகைத்து "சாந்தி நீ விரும்பிய ஒரு சட்டையை எடு" என்றான்.

"என்னாலலை உங்களுக்கு வீண் செலவு" என்று தயங்கினாள்.

"வாழ்க்கை முழுக்க உன்னை வைச்சுக் காப்பாற்றப் போறனே. இதுக்குத் தயங்குறியே சாந்தி. எடு. விரும்பியதை எடு. எடுத்து அதை அணிஞ்சு கொண்டு என்னோடை வரவேணும்."

"என்ன விஜயன் இந்த உடுப்பிலை என்னோடை வர, உங்களுக்கு அவமானமாயிருக்கா?"

"இல்லை சாந்தி. புதிய உடுப்பிலை உன்னோடை வர எனக்கு ஆசையாயிருக்கு." சிரித்தான்

"உடுப்பை எங்கை மாத்துறது?"

கடையிலையே இடம் இருக்கு. அணிஞ்சுகொள். உந்த உடுப்பைக் காறுக்கை போட்டாக் கிடக்கும்.

இருவருமாகத் தேடி பூ வேலைப் பாடுகள் செய்த ஒரு றோஸ் நிறச் சட்டையைத் தெரிவு செய்தனர். அதை அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்த்த பொழுது தனது அழகை சாந்தியாலேயே நம்ப முடியவில்லை. கதிர்தராணியின் உடைகளைப் பார்த்து ஏங்கியவளுக்கு இப்பொழுது அதே மாதிரி ஒரு சட்டை கிடைத்திருக்கிறது. புதிய உடையில் கண்ணாடி அறையில் இருந்து நடந்து வந்த சாந்தி, ஒரு தேவதை போலக் காட்சியளித்தாள் விஜயனது கண்களுக்கு. அவளை அப்படியே ஒரு குழந்தையைப் போல வாரி அள்ளிக்கொள்ள வேண்டும் போல இருந்தது அவனுக்கு.

காரில் போகும் பொழுது. அவளது தோள்மீது ஒரு கையைப் போட்டுக் கொண்டு டிறைவிங் செய்தான். சாந்திக்கு அவனது செய்கை பிடித்திருந்தாலும் வழிமீது இருக்கும் அவனது கவனத்தைத் தனது கதை திருப்பி விடுமோ என்ற பயத்தில் அதிகம் பேச்சுக் கொடுக்காதிருந்தாள்.

## 14

அது ஒரு பிரமாண்டமான தொல்பொருட் காட்சியகம், சிற்பங்கள், ஓவியங்கள், தொல் பொருள்கள், இசைக் கருவிகள், நூல்கள் என்று பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. விஜயனும் சாந்தியும் முதலில் சிற்பக் கட்டடத்தினுள் நுழைந்து கை கோர்த்தபடி ஒவ்வொரு சிற்பமாக பார்த்துக் கொண்டு சென்றனர்.

சாந்திக்கு சிற்பக் கலைபற்றி எதுவுமே தெரியாது. விஜயனுக்குக் கொஞ்சம் தெரியும். ஆனால் அந்தத் துறையில் அவனுக்கு அக்கறை இல்லை. இங்கிலாந்திற்கு வந்த நாள் தொடக்கம் படிப்பதிலும், தொழில் நுட்பங்களை அறிவதிலும், உழைப்பதிலும் தான் கவனம் செலுத்தினானே தவிர கலை பண்பாடு பற்றி அவ்வளவு அக்கறைப்படவில்லை. இப்பொழுது சாந்திக்குக் காட்டுவதற்காகத்தான் முதல் முதலாக ஒரு மியூசியத்திற்கு வந்திருக்கிறான்.

கிரேக்கம், றோம், மத்திய கிழக்கு, இந்தியா, இந்தோனேசியா, பர்மா, அமெரிக்கா, தென்-ஆபிரிக்கா என்று பலநாட்டுச் சிற்பங்களும் அங்கு வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இருவருக்குமே அவற்றை இனம்கண்டு ரசிக்கும் திறமை இல்லை. இருந்தாலும் அவற்றின் கீழ் எழுதப்பட்டிருந்த வாசகங்களைக் கொண்டு அவற்றை இனம் கண்டு விளங்கிக்கொண்டனர்.

''எல்லா நாட்டுச் சிற்பங்களும் இருக்கே?'' என்றாள் சாந்தி.

உலகத்திலேயே மிகப் பெரிய சாம்பிராச்சியத்தை வைச்சிருந்தவங்களல்லா ஆங்கிலேயர்? அதாலை உலகத்தின் எல்லாப் பகுதிச் சிற்பங்களையும் கொண்டந் திட்டாங்கள்.''

''ஐரோப்பிய நாட்டுச் சிற்பங்களும் இருக்கு''

''நட்புறவு நாடுகள் தானே? குடுத்து வாங்கியிருக்கலாம்!

''இந்தியச் சிற்பங்கள் தான் அதிகம் காணப்படுது''

''பண்டைய இந்தியா, சிற்பக்கலைகளுக்குப் பெயர்போன நாடுதானே? ஆற்றங்கரை, குளத்தங்கரை, வயல்கரை, மலை உச்சி எங்கை பார்த்தாலும் கோயில்கள் தானே? கோயில்கள் நிறையச் சிற்பங்கள்.''

'' இலங்கைச் சிற்பங்களைக் காணேல்லை ''

அந்த நாளையிலை இலங்கையிலை கோயில்கள் குறைவுபோலை''

''திருகோணமலை கோணேசர் கோயில் இருந்ததாமே?''

''அதைத்தான் போர்த்துக்கீசர் இடிச்சுக் கடலுக்கை போட்டிட்டாங்கள். சிற்பங்களெல்லாம் கடலுக்கை. அந்தக் கற்களைக் கொண்டுதான் திருகோணமலையிலை பிறடெரிக் கோட்டையைக் கட்டினாங்கள்''

''புத்த சமயச் சிலையை அதிகம் காணேல்லை.''

''புத்தசமயச் சிலையள் குறைவு. எல்லாமே புத்தர்சிலைதான். சிற்பக் கலைக்கு இந்து சமயத்தைக் கேட்டுத்தான்! மனிதர், தேவர், முனிவர், மிருகங்கள், பாம்புகள், பறவைகள், எல்லாத்தையும் சிற்பங்களாகச் செதுக்கி வைச்சிருக்கிறாங்கள் கோயில்களில்.

கண்ணிலை கண்டது, தாங்கள் நினைச்சது கற்பனை செய்தது எல்லாத்தையும் சிற்பமாகச் செதுக்கி இருக்கிறாங்கள் போலை'' என்று சாந்தி சிரித்தாள்.

அடுத்து ஓவியப் பகுதிக்குள் நுழைந்தனர். "எல்லாம் வெள்ளைக் காறற்றை படங்களாயிருக்கே" என்றாள் சாந்தி. "வெள்ளைக்காறரல்ல, வெள்ளைக்காறிச்சியள் எண்டு சொல்லும்" என்று சிரித்தான் விஜயன்.

"ஓவியங்களிலை பலநாட்டு ஓவியங்களையும் காணேல்லை. குறைவாயி ருக்கு"

"உலகத்திலை பழங்காலத்திலை சிற்பங்களைவிட ஓவியங்கள் குறைவு தான். கல்லிலை எதையும் செதுக்கிவிடலாம்; ஓவியங்கள் நீட்ட வர்ணங் கள் வேணும். அதிலும் அழியாத வர்ணங்கள் எண்டாத்தான் நீடித்து நிற்கும்."

"எங்கடை நாட்டிலை ஓவியங்கள் இல்லையா?"

"இந்தியாவிலை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலை இருக்கு. இலங்கேலை சிகிரியாவிலை இருக்கு. ஆயிரக்கணக்கான வருஷங்களாகியும் அந்த வர்ணங்கள இன்றும் மங்காமல் இருக்கிறது அதிசயம்தான்."

"சரி, சரி, ஓவியம் பாத்தது காணும். வாருங்கோ போவம்"

"ஏன் சாந்தி, சுகிர்தராணி அக்காவுக்குப் பயமாயிருக்கா?"

"பயப்பிடாமல் முடியுமா விஜயன்?"

"எந்தப் பெரிய பிரித்தானிய சாம்ராச்சியமே முடிவுக்கு வந்துட்டுது. சுகிர்தராணி அக்காவின்றை அதிகாரம் என்ன? இன்னும் கொஞ்சநாளைக்குத் தான் பயப்படாதையும் சாந்தி! வந்தனாங்கள் எல்லாத்தையும் வடிவாப் பாத்திட்டுப் போவம்." விஜயன் சிரித்தான்.

"இன்னும் என்னவெல்லாம் இருக்கு?"

"பாத்தாத்தானே தெரியும். நானும் இதுக்கு முந்தி இஞ்சை வந்த தில்லை"

"ஒரு நாளையிலை கனக்கப்பாக்கக் கூடாது. பாத்ததே போதும் எனக்கு அலுப்படிக்குது விஜயன்" என்று சோம்பல் முறித்து அவனது முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"சரி வா அங்காலை ஒரு பூங்கா இருக்கு, அதுக்குப் போவம்" என்று சொன்ன விஜயன் ஒரு பக்கப் பாதையால் திரும்பி நடந்தான். சாந்தி பின் தொடர்ந்தாள்.

அது ஒரு மரங்கள் நிறைந்த பாக். பச்சைப் பசேல் என்ற மரங்கள். வண்ண வண்ண மலர்களாகப் பூத்துக் குலுங்கும் செடி கொடிகள். வசந்த காலமல்லவா? மரங்களும் கொடிகளும் பூக்களைச் சொரிந்து கொண்டிருந்தன.

பூங்கா நிறைய மக்கள். அனேகமாகக் காதலர்கள். கைகோர்த்த படி, ஒருவரில் ஒருவர் சாய்ந்தபடி மரங்களின் கீழ் நின்று பேசிக் கொண்டிருந்தனர். விஜயனும் சாந்தியும் ஒரு பூம்பந்தலின்கீழ் நின்ற

வர். கொடிகள் அவர்கள்மீது மலர்களைத் தூவின. முன்னால் செயற்கை நீரூற்றுக்கள் வெவ்வேறு நிறங்களில் மேலெழுந்து வர்ண ஜாலங்கள் காட்டிக் கொண்டிருந்தன.

" இந்தக் கொங்கிறீட் யங்கிளுக்கை இப்பிடியான இயற்கை அழகு கொஞ்சும் பூங்காக்களையும் அமைச்ச ஆங்கிலேயரைப் பாராட்டத் தான் வேணும் " என்றாள் சாந்தி.

" இப்பிடியான எத்தனையோ பூங்காக்கள் லண்டன் மாநகரத் திலையே இருக்கு. இதுக்கை நிக்கிறபொழுது லண்டன் நகரத் திலை நிக்கிறதுபோலைகூட இல்லையே. எங்கையோ ஒரு நந்தவனத் திலை நிக்கிறது போலையல்லோ இருக்குது. இதுக்கை வந்த உடனை களைப்பெல்லாம் நீங்கிட்டுது ! " .

" இதுகளை ஏன் அமைச்சாங்களோ ? "

" வேறை எதுக்கு ...? எங்களைப் போலை காதலர்களுக்காகத் தான் ! பார், எத்தினை காதல் சோடியள் " என்று சொன்ன விஜயன், சாந்தியை இழுத்து நெஞ்சாரத் தழுவிக்கொண்டான் !

" என்ன இது ? " என்று சாட்டுக்குச் சிணுங்கினாளாயினும், அவனோடு ஒட்டிக்கொண்டாள் சாந்தி. மேலே செடிகள் மலர் தூவ, அவளது மலர் முகத்தில் முத்த மழை பொழிந்தான் விஜயன். அது சாந்திக்கு முதல் முத்தம் மட்டுமல்ல, காதலனிடம் இருந்து கிடைக்கும் முதல் முத்தமும்கூட. அந்தத் தழுவலையும் முத்தத்தை யும் ஓரளவு எதிர் பார்த்து நின்றதால் சாந்தி அதிர்ந்து போக வில்லை. அவனுடன் நன்றாக இழைந்தாள். முத்தமிட்டபொழுது தன்னை மறந்து நின்ற சாந்தி, அதன் தீவிரம் குறைந்ததும் சற்று விலகி நின்று நாணத்துடன், " இனி வீட்டை போவம் விஜயன் " என்றாள்.

" அவ்வளவு விரைவிலா ?

" அக்கா இப்ப வீட்டை வந்திருப்ப. என்றாள் பயத்துடன். "

" அவவுக்கு நாங்கள் காதலர்கள் எண்டதைக் காட்ட வேணும் எண்டுதானே இஞ்சை வந்தம். நல்லாத் தேடட்டும் . "

" தேட மாட்டா. நான் ஒரு துண்டெழுதி மேசேலை வைச்சுட் டுத்தான் வந்தனான். " நான் விஜயனுடன் லண்டன் நகரைச் சுற்றிப் பார்க்கப் போகிறேன்; விரைவில் வந்து விடுவேன். தேட வேண்டாம் எண்டு " .

" சாந்தி ! அதை ஏன் எழுதி வைச்சாய் ? "

" இல்லாட்டா, அவ என்னைக் காணேல்லை எண்டு சத்தம் போடுவா. நண்பர்களை விசாரிப்பா. தற்செயலாய் பொலிசுக்கும் அறிவித்தல் குடுத்துட்டாக் கரைச்சல்தானே ? நான் நேரத்துக்குப்

போயிட்டா, அந்தத் துண்டை எடுத்துக் கிழிச்சு எறிஞ்சுடுவன். இல்லாட்டா, அவ வாசிச்சுப் பாத்துட்டு அந்தரப்படாமல் இருப்ப''.

"ஓ! புத்திசாலிதான்!'' என்று சொல்லி அவளது கன்னத்தைக் கிள்ளிவிட்டுச் சிரித்தான், விஜயன்.

"எதுக்கும் திரும்பூறது நல்லது விஜயன்." சிணுங்கினாள்.

"இனி நேரத்துக்குப் போறதெண்ட கதைக்கே இடமில்லைச் சாந்தி இப்பவே பன்னிரண்டு மணியாச்சுது. சுகிர்தராணி வந்திருப்ப. நாங்கள் முதல் 'லஞ்' எடுப்பம். வா ஒரு ஹோட்டேலுக்குப் போவம்''

அவர்கள் சாப்பிடப் போன கடை ஒரு பெரிய 'இன்'. ஒரு மாடிக் கட்டடத்தின் ஒரு தட்டு முழுவதிலும் சாப்பாட்டு அறைகள். இன்னிற்குள் நுழையும் போதே, "வாசனை மூக்கிலை தட்டுது'' என்றாள் சாந்தி.

"என்ன சாப்பாட்டு வாசனையா? அவ்வளவு பசியா? என்று சிரித்தான்

"இல்லை ஹொட்டேல் பெர்ஃபியூம்''

"அதோடை சாப்பாட்டு வாசனையும் வருது, கவனிக்கேல்லையா?''

"பசி உள்ள எனக்குத்தான் அந்த வாசனை தட்டும்'' என்று சாந்தி சிரித்தாள்.

"சாந்தி, ரண்டுபேருக்குமே நல்ல பசிதான். ஆளை ஆள் சாட்டாமல் வா ஒரு பிடி பிடிப்பம்.''

மெனு காட்டைப் பார்த்து எதை எதையோ விஜயன் ஓடர் செய்தான். மூக்கைத் துளைக்கும் வாசனையுடன் ஆவி பறக்கும் எத்தனையோ உணவு வகைகள் அவர்களுக்குப் பரிமாறப்பட்டன. எல்லாமே மாமிச உணவு.

சாந்திக்குச் சாப்பாடு அவ்வளவு இறங்கவில்லை. பழக்கமில்லாத சுவை. புதிய இடம். புதுப் பழக்கம். எல்லாவற்றுக்கும் மேலாக வீடு திரும்பியதும் சுகிர்தராணி அக்கா நெருப்பெடுப்பாளே என்ற பயம் மூளையின் ஒரு பகுதியில் அரித்துக் கொண்டிருந்தது. ஏதோ பசிக்குச் சாப்பிட்டாள். விஜயன் ஒரு வெட்டு வெட்டினான். சாப்பாட்டுக்கு மேல் ஒரு ஃப்றுட் சலாட். வயிறு முட்டிய திருப்தியுடன் வீட்டுக்குப் புறப்பட்டனர்.

# 15

வீட்டுக்கு வந்த சுகிர்தராணி சாந்தியைக் காணாது முதலில் திகைத்தாள். பிறகு திகைப்பு பயமாக மாறியது. இவள் எங்கே போயிருக்கிறாள்? தனியச் செல்வதற்கு அவளுக்கு இந்த நாட்டில் திக்குத் திசை தெரியாதே! எவருடனோ கூட்டிக் கொண்டு தான் போயிருக்கிறாள். யாரது? எனக்குச் சொல்லாமல் போக அப்படி என்ன அவசரம்?

யாராவது கடத்தியிருப்பார்களோ? அப்படிக் கடத்த முடியாது. பூட்டிய வீட்டிற்குள் இருந்தவள். அவள் விரும்பினாலல்லது கதவைத் திறந்திருக்கமாட்டாள். பலவந்தமாகக் கடத்தியதற்கான அடையாளங்கள் எதுவும் தெரியவில்லை.

இவளாகத்தான் போயிருக்கிறாள், துணிந்து.

நேற்றுத்தான் இலங்கையிலிருந்து அகதியாக வந்தவளுக்கு அவ்வளவு துணிச்சலா? — வரட்டும் இண்டைக்கு!

அப்பொழுதுதான் மேசையின் மேல் கிடந்த அந்தத் துண்டுக் கடிதம் அவளது கண்ணில் பட்டது. 'விஜயனுடன் வெளியே உலாவச் செல்கிறேன். திரும்பி வருவேன். தேடவேண்டாம், சாந்தி.'

இப்பொழுது சுகிர்தராணியின் ஆத்திரம் முழுவதும் விஜயன்மீது திரும்பியது. நான் அவனை விரும்புவதை எத்தனை நாள் அவனுக்குக் குறிப்பாக உணர்த்தியிருக்கிறேன். பலமுறை நேரடியாகவே கூறியிருக்கிறேன். படத்திற்கு, காணிவலுக்கு, கடைதெருவுக்கு, உல்லாசப் பயணத்திற்கு வரும்படி எத்தனை நாள் அழைத்திருக்கிறேன் அவனை. எனது அழைப்பை ஒருமுறைகூட ஏற்காதவன், இந்தச் சிறுக்கியுடன் கூடிக்கொண்டு போயிருக்கிறான். இது எனக்கு எவ்வளவு பெரிய அவமானம்! முகத்தில் அடித்தாற் போன்ற அவமானம்!

'சாந்தி என்ன அவ்வளவு பெரிய அழகியா? என்னைவிட அழகியா? விஜயன் என்னை வேண்டாம் என்று ஒதுக்கித்தள்ளிவிட்டு, சாந்திக்குப பின்னால் ஓடுவதற்கு என்ன காரணம்? வேண்டுமென்றே செய்கிறானா? அல்லது அவளிடத்தில் அவ்வளவு காதலா? முந்தநாள் இலங்கையில் இருந்து அகதியாக வந்த நாய்க்கு எனக்குச் சொல்லாமல்,

எனக்கும் போட்டியாக விஜயனுடன் ஊர்சுத்த அவ்வளவு துணிச்சலா? ரண்டு பேரையும் பழிக்குப்பழி வாங்க வேண்டும்! சாந்திக்கும் நற்குண சிங்கத்திற்கும் கட்டாயக் கலியாணம் செய்து வைத்து விட்டால் கதை முடிந்தது! ஒருவீச்சில் ரண்டு பேரையும் வீழ்த்துகிறேன் பார்! - கறு விக் கொண்டாள்.

வீட்டினுள்ளே வேகமாகக் குறுக்கும் மறுக்கும் நடந்தாள். ஃபானை வேகமாகச் சுழல விட்டாள். ஃபிரிட்சில் இருந்த குளிர்பானத்தை இரண்டு முறை ஊற்றிக் குடித்தாள். இருந்தும் கொதி அடங்கவில்லை; வேகம் குறையவில்லை.

விஜயனும் சாந்தியும் வீடு திரும்பும் பொழுது நாலுமணி. ரங்க நாதன் இன்னும் வீடு திரும்பவில்லை. சுகிர்தராணி மட்டும் நின்றாள், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க. சாந்தி பயந்து தலைகுனிந்த படி பின்னால் வர விஜயன் முன்னால் வந்தான். அவனது முகத்தைப் பாராது, சாந்தியை எட்டிப் பார்த்து சுகிர்தராணி கேட்டாள்.

''எங்கையடி யோட்டு வாறாய்? ஏன்ரி சொல்லாமல் போனனி?''

"சாந்தியைப் பேசாதையுங்கோ சுகிர்தராணி. அவ வரப் பயந்தவ: நான் தான் வற்புறுத்திக் கூட்டீட்டுப் போனது''

''எங்கடை வீட்டிலை இருந்த பிள்ளையை நீங்கள் எப்படிக் கூட் டீட்டு போவியள்? அதுகும் எங்களுக்குச் சொல்லாமல்?'' சுகிர்த ராணியின் வார்த்தைகளில் கனல் பறந்தது.

''அது பிழைதான். சாந்தி லண்டனைப் பார்க்க ஆசைப்பட்டா. அவ வந்து ஒரு மாதமாகீட்டுது. நீங்களும் ஒரு இடமும் கூட்டீட்டுப் போகேல்லை_''

"அவளைக் கூட்டீட்டுப் போறதும் போகாமல் விடுறதும் எங்கடை விருப்பம்''

''எனக்கும் சாந்தியைக் கூட்டியிட்டுப் போய் லண்டன் நகரத்தைக் காட்ட ஆசையாய் இருந்தது.''

''விஜயன்! நீங்கள் ஆசைப்பட்டா ஆரையும் காறிலை ஏத்திக் கொண்டு போவியளோ?''

''ஆரையுமல்ல, எனக்குப் பிடிச்சவையை. நான்விரும்பூறவையை.''

இந்தப் பதில் சுகிர்தராணிக்கு நன்றாகச் சுட்டது. ''நீங்கள் விரும்பினாலும் சாந்தி எங்களுடைய பாதுகாப்பிலை இருந்த பெண். எங்களுக்குச் சொல்லாமல் அவளைக் கூட்டிக்கொண்டு போனது பெரிய பிழை!''

''நான் கலியாணம் கட்டப்போற பெண் என்றபடியால் கூட்டீட் டுப் போனன்'' என்று விஜயன் லேசாகச் சிரித்தான்,

"சாந்தி நீங்கள் கல்யாணம் கட்டப்போறபெண் எண்டது உங்க ளுக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குத்தானே தெரியும்?"

"எங்கடை பாதுகாப்பிலை உள்ள பெண்."

"உங்கடை சம்மதத்தோடைதான் கட்டப்போறன்"

"நாங்கள் சாந்தியை உனக்குத் தரமாட்டம். இவள் நற்குண சிங்கத்தை கல்யாணம் செய்யவெண்டு வந்த பெண். அவரைத்தான் கட்டவேணும்."

"சுகிர்தராணி! ஆடுமாட்டை விலைபேசி விக்கிறமாதிரி, ஒரு பெண்ணை அவளுடைய சம்மதம் இல்லாமல் கட்டி வைக்க ஏலாது; அதுகும் இந்த நாட்டிலை!"

"எப்படி கட்டிவைக்கிறதெண்டு எங்களுக்குத் தெரியும். நீர் சொல்லித்தரத் தேவையில்லை.

"சரி அந்தக் கெட்டித்தனத்தையும் பார்த்துக் கொள்ளுவம்!" என்று சவால் விட்டு விட்டு விஜயன் சென்றான். அவன் போனதும் "ஏன்ரி சாந்தி சொல்லாமல் கொள்ளாமல் போனனி?" என்று உறுக்கி னாள் சுகிர்தராணி

"லண்டனைப் பாக்க ஆசையாய் இருந்தது அக்கா" என்று பரி தாபமாகப் பதிலளித்தாள் சாந்தி.

"ஆசை வந்தா? அதை உடனே தீர்த்துக்கொள்ளுறதா? அப்பிடி யெண்டா எங்களைக் கேட்டிருக்கலாமே, கூட்டிக் கொண்டு போய்க் காட்டச் சொல்லி."

"அக்கா நான் இங்கிலாந்துக்கு வந்து ஒரு மாதமாகுது: நீங்கள் இதுவரை என்னை ஒரு இடமும் கூட்டிட்டுப் போகேல்லை. அதாலை போனன்."

"சொல்லக்கூட இல்லை "

"துண்டு எழுதி வைச்சிருந்தேனே அக்கா?"

"துண்டு காணுமா? நான் எவ்வளவு பயந்து அந்தரப்பட்டுட்டன் தெரியுமாடி?"

இதற்கு என்னபதில் சொல்ல முடியும்? ஒரு குற்ற உணர்வுடன் சாந்தி பேசாமல் நிற்க, சுகிர்தராணி தொடர்ந்தாள்.

"ஆசை வந்தாக் கண்டவனோட போறதா? நீ ஒரு பெண்ணல் லவா? குமரியல்லா?"

"விஜயன் கண்டவனில்லை. இஞ்சை வந்து பழகினவர்."

"ஓ கன நாள் பழக்கமோ? நாங்கள் இல்லாத நேரமெல்லாம் வந்து

உன்னோடை கூத்தடிக்கிறானோ! சுமித்ராணி ஏளனமாகச் சிரித்தாள்.

"இல்லை எல்லாரும் இருக்கேக்கைதான் வந்து பழகினவர்"

ஒண்டு நடந்திட்டா நான்தானடி பொறுப்பு? —இப்பவும் என்னென்ன கூத்தெல்லாம் ஆடீட்டு வந்திருக்கிறியோ?"

"இல்லை அக்கா நான் அப்பிடி ஒண்டும் பிழையா நடக்கேல்லை. என்றாள் சாந்தி இழுதழுத்த குரலில்.

"நாள் முழுக்க ஒரு இளந்தாரியோடை சுத்தித் திரிஞ்சுட்டு வந்து நிண்டு — நான் பிழையா நடக்கேல்லையெண்டா ஆரடி நம்புறது?"

"சரி அக்கா ஆடினன் எண்டுதான் வைச்சுக்கொள்ளுங்கோ-நான் அவரைத்தானே கட்டப்போறன்? அப்ப அதிலை பெரிய பிழை ஒண்டும் இல்லை!"

"என்ன விஜயனைக் கட்டப்போறியா? அப்பிடிக் கனவு காணாதை —நான் சொல்லுறவனைத்தான் நீ கட்டவேணும்"

"என்னுடைய சவத்தைத்தான் நற்குணசிங்கத்திற்கு கட்டிவைப்பியள்!"

"நற்குணசிங்கத்தைக் கட்டத்தான் வேணும் என்று சொன்னால் சாந்தியின் பிடிவாதம் தான் வலுக்கும்' அதைவிட விஜயனைப்பற்றி கூடாமல் சொன்னால், ஒருவேளை அவளது மனம் மாறக்கூடும் என்று நினைத்து, விஜயனைக் கட்டப்போறன் எண்டு சொல்லுறியே அவனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?" என்றாள்.

"எல்லாம் தெரியும். வடிவாத் தெரியும்."

"அவன் கெட்டவன். இதுக்கு முந்திப் பல பெண்களை ஏமாத்தினவன்,—அந்த வரிசேலை இப்ப நீ"

"நான் உதை நம்ப மாட்டன்!"

"அந்த அளவுக்குப் பொய் சொல்லி ஏமாத்தி வைச்சிருக்கிறான். —இங்கிலாந்துக்கு அகதியாக வந்து எத்தினையோ சட்டவிரோதமான வேலையள் எல்லாம் செய்தவன்! பிடிபட்டா, மறியலுக்குப் போவன்!"

"நற்குணசிங்கம் செய்தது எல்லாத்தையும் அவரிலை ஏத்திச் சொல்லுறியள்!"

"என்ன நற்குணசிங்கம் குற்றச் செயல்கள் செய்தாரா? ஆர் விஜயனா சொன்னது? தன்னுடைய குற்றங்களை மறைக்க, நற்குணசிங்கத்தைப் பற்றிக் கதை அளந்திருக்கிறான்! — ஒரு நல்ல மனிசனிலை அபாண்டப் பழி சுமத்துறான்.— உதிலை இருந்தே தெரியேல்லையா உவன் எவ்வளவு கெட்டவனெண்டு?"

"உன்ரை காதல் பற்றி எனக்குத் தெரியும். அது தான் நீ அவரைக் குறை சொல்லுறாய்!" என்று சொல்ல நினைத்த சாந்தி 'அது பண்பில்லை. அப்பிடிச் சொல்லி அக்காவின்ரை மனதைப் புண்படுத்துறதாலை எனக்கு என்ன லாபம்? தான் விஜயனைக் கலியாணம் செய்ய முயற்சிப்பம். அதுக்கு ஏதும் தடை வந்தால் பிறகு பாப்பம்.' என்று தீர்மானித்துக் கொண்டு, "விஜயன் கெட்டவராக இருக்கலாம்.— ஆனா அதைப்பற்றி நான் கவலைப்படேல்லை; நீங்கள் ஏன் வீணாக் கவலைப்படுறியள்?" என்றாள்.

இவளோடை ஏன் வீணாக வாதிடுவான்? கடைசிலை நான் நினைச்சவனுக்கு இவளைக் கட்டி வைச்சாச் சரிதானே! என்று நினைத்துக் கொண்டே சுகிர்தராணி, "சரி சரி, எல்லாத்தையும் இருந்து பாப்பம்." என்று சொல்லிக் கதையை முடித்துக் கொண்டாள்.

இந்தக் கதைபற்றி சுகிர்தராணி கணவனுக்கு மூச்சுவிடவில்லை. 'அவள் விரும்பித்தானே அவனுடன் போனாள். அவனோடையே நிரந்தரமாப் போகட்டும்' என்று சொல்லிவிட்டால்...? தப்பித் தவறித் தனது பெயரும் அதில் அடிபட்டால்—?

விட்டு விட்டாள்.

நற்குணசிங்கத்தினுடைய கலியாணக் கதையைப் பல முறை எடுத்துப் பார்த்தாள். அவன் திருந்தினாலல்லது சாந்தியை அவனுக்குக் கட்டி வைக்க முடியாது. என்று உறுதியாகக் கூறி விட்டார் ரங்கநாதன்.

இந்த மனிசன் சரிவராது. நியாய அநியாயங்களைப் பற்றிப் பேசுது. — 'எனது இட்டத்தை நிறைவேற்ற வேறு வழிவகைகளைத் தான் பார்க்க வேண்டும்.' என்று அது பற்றி ஆராயத் துவங்கினாள் சுகிர்தராணி.

# 16

அடுத்த நாள் விஜயன் வந்த பொழுது நடந்தவற்றைக் கூறி அழுதாள் சாந்தி. "நான் ரங்கநாதனிடம் பேசி கலியாணத்துக்கு ஒழுங்கு செய்கிறேன்" அது வரையும் பொறுத்திரு என்று அவளுக்கு ஆறுதல் கூறினான் விஜயன்.

அதன்படி ஒரு நாள் ரங்கநாதனைச் சந்தித்து "உங்களுடைய அனுமதி இல்லாமல், நான் சாந்தியை வெளிலை கூட்டிட்டுப் போனது பிழைதான். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ." என்றான்.

“என்ன தம்பி விஜயன், என்னுடைய அநுமதி இல்லாமல் சாந்தியைக் கூட்டீட்டுப் போனீரா? எனக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. என்னுடைய மனைவீட்டைச் சொல்லியிருந்தால் போதும்.”

“அவவுக்கும் சொல்லாமல் தான் கூட்டீட்டுப் போனனான். அதுக்காகத்தான் மன்னிப்புக் கேக்கிறன்.”

“சுகிர்தராணிக்கு கதை தெரியுமா? இல்லையா?”

அவவுக்கும் பிறகு வந்துதான் சொன்னம். அவ எங்களை மன்னிக்கத் தயாராய் இல்லையாம். நெருப்பெடுக்கிறா!”

“அவ எனக்கு இது பற்றிச் சொல்லேல்லையே?”

‘சுகிர்தராணி இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை? இது அலட்சியப் படுத்தக் கூடிய விடயமல்லவே; முக்கியமான விடயம். வேண்டுமென்றுதான் மறைத்திருக்கிறாள். ஏன்.?

இப்பொழுது தான் சில விடயங்கள் ரங்கநாதனுக்குப் புலப்படுவது போலிருந்தன.

‘விஜயனுக்குச் சாந்திலை இன்ரறெஸ்ற் (Interest) வந்து விட்டது. அது தான் அவனை இங்கே அடிக்கடி இழுத்து வருகின்றது. இது சுகிர்தராணிக்குப் பிடிக்கவில்லை. அவள் நற்குணசிங்கத்திற்குத்தான் சாந்தியைக் கலியாணம் செய்து வைக்கப் பார்க்கிறாள். இது விடயமாக என்னையும் பல முறை நெருக்கியிருக்கிறாளே!

இந்தக் கதை எனக்குத் தெரியவந்தால்... நான் விஜயன் – சாந்தி கல்யாணத்திற்கு ஒப்புதல் அளித்தால் ... — என்று பயந்திருக்கிறாள் சுகிர்தராணி. அவவாகவே சொல்லட்டும்; பேசாமல் இருப்பம்.

“சாந்தி லண்டனைப் பாக்க ஆசைப்பட்டாள். அது தான் கூட்டீட்டுப் போனனன்.”

“ஓம் தம்பி. அந்தப் பிள்ளை இலங்கையிலை இருந்து வந்து ஒரு மாதமாகுது. நாங்கள் அவளை ஒரு இடமும் கூட்டிக் கொண்டு போய்க் காட்டேல்லை. எனக்கு உதுக்கெல்லாம் நேரமில்லை. மனிசி தான் இதுகளைப் பாத்துச் செய்திருக்க வேணும். அவவும் கவனிக்கேல்லை.”

“எண்டாலும் உங்களுடைய அனுமதி இல்லாமல் உங்களோடை இருக்கிற பிள்ளையைக் கூட்டீட்டுப் போனது பிழைதான். அதுக்காக மன்னிப்புக் கேக்கிறன். நான் கலியாணம் கட்டப் போற பெண் தானே எண்டு கூட்டீட்டுப் போனனான்.”

“என்ன தம்பி விஜயன், கலியாணம் செய்யப் போறீரா?” என்றார் ரங்கநாதன் வியப்புடன்.

" ஓம் சாந்திக்கும் சம்மதம். இது பற்றி நான் சுகிர்தராணிக்குச் சொல்லியிருக்கிறன்."

" அவ என்னிட்டை ஒண்டும் சொல்லேல்லையே. அதோடை சாந்தி இன்னொருத்தரைக் கட்டுறத்துக்காக இஞ்சை வரவழைக்கப் பட்ட பெண்."

" தெரியும். அதுக்காக நீங்கள் செலவழிச்ச காசை நான் தாறன்."

" தம்பி, நீர் இஞ்சை வந்து போறீர்: சுகிர்தராணியின்ரை ஃபிறெண்ட் எண்டது மட்டும் தான் எனக்கு உம்மைப் பற்றித் தெரியும். வேறை ஒண்டும் தெரியாது."

" ரங்கநாதன் அண்ணை, நீங்கள், நான் படிக்கிற இன்ஸ்ரிரியூட்டிலை வந்து விசாரிக்கலாம். நான் வேலை செய்யிற இடங்களிலை விசாரிக்கலாம். என்னுடைய அப்பாட்மெண்டுக்கு வந்து பாருங்கோ, நல்ல வசதியாக வாழுறன். கார் கூட வாங்கியிருக்கிறன்."

" அப்ப குடும்பம் நடத்தக் கூடிய வல்லமை இருக்கு: அது போதும்: இன்னும் பிரஜா உரிமை கிடைக்கேல்லை?"

" இந்த நாட்டுக்கு அகதியா வந்திருக்கிற தமிழரிலை தொண்ணூறு சதவீதம் பேருக்கும் பிரஜா உரிமை இல்லை" என்று விஜயன் சிரித்தான்.

" அப்ப என்ன உடனடியாகவே கலியாணத்தைச் செய்யப் போறீரா?"

" குடும்பம் நடத்த வசதியான வீடு எடுக்க வேணும்: உங்கடைய காசைத் தரவேணும்: தந்துட்டுப் பேசுறன்."

" சரி"

" இதுக்காக மிஸ்ரர் நற்குணசிங்கம் உங்களைக் குறை சொல்ல மாட்டாரோ?"

" அதைப் பாக்க முடியாது தம்பி: அவர் கலியாணத்துக்கு ஆய்த்தமில்லை. அவர் தானே திருந்திக் கொள்ளாத பொழுது இந்தப் பிள்ளையை எப்பிடி அவரிட்டை ஒப்படைக்கிறது? – அனாதையாக நிக்கிற பிள்ளையெண்டாலும், பாவமல்லா?"

" ஓம். பாவம் தான்!"

" இனி நாங்களும் இந்தப் பிள்ளையை நெடுக வீட்டிலை சும்மா வைச்சிருக்க விரும்பேல்லை: பொருத்தமான இடத்திலை கட்டிக் குடுத்துட வேண்டியது தான்."

" சரி அண்ணை நான் ரெண்டு மூண்டு நாட்களிலை வந்து சந்திக்கிறன்"

தனது கலியாணத்திற்கு ரங்கநாதன் எதிர்ப்புத் தெரிவிப்பார் என்று விஜயன் பயந்து கொண்டிருந்தான். அவர் சம்மதம் சொன்னது அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இந்தச் செய்தியை அவன் சாந்திக்குக் கூறிய பொழுது அவளும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க ஆரம்பித்தாள்.

சுகிர்தராணியும் வேகமாகச் செயற்பட்டாள். நற்குணசிங்கத்தை ஒரு ஹொட்டேலுக்கு வரவழைத்தாள். வறுத்தெடுத்த கோழிக் குஞ்சைச் சாப்பிட்டுக் கொண்டே கதை பேசினார்கள்.

"மிஸ்ரர் நற்குணசிங்கம், ரண்டு லட்சம் ரூபா செலவழிச்சு, உனக்காக ஒரு அழகான பெண்ணை இலங்கேலை இருந்து எடுப்பிச்சிருக்கிறம். அவள் வந்தும் ஒரு மாதமாகுது. நீயும் உன்ரை பாட்டிலை திரிகிறாய்!"

"அவள் தான் என்னைக் கட்ட மாட்டம் எண்டுட்டாளே! நீங்களும் உதவி செய்யேல்லை. நான் தனிய என்ன செய்யலாம்?,

"நீ ஒரு ஆம்பிளை. 'நான் என்ன செய்யலாம்?' எண்டு சொல்ல உனக்கு வெட்கமாயில்லை?"

"சொல்லுங்கோ சுகிர்தராணி நீங்கள் சொல்லுறபடி செய்யிறன்!"

"மிஸ்ரர் நற்குணசிங்கம் நீர் சாந்தியைக் கலியாணம் கட்டியே ஆகவேணும்!"

"அதுதான் என்னுடைய ஆசையும்!" என்றான் வாயைப் பிளந்து கொண்டு.

"அதுக்கு இரண்டு வழி இருக்கு. ஒண்டில் நீ திருந்த வேணும். உன்னுடைய கெட்ட பழக்கங்கள் எல்லாத்தையும் விட்டு, நீ நல்லவனாக மாறினால் சாந்தி உன்னைக் கட்டச் சம்மதிக்கக் கூடும். அது உன்னாலை ஏலாதெண்டு எனக்குத் தெரியும். எண்டாலும் ஒரு கதைக்குச் சொல்லுறன்."

"கொஞ்சம் கஷ்டம் தான். சொல்லுங்கோ."

"அப்பிடி நீ திருந்துறதானாலும், அதுக்கிடேலை சாந்தியை விஜயன் கொண்டு போயிடுவன். அப்ப இரண்டாவது வழியைத் தான் கடைப்பிடிக்க வேணும்."

"சொல்லுங்கோ சுகிர்தராணி; நீங்கள் சொல்லுற எதையும் நான் செய்யக் காத்திருக்கிறன்!"

"சாந்தியை நீ வலோற்காரமாகக் கடத்திக் கொண்டு போய் வைச்சிரு."

"என்ன கடத்தலா? எனக்கு போதைவஸ்து கடத்திக் கடத்தித் தான் பழக்கம். இன்னும் பெண் கடத்தேல்லை."

" தியிறுவாள்: அவளை அடக்க உடம்பிலை தைரியம் வேணும்; இருக்கா? "

" இருக்கு, இருக்கு. இன்னும் கொஞ்சம் மிச்சம் இருக்கு! " என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

" குடிச்சுக் குடிச்சு, உடம்பு கெட்டுப் போச்சு. இருந்தாலும் இதைச் செய்தே ஆகவேணும்! நான் உனக்கு உதவி செய்யிறன்! "

" நீங்கள் உதவி செய்யிறியளா? அப்ப நான் செய்வன்! ரண்டு பேரும் இருக்க, நான் இப்ப இருக்கிற அறை சரியில்லை. கொஞ்சம் பெரிய இடமா எடுக்க வேணும். "

" நீ வீடெடுத்துக் கொண்டு நிக்க விஜயன் அவனைத் தன்ரை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடுவன். "

" அப்ப நான் ஆளையே முடிச்சு விடுறன்! "

" வேண்டாம். அதெல்லாம் கரைச்சல் பிடிச்ச வேலை. இது சுகமான வேலை. "

இந்த வீட்டிலை அவள் கத்தினா எல்லாருக்கும் கேக்கும். கொஞ்சம் பெரிய வீடெண்டா, சத்தம் வெளிலை கேக்காது. இந்த வீட்டுக்கு ஆரும் தேடி வந்து என்னைப் பிடிச்சுடுவங்கள். வீடு மாறினால் பிடிக்க முடியாது!

" அப்ப கெதிலை வீட்டை எடு. "

" அந்த வீட்டுக்கும் தேடிக் கொண்டு வந்தா...? "

" நற்குணசிங்கம் என்ன குழந்தைப்பிள்ளை மாதிரிக் கதைக்கிறீர்? அது வரையும் நீர் சும்மாவா இருக்கப் போறீர்? அதுக்கிடேலை அலுவலை முடிச்சுட்டா, அவள் உம்முடைய பெண்டாட்டி! " கண் சிமிட்டிப் பலமாகச் சிரித்தாள் சுகிர்தராணி.

அதைக் கேட்கவே நற்குணசிங்கத்தின் உள்ளத்தில் ஆசை பொங்கிற்று. சாந்தியுடன் கட்டிலில் கிடப்பது போன்ற ஒரு உணர்வில் உடல் சிலிர்த்தது.

" ஓ அது வலு சுலபம். செய்வன்! செய்யிறன்! " என்று சொல்லிச் சிரித்தான் வாயெல்லாம் பல்லாக.

அவனது காய்ந்த முகத்திலும் ஒரு ஒளி.

" பெரிய உற்சாகமாச் சொல்லுறீர். எல்லாத்துக்கும் காசிருக்கா? "

" இல்லையே! காசில்லை. " என்று பரிதாபமாகக் கூறி உதட்டைப் பிதுக்கினான்.

" ஆசையைப் பார் ஆசையை! நல்ல ஆள் தான்; காசில்லாமல் கலியாணம் கட்டப் பாக்கிறார்! " என்று கூறிச் சிரித்த சுகிர்தராணி, " சரி நான் தாறன் காசு " என்றாள்.

# 17

"சாந்தி நீ இங்கிலாந்துக்கு வந்தும் ஒரு மாதமாகுது. நான் உன்னை ஒரு இடமும் கூட்டீட்டுப் போய் காட்டேல்லை. எனக்கும் பல அலுவல்கள். அதாலை உன்னைக் கவனிக்க நேரமில்லாமல் போச்சு. சரி வா இனிமேலாவது ரண்டொரு முக்கியமான இடங்களுக்குக் கூட்டீட்டுப் போறன்." என்றாள் சுகிர்தராணி.

"வேண்டாம் அக்கா. உங்களுக்கு வீண் சிரமம். எனக்கு இப்பிடியே இருந்து பழகிப் போச்சு. இஞ்சை இந்த ஃபிளாட்சிலை இருந்த படியே எத்தினை காட்சியளைக் காணுறன்? இதே ஒரு தனி உலகம்" என்றாள் சாந்தி.

"உனக்கும் இளம் வயது. நாடு விட்டு நாடு வந்தனி. லண்டன் எந்தப் பெரிய நகரம்! இதிலை பாக்க எவ்வளவு இருக்கு. உன்ரை மனதிலும் எவ்வளவு ஆசையள் இருக்கும். அதை நான் உணர மறந்திட்டன். உன்னைத் தனியப் போக விடவும் முடியாது. இந்த நாட்டிலை உனக்குத் திக்குத் திசை தெரியாது. நானே கூட்டீட்டுப் போறன்."

"இவ என்ன எனக்குக் காட்டுறது. நான் விஜயனோடை உலாத்தி இந்த இங்கிலாந்து நாடு முழுவதையுமே பாப்பன்." என்று நினைத்துக் கொண்ட சாந்தி, "எனக்கு ஒரு ஆசையும் இல்லை அக்கா. எல்லாம் பழகிப் போச்சு. என்னை நிம்மதியாக இருக்க விட்டாலே போதும்." என்றாள்.

"இது எந்தப் பெரிய நாடு. இயற்கைக் காட்சியள் செயற்கைக் காட்சியள் எல்லாம் நிறைஞ்சது. இந்த லண்டன் நகரத்தைப் பாத்து முடிக்கவே பல மாதங்கள் செல்லும். சரி வா, இண்டைக்கே ஒரு இடத்துக்குப் போவம்."

"எனக்குச் சுகமில்லாமல் இருக்கு அக்கா. இன்னொரு நாளைக்குப் போவம்."

"அண்டைக்கு விஜயனோடை போனதுக்காக நான் கண்டிச்சதை ஞாபகம் வைச்சுக் கொண்டிருக்கிறாய் போலை? அது ஏதோ ஆத்திரத்திலை பேசீட்டன். நீ வளர்ந்த பெண். நான் உன்னை கடுமையாய் கண்டிச்சிருக்கக் கூடாது தான்." நீ என்னுடைய

தங்கச்சி. என்னுடைய அழைப்பிலை இங்கிலாந்துக்கு வந்தவள்: உனக்கு இடங்களைக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை: சரி வெளிக்கிடு.''

அக்கா ஏன் இருந்தாப் போலை என்னிலை கசியிறா?

தான் அன்டைக்கு பேசினதுக்குப் பரிகாரம் தேடுறாவோ?

அல்லது நான் மீண்டும் விஜயனுடன் உலாவப் போகாமல் இருப்பதற்காக, தானே முன்வந்து அழைக்கிறாவோ?

எதுவாக இருந்தால் என்ன: ஏதோ ஒரு உள்நோக்கம் இல்லாமல் அக்கா என்னை அழைக்கவில்லை:

அவளின்ரை அழைப்பை ஏற்காமல் விட்டாலும் கோபிப்பா:

" சரி வாறன் அக்கா " என்று உள்ளே போனாள்.

விஜயன் வாங்கிக் கொடுத்த சட்டையை அணிந்து கொண்டு வந்தாள் சாந்தி. அதில் இன்னும் மெல்லிதாக ஒயிலாக இருந்தாள். ரட்டைப் பின்னல்கள் இடுப்பு வளைவுகளைத் தொட்டுக் கொண்டு நின்றன:

சாந்தியைப் பார்க்க 'இவள் என்னை விட அழகா?' என்று பொறாமையாக இருந்தது சுகிர்தாராணிக்கு. அந்தச் சட்டை தான் அவளது கண்ணைக் குத்தியது: " நீ அழகில்லை. அதனால் தான் விஜயன் உன்னைப் புறக்கணித்து விட்டுச் சாந்தியைக் காதலிக்கிறான்" என்று அந்தச் சட்டை அவளுக்குச் சொல்வது போல இருந்தது:

அந்தக் கூத்தலைச் சமாளித்துக் கொண்டு " சரி வா போவம். இன்னும் எத்தினை நாட்கள் எத்தினை இடங்களுக்குப் போகவேணும்." என்றாள்.

அன்று பிரித்தானியப் பாராளுமன்றம் என்ற 'வெஸ்ட் மினிஸ்டர் அபே' யைப் பார்த்து விட்டு வந்தார்கள். உலகத்துப் பாராளுமன்றங்களுக்கெல்லாம் தாய் என்று வர்ணிக்கப்படும். அந்தப் பிரமாண்டமான பழைய கட்டடத்தைப் பார்த்துப் பிரமிக்கத்தான் செய்தாள் சாந்தி.

மத்தியானம் சாப்பிட்டதும் " இண்டைக்குப் பின்னேரம் தெம்ஸ் நதி பாக்கப் போவம்: லண்டன் நகரத்துக்கு நடுவாலை ஓடிக் கொண்டிருக்குது." என்றாள் சுகிர்தராணி:

தெம்ஸ் நதிக் காட்சி உண்மையாகவே அழகான காட்சிதான்: ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் அகலமான நேரிய சாலைகள்: நதிக் கரை ஓரங்களில் வண்ண வண்ண விளக்குகளின் வரிசை: நதிக்குக் குறுக்காக எத்தனையோ அழகான பாலங்கள். அவற்றிலும் வண்ண விளக்குகள்: இருள் கவிந்து லைட் போட்டதும் தெம்ஸ் நதிப்பகுதி ஒரு மாயாபுரியாக மாறியது. வீதி ஓர விளக்குகள் தண்ணீரிலும்

பிரதிபலிக்க, கண் முன்னால் இரண்டு லண்டன் நகரங்கள் தெரிந்தன. தான் சுகிர்தராணியுடன் வந்திருக்கிறேன் என்பதையும் மறந்து, தன்னையும் மறந்து அந்தக் காட்சிகளைப் பார்த்து ரசித்தாள் சாந்தி.

அடுத்த நாள் ஒரு பாக். அங்கே உள்ள இனம் தெரியாத பெரிய பெரிய மரங்களின் கீழ் நின்று பார்த்தனர். மணமில்லாத மலர்களை முகர்ந்தனர். பாக் நடுவில் ஒரு நீர் நிலை. அதில் உல்லாசப் படகுகள் ஓடிக் கொண்டிருந்தன. "நாங்களும் ஒருக்காப் படகிலை ஏறி ஓடுவமா?" என்றாள் சுகிர்தராணி. சாந்திக்கும் படகில் ஏறி, உல்லாசமாகச் சுற்றிவர ஆசையாகத்தான் இருந்தது. அதில் சுகிர்தராணியுடன் போய் என்ன சுகம்? விஜயனுடனல்லவா போக வேண்டும்.?

"வேண்டாம் அக்கா தாங்கள் வீட்டை போவம்." என்றாள்.

சாந்தி நம்பும் படியாக நடந்து, அவளது சந்தேகங்கள் எல்லாவற்றையும் நீக்கியாயிற்று. திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இது தான் சரியான தருணம்.

அன்று மாலை, லண்டன் புறநகர் ஒன்றில் பரடைஸ் றோட்டில் நற்குணசிங்கம் புதிதாக எடுத்திருந்த வீட்டிற்குச் சாநதியை அழைத்துச் சென்றாள் சுகிர்தராணி. ஒரு தோழியைப் பார்க்கப் போவதாகச் சொல்லியிருந்தாள். வீட்டில் நற்குணசிங்கத்தைக் காணும் வரை, சாந்திக்கு எந்தவிதச் சந்தேகமும் எழவில்லை.

கதவைத் திறந்த நற்குணசிங்கம் தனது காவிப் பற்களைக் காட்டிப் பெரிதாகச் இளித்து "வாருங்கோ! வாருங்கோ!" என்று சொல்லிப் பக்கத்தில் ஒதுங்கி நின்றான். அவனைக் கண்டதும் சாந்திக்குப் 'பகிர்' என்றது. "இஞ்சை ஏன் வந்தியள்?" என்றாள்.

"சும்மா இவரை ஒருக்காப் பாத்துக் கதை பேசிட்டுப் போகத் தான். வா, இரு சாந்தி."

திரும்பி ஓட வேண்டும் போல இருந்தது சாந்திக்கு.

எங்கே ஓடுவது?

எப்படி ஓடுவது?

காசும் இல்லை.

போகவும் வழி தெரியாது.

மந்திரத்தால் கட்டுண்டவள் போலச் சுகிர்தராணியைப் பின் தொடர்ந்தாள். அவள் இருக்க இவளும் நுனிக்கதிரையில் அமர்ந்தாள்.

அக்கா என்னை இங்கு தற்செயலாகக் கொண்டுவரவில்லை.

வேண்டுமென்றே திட்டம் போட்டுத்தான் கொண்டு வந்திருக்கிறாள்.

என்ன செய்யப் போகிறாள்?

எதுவுமே செய்வார்கள். பாவிகள்!

நெஞ்சு படக் படக்கென்று அடித்தது. வியர்த்துக் கொட்டியது.

ஓடுவோமா?

எழுந்து நின்றாள்.

" ஏன் சாந்தி எழும்பீட்டாய்? இரு! " என்றாள் சுகிர்தராணி.

" இல்லை. எனக்கு இஞ்சை இருக்கப் பயமாய் இருக்கு. உடனடியா வெளிலை போக வேணும்! " சாந்திக்குப் பயத்தில் குரல் தடுமாறியது.

" அப்பிடிப் போறது மரியாதை இல்லை. நானும் இருக்கிறன் தானே? நீயும் இரு! "

" இல்லை அக்கா நான் போகவேணும். "

" என்ன அவசரப்படுறாய்? "

" என்னை ஏன் இஞ்சை கூட்டியந்தியள்? "

" சாந்தி! நற்குணசிங்கத்துக்குக் கட்டி வைக்கத்தானே உன்னை இலங்கேலை இருந்து கூட்டியந்தம்? நீ அப்ப கேட்டிருக்க வேணும் உந்தக் கேள்வியை. இப்ப கலியாணம் கட்டி வைக்கத் தான் உன்னைக் கூட்டியந்தன். இராவைக்கு உனக்கும் அவருக்கும் கலியாணம். காந்தர்வ விவாகம்! கேள்விப்பட்டிருக்கிறியா? " என்று அட்டகாசமாகச் சிரித்தாள் சுகிர்தராணி.

அதிர்ந்து போனாள் சாந்தி. " என்ன கலியாணமா? ஏனக்கா, இப்பிடி அநியாயம் செய்யிறியள்? நான் உங்களுக்கு என்ன துரோகம் செய்தன்? " என்றாள் சாந்தி அழுகையினூடே.

நீ இவரைக் கட்டவெண்டு தானே வந்தனீ? அவரையே கட்டு. அதிலை ஒரு பிழையுமில்லை! "

" ஐயோ என்னைக் காப்பாத்துங்கோ! காப்பாத்துங்கோ! " என்று உரக்கக் கத்தி, பெரிதாக அழத்தொடங்கினாள் சாந்தி.

" வீணாக் கத்தாதை! ஒருத்தருக்கும் கேக்காது. உன்ரை அழுகையைக் கேட்டுட்டுப் பக்கத்து வீட்டுக் காறர் ஓடியாறதுக்கு, இது யாழ்ப்பாணமில்லை! என்று மீண்டும் சிரித்தாள் சுகிர்தராணி.

முன் கதவை நோக்கி ஓடினாள் சாந்தி. தப்பி ஓடும் எண்ணத்துடன்.

அது பூட்டியிருந்தது.

" என்னைப் போகவிடுங்கள். " என்னைப் போகவிடுங்கள்! " என்று கத்திப் பலமுறை கதவில் கைகளால் அறைந்தாள். அது வீண் முயற்சி என்று தெரியவே ஏதையாவது தூக்கி சுகிர்தராணியை அறையலாம் என்று திரும்பி ஓடிவந்தாள்.

டக்கென்று கதவைத் திறந்து கொண்டு சுகிர்தராணி வெளியேறினாள்.

அவளைத் தொடர்ந்து தானும் வெளியேறி விடலாம் என்று நினைத்து ஓடிப்போனாள்.

கதவு படார் என்று சாத்தப்பட்டது.

சாத்தப்பட்ட கதவின் முன்னால், ரத்தச் சிவப்பேறிய கண்களுடன் அனது, காவிப் பற்களைக் காட்டி அசிங்கமாகச் சிரித்துக் கொண்டு நின்றான் நற்குணசிங்கம்.

"ஓட நினைக்காதை! தப்பேலாது. இனி நீ என்னுடைய பெண்சாதி! நீயாக என்னை ஏற்றுக்கொள்ளாட்டால், நானாக உன்னை அடைய வேண்டி வரும்!"

"இந்த உடம்பிலை உயிர் இருக்கும் வரை அது நடக்காது! நான் செத்த பிறகுதான் நீ என்னை அடைய முடியும்!" சாந்தி ஆவேசமாகச் சவால் விட்டாள்.

"இந்தா, இப்பவே உன்னை அடைஞ்சு காட்டுறன்!" என்று அவள் மீது பாய்ந்தான் நற்குணசிங்கம்.

சாந்தி சட்டென்று விலகிக் கொண்டாள்.

நற்குணசிங்கத்திற்கு ஏற்கனவே பலவீனப் பட்டு விட்ட உடம்பு. அவனது உள்ளத்தில் ஆசை இருந்த அளவிற்கு உடம்பில் வலு இருக்கவில்லை. போதாக் குறைக்கு இப்பொழுது குடித்திருந்தான்.

சாந்தி விலகிக்கொண்ட கால், முழுப்பலத்தையும் கொண்டு பாய்ந்த நற்குணசிங்கம் இலக்குத் தவறி விழப்போனான். ஒருவாறு சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தான்.

சாந்தி பின்வாங்கி டைனிங் கதிரையில் தடக்குப்பட்டு விழுந்தாள். உடனடியாகவே மானனைக் கள்ளி எழுந்து, கதிரையையே தூக்கி தன்னைப் பிடிக்க வந்தவன்மீது எறிந்தாள்.

அவன் சட்டென விலக, கதிரை, ஜன்னல் கண்ணாடியில் பட, அது 'சிலிங்' என்ற சத்தத்துடன் உடைந்து, கண்ணாடித் துண்டுகள் பரவின, வீட்டிற்குள்ளும் வெளியிலும்.

இன்னும் ஒருமுறை பாய்ந்தான்.

சாந்தி வேறு ஒரு கதிரையைத் தூக்கி எறிய அவன் விலகிக்கொள்ள, கதிரை ஜன்னலில்பட்டு, இன்னும் ஒரு கண்ணாடிக் கதவு 'சிலிங்'.

அதற்குமுன் கதிரைக்கால் ஒன்று நற்குணசிங்கத்தின் நெற்றியைப் பதம் பார்த்து விட்டது. ரத்தம் கசிந்தது.

கையினால் நெற்றியைத் துடைத்து கையில் ரத்தக்கறையை கண்டவனுக்கு, அவளை அடித்து வீழ்த்தி விடுவோமா என்று ஆத்திரம் பொங்கி எழுந்தது.

வேண்டாம். அப்படிச் செய்து அந்த அழகிய கிளியை அவலட்ச ணப் படுத்தக்கூடாது.

அழகான கிளியை அழகான கிளியாகப் பிடித்தால்தான் இன்பம்!

நற்குணசிங்கத்திற்கு மதுவெறி. உள்ளத்தில் காமவெறி. இப் பொழுது சாந்தியை வசப்படுத்தவோ பிடிக்கவோ முடியாததால் கோப வெறி.

எல்லாம் சேர்ந்து உள்ளத்தில் பெரும் தீயாக எரியவே, மறுபடியும் அவளை நோக்கிப் பாய்ந்தான்.

சாந்தி கதிரையால் அவனை அடித்தாள். மண்டையில் பலமான அடி.

நிலைகுலைந்து போனான். தலையைப் பிடித்துக் கொண்டு நின் றான்.

ஒரு கதிரையைத் தூக்கிப் பலமுறை நிலத்தில் அறைந்தாள் சாந்தி. கதிரை துண்டுகள் அயிற்று.

"கிட்ட வந்தியோ, தொலை போடுவன்!" என்று சொல்லி ஒவ் வொரு கையிலும் ஒவ்வொரு துண்டைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு காளி போல நின்றாள் சாந்தி.

இவளுக்குள் இவ்வளவு வலுவா! இவ்வளவு ஆக்கிரோஷமா? தற் காப்பு உணர்ச்சியா? பழிவாங்கும் வெறியா?

சின்னப் பூனைக்குட்டிபோலச் சாதுவாக இருந்தாளே! அப்படியே அமுக்கிவிடலாம் என்றெல்லவா நினைத்தேன்!

நற்குணசிங்கத்தால் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மடக்கவும் முடியவில்லை. விட்டு விட்டுப் போகவும் ரோசம் விட வில்லை.

"நான் இரவைக்கு வந்து உன்னைக் கவனிக்கிறன்!" என்று சொல்லிவிட்டு நற்குணசிங்கம் வெளியேறினான்.

சாந்தியும் அவனுக்குப் பின்னால் ஓடப் பார்த்தாள். அதற் கிடையில் கதவு படார் என்று மூடிக் கொண்டது.

"என்னைக் காப்பாற்றுங்கோ!" என்னைக் காப்பாற்றுங்கோ!" என்று பல முறை உச்சஸ்தாயியில் கத்திப் பார்த்தாள்.

யாரும் எட்டிப் பார்க்கவில்லை.

கத்திக் கத்திக் களைச்சதுதான் மிச்சம். தொண்டைத் தண்ணி ரும் வற்றிவிட்டது. இன்னும் கத்தினால் கத்திக் கத்தியே சாக வேண்டியது தான்.

சோர்ந்து படுத்தாள் பக்கத்தில் தடிகளை வைத்துக் கொண்டு கை கால்கள் நடுங்கின.

தண்ணி சாப்பாடு எதுவும் இல்லை; நித்திரையும் வரவில்லை. மனம் என்னாகுதெல்லாம் எண்ணி எண்ணிக் கலங்கியது.

யாழ்ப்பாணத்தில் உள்ள அப்பா, அம்மா, தம்பி, தங்கச்சி, தோழிகள், தெரிந்தவர்கள் எல்லாரும் ஒரு முறை மனக்கண் முன்னால் வந்து போனார்கள். அவர்கள் எல்லாம் இப்பொழுது என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பார்கள்?

பெரிய உழைப்புக்காரனைக் கட்டி, லண்டன் மாநகரம் முழுவதும் அவனுடன் காரில் பவனி வந்து, மன்னீரில் குளித்து, பாயாசமும் அறுசுவையும் பருகி, மஞ்சணையில் பள்ளி கொண்டு...

நான் இப்பொழுது மாட்டுப்பட்டிருக்கின்ற பயங்கரச் சூழ்நிலையை அவர்களால் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடிந்திருக்குமா! இதற்காகவா நான் இங்கிலாந்திற்கு வந்தேன்? நினைத்துப் பார்க்க அழுகை வந்தது. ஒரு மூச்சு அழுதாள்.

வெளிநாடு என்றவுடன் எங்களது தமிழ்ப் பெண்கள் பாய்ந்து விழுந்து புறப்பட்டு வீழுகிறார்கள். இங்கிலாந்து என்றாலும் பறவாய் இல்லை. யாராவது தெரிந்தவர்கள் இருப்பார்கள். நோர்வே, சுவீடன் டென்மார்க், கனடா என்று உலகின் மறுகோடிக்குமல்லவா பறக்கிறார்கள்.

ஏதாவது நடந்தால் அந்தப் பெண்களை யார் காப்பாற்றுவார்கள்? அப்படி அனாதைகளாகப் போகின்ற அந்தப் பெண்களுக்காகவும் ஒரு மூச்சு அழுதாள்.

என்னை இந்த இக்கட்டில் இருந்து காப்பாற்றக் கூடியவர் விஜயன் ஒருவர் தான்.

எனக்கு நேர்ந்த கதி அவருக்குத் தெரியுமோ!

அறிந்தால் நிட்சயம் வருவார்!

அவராகவே அறிய வாய்ப்பில்லை!

எப்படி அறிவிப்பது?

சுகிர்தராணி அக்கா என்னை ஏன் இப்பிடிப் பழி வாங்குகிறா? நான் அவவுக்கு என்ன தீங்கு செய்தேன்!

தனது கள்ளக் காதலை நிறைவேற விடாது, குறுக்கே வந்து விட்டேன் என்ற கோபம் தானே!

இதோ வருகிறான் நற்குணசிங்கம். கண்கள் ரத்தச் சிவப்பு. குடிவெறியோ? காம வெறியோ?

இந்தக் குடிகாரனுக்கு ஏது இவ்வளவு உசாரி?

"இண்டைக்கு நீ என்னிட்டைத் தப்பமாட்டாயடி!" ஆங்காரமாகச் சத்தி அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டு சாந்தியை நோக்கி வருகிறான்.

சாந்தி ஓடுகிறாள்.

ஓடிப் பயனில்லை. எங்கேயென்று ஓடுவது?

பிடித்தே விடுவான்!

ஒரு கதிரையைத் தூக்கி அவனுக்கு நேரே தள்ளி விடுகிறாள்; அவன் அதை லாவகமாகப் பாய்ந்து கடந்து விடுகிறான்.

இன்னொரு கதிரையைத் தள்ளுகிறாள். அதையும் எட்டிப் பாய்ந்து கடக்கிறான்.

இதோ பிடித்துவிட்டான்!

திமிறித் தன்னை விடுவித்துக்கொண்ட சாந்தி, கண்ணாடி உடைந்த யன்னல் வழியாக வெளியே பாய்கிறாள்.

பல்கனி.

கண்ணாடித் துண்டுகள் குத்தி கைகளில் ரத்தம் வழிகிறது.

நற்குணசிங்கமும் பல்கனிக்குப் பாய்கிறான்.

தான் என்ன செய்கிறேன் என்ற நினைப்பே இல்லாமல் பல்கனிச் சுவரில் பாய்ந்து ஏறி நிற்கிறாள் சாந்தி. ஒரு பக்கத்தில் நற்குண சிங்கம்! மறு பக்கத்தில் அதல பாதாளம்!

கீழே கார்கள், பஸ்கள் எல்லாம் நெருப்புப் பெட்டி அளவில் ஓடுகின்றன.

ஆக்ரோஷமாகக் கத்துகிறாள், "என்னைத் தொட்டியோ, கீழை குதிப்பன்!"

"சும்மா வெருட்டாதையடி!"

அவள் சொன்னதை அவன் பொருட்படுத்தவில்லையோ? – அவள் குதிப்பாள் என்று அவன் எதிர் பார்க்கவில்லையோ? – அல்லது காம வெறி தலைக்கேறிவிட்டதோ? பாய்ந்து சாந்தியின் கால்களைப் பிடிக்கிறான்.

சாந்தி வெளியே குதிக்கிறாள்!

"வீல்!"

திடுக்கிட்டு விழிக்கிறாள்; எங்கும் ஒரே இருட்டு! ஒன்றும் தெரியவில்லை. உடம்பு மட்டும் நன்றாக வியர்த்திருக்கிறது.

ஓ! எல்லாமே கனவா? எத்தகைய பயங்கரக் கனவு!

கை கால்கள் முறியாமல் இருக்கின்றனவா என்று கைகளால் பிடித்துப் பார்த்துக் கொள்கிறாள்.

# 18

இளவுகூடத் தப்புவதற்கு வழி காட்டுமா?

இதோ காட்டிவிட்டதே! நற்குணசிங்கம் என்னைப் பலாத்காரம் செய்ய வந்தால், பல்கனிக்குப் பாய்ந்து கீழே குதித்துவிட வேண்டியதுதான்.

குதித்தால் நான் இல்லை. நானே இல்லை என்றால், பிறகு எனக்கு என்ன நட்டம்?

நான் இறந்தால் யாருக்கு நட்டம்?

அப்பா, அம்மா, தம்பி, தங்கச்சி ... ... ...

அவர்களுக்கு யார் செய்தி சொல்லப் போகிறார்கள்? அவர்களைப் பொறுத்தவரை இப்பொழுதே நான் இல்லை. இறந்தவள். நான் என்ன இனி ஊருக்குத் திரும்பப் போகிறேனா?

விஜயன்தான் பாவம். என்னைக் காதலிக்கிறார்; என்னை நம்பி இருக்கிறார். நான் இறந்து விட்டேன் என்று அறிந்தால் நிச்சயம் கவலைப்படுவார்.

நான் கூட அவரைக் கலியாணம் செய்ய, குடும்பம் நடத்துவது பற்றி எத்தனை கற்பனைகள் கனவுகள் கண்டேன்!

இந்தக் கயவனைக் கட்டி வாழ்நாள் முழுக்கக் கஷ்டப்படுவதிலும் சாவது மேல்!

லைட்டைப் போடப் பயமாக இருந்தது — நற்குணசிங்கம் வந்து விடுவானோ என்று.

விடிந்ததும் முதல் வேலையாக ஓடிப் போய் உடைந்த யன்னலைப் பார்த்தாள். என்ன ஏமாற்றம்! கம்பிகள் குறுக்கே நின்றன.

பல்கனிக்குப் போகவும் வசதியில்லை: ரோட்டு பக்கத்தில் தெரிந்தது.

ஓ, அடித்தளத்தில் அமைந்த வீடா?

எடுத்தவன், மாடியில் ஒரு அறையை எடுத்திருக்கப்படாது? வேலை சுலபமாக முடிந்திருக்குமே!

இங்கிலாந்தில் இது வெய்யில் காலம்; பனிப் புகார் இல்லை; வீதியில் மனிதர்கள் வாகனங்கள்;

"ஹெல்ப் மீ!" "சேவ் மீ!" என்று பல முறை உரக்கக் கத்தினான்; எவரும் திரும்பிப் பார்க்கவில்லை; தங்கள் பாட்டில் போய்க்கொண்டிருந்தார்கள்; சிலர் ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு பேசாமல் போனார்கள்.

வெள்ளைக்காரர்கள் மட்டுமில்லை; எல்லா இன மக்களும் தான்;

அதனால் தான் இவர்களால் இப்படி முன்னேற முடிகிறதோ — மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படமல் தங்கள் தங்கள் கருமங்களைக் கவனித்துக்கொண்டு போவதால் ... ?

யாழ்ப்பாணம் என்றால் இப்படியா இருக்கும்? சாந்தியின் ஊரான நீராவியடி யாழ்ப்பாண நகரத்தில் உள்ள ஒரு குடியிருப்புப் பகுதி. பழைய குடிகளுடன் வந்தேறு குடிகளும் சரி சமமாக உள்ள இடம்; இருந்தாலும் ஒரு தொகுதில் உள்ளவர்கள் எல்லோரையும் எல்லாருக்கும் தெரியும்; இனெகிதம் இல்லா விட்டாலும் பழக்கம்; முகப்பழக்கம்.

ஒரு வீட்டில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் மற்றவர்கள் எட்டிப் பார்ப்பார்கள்; போய் என்னவென்று விசாரிப்பார்கள்; சிலர் உதவியும் செய்வார்கள்.

யாழ்ப்பாணம் கோட்டையில் இருந்து அடிக்கும் ஷெல்கள் சில வேளைகளில் நீராவியடியிலும் வந்து விழும். இரவானால் எல்லோரும் பயத்தில் பதுங்கிக் கொண்டிருப்பார்கள். விடிந்ததும் முதல் வேலையாக வெளியே போய் ' எங்கே விழுந்தது? என்ன நடந்தது? ' என்று விசாரிப்பார்கள்; வேண்டிய உதவிகளும் செய்வார்கள்;

லண்டன் மாநகரத்திற்கும், யாழ்ப்பாண நகரத்திற்கும் இடையில் இதுவும் ஒரு வித்தியாசம் போலும்!

வேறு வழிதான் பார்க்க வேண்டும்.

உடைந்த கண்ணாடித் துண்டுகள் காலில் தட்டுப்பட்டன;

இவற்றை எடுத்து வைத்துக் கொண்டால் நற்குணசிங்கத்திற்கு எறியலாம்; கண், காது, மூக்கில் பட்டால் திரும்பி விடுவான்; கிட்ட வந்தால் பெரிய துண்டுகளால் அவனைக் குத்தலாம்; எனது கையும் கிழிந்து இரத்தம் வரும்தான்; பரவாய் இல்லை; அவனைக் குத்தி னால் போதும்.

ஜீவ மரணப் போராட்டம்!

அகப்பட்ட கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டு போய் வைத்துக் கொண்டு கதவுக்கு எதிர்ப்பக்கத்தில் இருந்தான்.

சிறிது நேரம் செல்ல நற்குணசிங்கம் வந்தான். தண்ணி போட்டிருந்தான். நெற்றியில் பிளாஸ்ரர்.

சாந்தி நன்றாகக் களைத்துச் சோர்ந்திருந்தாள். உடம்பு வலித்தது. கண்கள் எரிந்தன. அவற்றையும் விட மன உளைச்சல் தான் அதிகம்.

இருந்தாலும் அவனைக் கண்டதும் உசாரானாள்.

"என்னடி நேற்று என்னை ஏமாத்திட்டன் எண்டு சிரிக்கிறியா? இண்டைக்கு உன்னைக் கிழிக்கிறன் பார்!" என்று பயங்கரமாகச் சிரித்தான்.

சாந்தி துள்ளி எழுந்து நின்று "கிட்ட வந்தியோ நீ சாவது நிட்சயம்!" என்றாள்.

ஒரு அடி எடுத்து வைத்தான் நற்குணசிங்கம்.

கண்ணாடித் துண்டுகளை எடுத்து மள மளவென்று அவன் மீது விசி எறிந்தாள்.

பல அவனது உடம்பில் பட்டு ஒன்றும் செய்யாமல் கீழே விழுந்தன. ஒன்று மட்டும் அவனது கன்னத்தில் பட்டது. சிராய்ப்புக் காயம். ரத்தம் தெரிந்தது.

காயத்தைக் கையால் தொட்டு ரத்தத்தைப் பார்த்த நற்குணசிங்கத்திற்கு ஆவேசம் அதிகரித்தது. சாந்தி மீது பாயத் தயாரானான்.

கண்ணாடித் துண்டுகள் வேலை செய்யாது.

சாந்திக்கு மூளை சுறு சுறுப்பாக வேலை செய்தது. குனிந்து கதிரைத் தடியை எடுத்துக் கொண்டு நிமிர்ந்தவள், தடியினால் மின் சுவிச்சை அடித்துக் குத்தினாள்.

சுவிச் உடைந்து மின் வயர்கள் தெரிந்தன.

"எனக்குக் கிட்ட வந்தியோ வயரிலை தொடுவன். உடனை தான் கருகிச் செத்துப் போவன். உன்னிலை விளக்கம் வரும். என்னிலை தொட்டியோ, உன்னையும் கட்டிப் பிடிச்சுக் கொண்டு வயரிலை தொடுவன். நீயும் கருகிப் போவாய்!" என்றாள்.

அவசரப்பட்டு இவளைத் தொட்டுக் கருகிச் சாவதா? இன்னும் எவ்வளவு இருக்கிறது - குடிக்க!

நற்குணசிங்கத்திற்குச் சாந்தியை அடைய ஆசைதான். உயிர் வாழ அதைவிட ஆசை! குடிப்பதற்கு அதையும் விடப் பெரிய ஆசை!

ஒரு கணம் தயங்கி நின்றான்.

பஸ்ஸர் ஒலித்தது. விட்டு விட்டுப் பலமாக ஒலித்தது.

அவன் சாந்தி இருந்த அறைக் கதவைப் பூட்டிக் கொண்டு, முன் பக்கம் போனான்.

வீட்டுச் சொந்தக்காரன் ஸ்ரீவின்சன் நின்று கொண்டிருந்தார். அவரது முகபாவமே சரியில்லை.

வெள்ளைக்காரர்கள் - அதுவும் இங்கிலாந்து வெள்ளைக்காரர்கள் எங்களைப் போலல்ல. சின்னச் சத்தத்தையும் சகித்துக் கொள்ள மாட்டார்கள்; வாகனங்களில் ஏறி இருந்து, இரைந்து கொண்டு ஓடுவார்கள். காதைச் செவிடாக்கும் தொழிற்சாலைகளில் இருந்து வேலை செய்வார்கள்; ஆனால் வீட்டில் அமைதியும் நிம்மதியும் வேண்டும்; ஒரு சின்னச் சத்தத்தைக் கூடச் சகித்துக் கொள்ள மாட்டார்கள்; இரவு ஒன்பது மணிக்குப் பின்பு. பக்கத்து வீட்டுக்காரர் கக்கூஸ் ஃபிளஷை இழுத்து விடும் சத்தத்தைக் கூடப் பொறுத்துக் கொள்ளாமல், பொலிசுக்கு முறைப்பாடு செய்வார்கள்.

முதல் நாள் மாலை ஸ்ரீவின்சன் வீட்டில் இல்லை; அவர் இரவு வந்த பொழுது. பக்கத்து போஷனில் சரியான சத்தங்கள் வந்ததாக வீட்டில் சொன்னார்கள். வந்து பார்த்தார். வீடு பூட்டியிருந்தது. லைட்டும் எரியவில்லை; சத்தம் ஏதும் இல்லை. போய்விட்டார்கள் போலும் என்று நினைத்துக் கொண்டார். காலையில் சத்தங்கள் கேட்கவே வந்தார்;

நெற்றியில் காயத்துடன் ஆடு திருடிய கள்ளனைப் போலத் திரு திரு வென்று விழித்துக் கொண்டு நின்ற நற்குணசிங்கத்தைக் கண்ட பொழுதே, அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

"மிஸ்ரர்" "இதென்ன காயம்?" என்றார் ஆங்கிலத்தில்;

"விழுந்து போனன்."

"அதிகம் குடிச்சியா னான்?"

"கொஞ்சம் ஓவர் ...... ஹி ஹி..."

"வீட்டிலை என்ன நடக்குது?"

"ஒண்டும் இல்லை."

"நேற்றுச் சரியான சத்தம்;"

"அது சும்மா சத்தம்; ஹி! ஹி!"

இப்பொழுது வீட்டினுள் நுழைந்த ஸ்ரீவின்சன் "எல்லாமெல்லாம் உடைஞ்சு இருக்கு. உடைக்கவா வீடெடுத்தனி? உடனடியாக வீட்டை விடு!" கோபத்தில் வெள்ளைத் தோல் சிவப்பாயிற்று.

"சரி விடுறன்;"

"நாங்கள் வெள்ளைக்காறர், மற்ற இனத்தவருக்கு வீடு வாடகைக்குக் குடுக்கிறதில்லை; அப்பிடிக் குடுக்கிறதை அயலவர்களும் விரும்புறதில்லை. மற்றவைக்கு வீட்டைச் சரியாப் பாவிக்கத் தெரி

யாது என்டது எங்களுடைய அபிப்பிராயம். அந்த அபிப்பிராயம் சரி யெண்டு நீர் இப்ப நிரூபிச்சுட்டீர்!"

"சரி நான் உடனடியாக விடுறன் வீட்டை"

"வெளியே பேச்சுச் சத்தங்கள் கேட்கவே, யாரோ வந்து நிற்கிறார்கள் என்பது சாந்திக்குப் புரிந்தது. ஹெல்ப்! ஹெல்ப்!" என்று பலமுறை உரக்கக் கத்தினாள்.

"யார் சத்தம் போடுறது?"

"என்னுடைய வைஃப்"

"ஏன் சத்தம் போட்டுக் கத்துறா?"

"அவவுக்குச் கொஞ்சம் சுகமில்லை: மென்ரல் அப்செற்."

"உன்னை நம்பேலாது. கதவைத் திற"

கதவைத் திறந்துவிட்டு, அசடு வழிய நின்றான் நற்குணசிங்கம். சாந்திக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வராது தான். ஆனால் தனக்கு வேண்டியவற்றைத் தட்டுத் தடுமாறிக் கூற முடியும்.

"சேவ் மி சேர்! சேவ் மீ சேர். ஃபுறம் திஸ் புறூட்!" என்று பரிதாபமாகக் கூறி அழுது கொண்டு ஸ்ரீவின்சனின் முன்னால் வந்து நின்றாள்.

"யாரிவள்?" என்றார் ஸ்ரீவின்சன் மிரட்டலாக.

"என்னுடைய வைஃப்"

"பொய் சொல்லுறாய்!"

"உண்மைதான் சொல்லுறன்."

"நொட் வைஃப், நொட் வைஃப்" என்று கத்தினாள் சாந்தி.

"பெண்சாதி எண்டால் மரீச் சேட்டிபிக்கேற் எங்கை?"

"இது ஹிண்டு மரீஜ். நோ சேட்டிபிக்கேற்"

"எனக்கு எல்லாம் விளங்குது. இது கிட் நாப் கேஸ்! பிளாக் மெயில்!" (கடத்தல்; மிரட்டல்)

"நோ, நோ. மை வைஃப்"

"நீயாக உண்மையைச் சொல்லாட்டாப் பொலிசுக்கு போன் பண்ணப் போறன்:"

பொலிஸ் என்றவுடன் அதிர்ந்து போனான் நற்குணசிங்கம்; "வேண்டாம் சேர்! வேண்டாம் சேர்!" என்று கத்தினான்.

"நீ உண்மையைச் சொல்லாட்டாப் பொலிசுக்கு ஃபோன் பண்ணத்தான் போறன்!"

நந்தகுணசிங்கத்துக்குப் பிழையான ரெக்கோட். ஏற்கனவே அவனில் சந்தேகப்பட்டு பொலிஸ் அவனை விசாரித்திருக்கிறது. பொலிசில் அவனது பெயர் இருக்கிறதோ, தெரியாது. மறுபடியும் முறைப்பாடு போனால், விசாரணை தொடரும். பழைய மனைவி றோசனனாவை விசாரித்தால் கூடுதல் தகவல்கள் கிடைக்கும். நிட்சயம் தண்டனை. அதோடு இந்த கிட்நாப் கேஸ் வேறு. தண்டனைக்குத் தப்பினாலும் கரைச்சல். அதிலும் பார்க்க உண்மையைச் சொல்லி விடுவது நல்லது. எங்கேயாவது தப்பி ஓடுவது அதையும் விட நல்லது.

ஓடிப் பழக்கம் தானே! மெல்ல நழுவப் பார்த்தான்.

"ஓடாதே! எங்கே ஓடப் போறாய்? நீ இனி எங்கை ஓடினாலும் உன்னைத் தேடிப் பொலிஸ் வரும்." என்று சிரித்தார் ஸ்ரீவின்சன்.

பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டான் நந்தகுணசிங்கம். ரங்கநாதனது ஃபோன் நம்பரைக் குறித்து, அவரை அழைக்கும்படி கேட்டுக் கொண்டான்.

அவனை அறையினுள் விட்டுப் பூட்டி விட்டு, சாந்தியையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீவின்சன் வீட்டின் தனது பகுதிக்குச் சென்றார் ரங்கநாதனுக்கு ஃபோன் பண்ண.

இதற்கிடையில் விஜயன் முதல் நாள் மாலையே ரங்கநாதன் வீட்டிற்கு வந்திருந்தான். அங்கு ஒருவரும் இல்லாதது அவனுக்குப் புதுமையாக இருந்தது.

எங்கே போயிருப்பார்கள்?

நடந்ததை அறிய ஆவலாக இருந்தது. அடுத்தநாள் காலையும் வந்தான். சாந்தி வரவில்லை.

நான் வந்ததும் ஓடோடி வந்து, கண்களை அகல விழித்து நோக்கி, முகம் மலரப் புன்னகைக்கும் சாந்தி எங்கே?

அவனது நெஞ்சம் என்னவோ விபரீதம் என்றது. எதிர்பார்த்தது தானே!

சுகிர்தராணியிடம் கேட்டான். "எனக்குத் தெரியாது" என்றாள் அலட்சியமாக.

"எங்கையோ கொண்டு போய் ஒளிச்சிட்டியா?"

"அதெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை!"

விஜயனுக்குச் சந்தேகம் தட்டியது. ரங்கநாதனிடம் விடயத்தைச் சொன்னான். ரங்கநாதன் நேரத்துக்கு வீட்டுக்கு வருவதில்லை. வந்தாலும் வீட்டில் என்ன நடக்கிறது என்பதையும் கவனிப்பதில்லை. சாப்பிட்டு விட்டோ, சாப்பிடாமலோ படுத்து விடுவார். சாந்தி வீட்டில் இல்லை என்று சொன்னது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

" சாந்தி எங்கே? " என்றார் மனைவியிடம்.

" அவள் ஒரு சிநேகிதி வீட்டுக்குப் போயிருக்கிறாள். "

" என்ன புதுச் சிநேகிதம்? இவ்வளவு நாளும் போகேல்லையே? "

" நேற்றுத்தான் சந்திச்சம்: சாந்தியை நிக்கச் சொன்னாள்: இவள் நிக்கிறாள். "

" யார் அந்தச் சிநேகிதி. விலாசம் என்ன? "

" சொன்னாலும் உங்களுக்கு விளங்காது. "

" விளங்காட்டாலும் நான் அறிய வேணும்! "

" நீங்கள் அறிஞ்சு என்ன செய்யப் போறியள்? அவள் பத்திரமாக இருக்கிறாள். "

" இல்லை சுகிர்தராணி. நான் உதை நம்பமாட்டன். உதிலை என்னவோ மர்மம் இருக்குது. "

" ஒரு மர்மமும் இல்லை: "

" அப்ப ஏன் சொல்லப் பஞ்சிப் படுறாய்? அந்தப் பிள்ளையை ஏதோ செய்துட்டாய்! சொல்லு! "

" என்னுடைய தங்கச்சியை நான் எதுவும் செய்வன். அது பற்றி நீங்கள் கவலைப்படாதேங்கோ ! "

" தாய் தகப்பன் கூட, தாங்கள் பெத்த பிள்ளையைக் கண்டபடி நடத்தச் சட்டம் இடம் குடாது! நான் மனிதாபிமான உணர்விலை கேக்கிறன். சொல்லு. சாந்தியை என்ன செய் துட்டாய்? "

" உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை! " என்றாள் சுகிர்தராணி சற்றுக் காரமாக.

" ஒரு அனாதைப் பிள்ளைக்கு இப்பிடி அநியாயம் செய்ய நான் விடமாட்டன். சொல்லு! "

" நான் சொல்ல மாட்டன்! "

" சுகிர்தராணி! நீ ஏதோ பாரதூரமான பிழை செய்திருக்கிறாய். அதை நீயாகச் சொல்லாட்டா, நான் பொலிசிலை சொல்ல வேண்டி வரும். "

" நாங்கள் எதையும் செய்யலாம். " என்றாள் அலட்சியமாக.

என்ன செய்வது என்று ரங்கநாதன் யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான், ஃபோன் மணி அடிக்கத் துவங்கியது.

செய்தியைக் கேட்டதும் ரங்கநாதனும் - விஜயனும் காரில் விரைந்தனர்.

அவர்களைக் கண்டதும் சாந்திக்கு உள்ளம் குளிர்ந்தது.

நடந்தவற்றை விளக்கிக் கூறிய ஸ்ரீவின்சன். "நான் ஆசியாக் காறருக்கு வீடு குடுக்கிறதில்லை. பாத்தியளா உங்கடை ஆள் செய்திருக்கிற வேலையை, வந்த அண்டே சத்தம் போட்டு அமைதியைக் கெடுத்ததும் அல்லாமல், என்ரை வீட்டையும் உடைச்சிட்டார்." என்று உடைந்த ஜன்னல்களைக் காட்டினார்.

"கவலைப்படாதேங்கோ மிஸ்ரர் ஸ்ரீவின்சன். அந்த நட்டம் எல்லாத்தையும் நான் தாறன்." என்று கூறிய ரங்கநாதன் நற்குண சிங்கத்தை முறைத்துப் பார்த்தார்.

"மிஸ்ரர் நற்குணசிங்கமல்ல, நான் தான் வீட்டை உடைச்சது. அதாலை தான் நான் அவரிட்டை இருந்து தப்பினன்." என்றாள் சாந்தி. ரங்கநாதனும் விஜயனும் வியந்தனர்.

"நீ ஒரு மனிசனா?" என்று கேட்டு, ரங்கநாதன் நற்குணசிங்கத்தை திட்டினார்.

"நான் அப்பிடி ஒண்டும் செய்யேல்லை அண்ணை. சாந்தி சரியான வீரப் பெண்மணி! என்னை ஒண்டுக்கும் விடேல்லை. யன்னலை மட்டுமில்லை என்ரை மண்டையையும் உடைச்சுட்டாள். பாத்தியளா!" என்றான் பரிதாபமாக.

"உடைக்கிறதல்ல, உன்ரை மண்டையைப் பிளந்திருக்க வேணும்!"

"என்னை எது வேணுமானாலும் பேசுங்கோ, திட்டுங்கோ. ஆனால் பொலிசிலை பிடிச்சுக் குடுத்துடாதேங்கோ. ஏற்கனவே அவங்கடை சந்தேகம் என்னிலை இருக்கு. என்னை விட்டுட்டீயளெண்டா, நான் ஒரு கண் காணாத ஊருக்குப் போயிடுவன்!" என்று கெஞ்சினான் நற்குணசிங்கம்.

"சரி எங்கையாவது போய்த்துலை! இனிமேல்பட்டு என்ரை கண்ணிலை முழிக்காதை!" என்ற ரங்கநாதன், விஜயனையும் - சாந்தியையும் சோடியாகக் காரின் பின் சீட்டில் ஏற்றிக் கொண்டு போனார்.

என்ன செய்வதென்று தெரியாமல் வீட்டில் முழிசிக் கொண்டிருந்தாள் சுகிர்தராணி.

"நீ செய்த துரோகமான வேலைக்கு உன்னை நான் விவாகரத்துச் செய்தாக் கூடப் பிழையில்லை!" என்றார் ரங்கநாதன்.

"நான் செய்ய நினைச்சது பெரிய பாரதூரமான பிழைதான். தயவு செய்து என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ ரங்கா!" என்றாள் சுகிர்தராணி தழுதழுத்த குரலில்.

"உன்னை மன்னிக்க முடியாது. உனக்குச் சரியான ஆசை! உடுப்பிலை சாப்பாட்டிலை மட்டும் தான் உனக்கு ஆசை எண்டு நினைச்சன். அதுகளை உன்ரை ஆசை தீர வாங்கித்தந்தன். அப்ப

வும் உன்ரை ஆசை தீரேல்லை; உனக்கு உடல் பசி! அதையும் தீர்க்க ஆசைப்பட்டாய்!"

"என்ன சொல்லுறியள்?" என்றாள் சுகிர்தராணி பதறிப் போய்.

"சுகிர்தராணி! நீ கட்டின கணவனுக்கே துரோகம் செய்ய நினைச்சாய். உன்னுடைய உடற்பசியைத் தீர்த்துக் கொள்ள ஆசைப் பட்டாய். உன்னை நான் விவாகரத்துச் செய்து உனக்குச் சுதந்திரம் தாறன். நீ போய் உன்னுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்!"

அப்பொழுதுதான் ரங்கநாதன் சொல்வதன் அர்த்தம் மற்ற மூவருக்கும் புரிந்தது. "எல்லாம் தெரியுமா? என்னிலை சந்தேகப் பட்டுக் கொண்டா இருந்தியள்?" என்று கேட்டாள் சுகிர்தராணி ஏங்கிப்போய்.

"இப்பவல்ல, எனக்கு நெடுகக் கூடியே தெரியும்!"

"என்னிலை ஒரு பிழையும் இல்லை. தயவு செய்து, என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ!" என்றான் விஜயன்!

"தம்பி உம்மிலை ஒரு பிழையும் இல்லை."

தான் செய்ய நினைத்ததெல்லாம், நான் ஆடிய கூத்தெல்லாம் ரங்கநாதனுக்குத் தெரிந்திருக்கிறதா? எல்லாவற்றையும் நோட்டம் விட்டுக் கொண்டு, ஒன்றும் தெரியாதவர் போல இருந்தாரா? சுகிர்த ராணிக்குத் தலை சுற்றியது. "என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ. ரங்கா!" என்று ரங்கநாதனின் காலில் விழுந்து அழுதாள்.

"உன்னை நான் மன்னிக்கிறதல்ல. முதல்லை நீ சாந்தீட்டை மன்னிப்புக் கேள்!"

சுகிர்தராணி எழுந்து நின்று சாந்தியின் கையைப் பிடித்துக் கொண்டு "எனக்கு ஒரு துன்பமும் செய்யாத உன்னுடைய வாழ்க் கையைக் கெடுக்க நினைச்சன். தயவு செய்து என்னை மன்னிச்சுக் கொள் சாந்தி!" என்றாள்

"அக்கா! யாழ்ப்பாணத்திலை இருந்து என்னை வரவழைச்சு, எனக்கு ஒரு நல்ல கணவனும் தேடித் தந்திருக்கிறியள்! நானல்லவோ உங்களுக்கு நன்றி சொல்லவேணும்!" என்று நன்றியறிதலுடன் சொன்னாள் சாந்தி.

"உங்களுடைய மனைவி இலங்கேலை இருந்து ஒரு நல்ல பெண் ணை வரவழைச்சு, எனக்கு மனைவியாகத் தந்திருக்கிறா. எங்களு டைய வாழ்க்கை தொடங்கூற நேரத்திலை அவவின்ரை குடும்பம் பிரியிறது நல்லதில்லை. தயவு செய்து அவவை மன்னியுங்கோ அண்ணை! அவ ஆசைப்பட்டவதான் ஆனா ஒண்டும் நடக்கேலைத் தானே? இனிச் சின்னச் சின்னப் பிழையளுக்கெல்லாம் விவாகரத்து

எடுக்கப் போனா, உலகத்திலை குடும்பங்களே இல்லாமல் போயிடும்!'' என்றான் விஜயன்.

'' சுகிர்தராணி, பயப்பிடாதை. இந்த நாட்டிலை ஒரு பெண் தனித்து சுதந்திரமாக வாழலாம்.''

'' நான் அந்த மாதிரி வாழ ஆசைப்படேல்லை.''

'' சும்மா உலக ஒப்பிணைக்காகச் சொல்லாதை சுகிர்தராணி. நீ உண்மையாகவே என்னோடை சேர்ந்து வாழ விரும்பூறியா?''

'' ரங்கா! நான் இப்பதான் உங்களுடைய பெருமையை உணருறன். நான் உண்மையாகவே உங்களோடை இருந்து வாழத்தான் விரும்பூறன்!'' என்ற சுகிர்தராணியின் குரல் தழுதழுத்தது. கண்கள் கலங்கியிருந்தன.

'' சரி நாங்கள் தொடர்ந்து தம்பதியாகவே இருப்பம்.''

'' நாங்களும் தம்பதிகளாகப்போறம்'' என்று சொன்ன விஜயன் சாந்தியின் முகத்தைப் பார்த்து மெல்லச் சிரிக்க, அவனது விழிகளைச் சந்தித்த சாந்தியின் விழிகளும் சிரித்தன.

முடிந்தது.



# அராலியூர் ந. சுந்தரம்பிள்ளைக்கு கௌரவம்

திருமலையில் நடக்க இருக்கும் சாகித்திய விழாவில் கௌரவிக்கப்படும் எழுத்தாளர்களில் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையும் ஒருவர். இவர் நாற்பது வருடகாலம் நாடகத்துறையில் ,உழைத்து வருபவர்.

இலங்கையில், 'நவீன நாடகத்தின் தந்தை' என்று பாராட்டப்படும் பேராசிரியர் சு. கணபதிப்பிள்ளையிடம் தமிழும் நாடகமும் பயின்றவர். பேராதனைப் பல்கலைக்கழக நாடகங்களில் நடித்த சுந்தரம்பிள்ளை நல்ல பேச்சாளருமாவர். தமது குருவை பின்பற்றி இவரும் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குத் தமிழில், 200 க்கும் அதிகமான நாடகங்களை எழுதியுள்ளார் இப்பொழுதும் எழுதுகிறார்.

இலங்கை வானொலி மட்டும் இதுவரை இவரது 175 நாடகங்களை ஒலிபரப்பியுள்ளது. சுந்தரம்பிள்ளை தனது வானொலி நாடகங்கள் சிலவற்றைத் தொகுத்து, 'கெட்டிக்காரர்கள்', 'முதலாம் பிள்ளை' என்ற இரு நாடக நூல்களையும் வெளியிட்டுள்ளார். அவை முறையே, இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுதிகளுமாகும்.

இவர் எழுதி அரங்கேற்றிய மேடை நாடகங்கள் 21. அவற்றில் 'பொலிடோலே கதி' 'பணமோ பணம்' என்ற இரண்டும் நூலுருவில் வெளிவந்துள்ளன.

நோர்வே நாட்டுத் 'தமிழ்நாதம்' வானொலி நிலையம் அகில உலக ரீதியில் நடாத்திய வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற இவர், உலகின் பல்வேறு வானொலி நிலையங்களுக்கும் நாடகங்கள் எழுதியுள்ளார். இவரது ஏராளம் கட்டுரைகளும் சிறுகதைகளும் பத்திரிகைகளில் பிரசுரமாகி இருக்கின்றன

தனது எழுத்துப் பணிக்குக் குந்தகம் விளைவிக்கும் என்று கருதி, அதிபராகும் வாய்ப்பினையும் தட்டிக் கழித்ததனாலேயே, தன்னால் இவ்வளவு நாடகங்களை எழுத முடிந்தது என்று கூறும் சுந்தரம்பிள்ளை இப்பொழுது ஓய்வுபெற்று, முழுநேர எழுத்தாளராகத் திகழ்கின்றார். பல நூல்களையும் வெளியிடத் திட்டமிட்டுள்ளார்.

ஆசிரியரது 'முதலாம்பிள்ளை' நாடக நூலுக்கு சாகித்திய மண்டல பரிசு வழங்கப்பட்டபொழுது 1-12-1991 'தினகரன்' வாரமஞ்சரியில் படத்துடன் வெளியான பாராட்டுக் கட்டுரை.

'தினகரன்' பத்திரிகை நிறுவனத்திற்கும் அதன் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் அவர்களுக்கும் நூலாசிரியரின் நன்றிகள்.

# ஆசிரியர் எழுதி அரங்கேற்றிய நாடகங்கள்

| | | |
|---|---|---|
| (1) | இழந்த காதல் | 1954 |
| (2) | பட்டிக் காடு | 1961 |
| (3) | மணிகொத்து | 1962 |
| (4) | வெட்கமில்லை — ( பணமோ பணம் ) | 1963 |
| (5) | ஆசை அலைகள் | 1964 |
| (6) | பெரிய மனிதன் | 1965 |
| (7) | படித்த முட்டாள் | 1966 |
| (8) | காதலிக்காதே ! | 1967 |
| (9) | இரு துருவங்கள் | 1968 |
| (10) | ஒரே இரவில் | 1969 |
| (11) | பொலிடோலே கதி | 1969 |
| (12) | மை டியர் மோகினி | 1970 |
| (13) | காதல் மன்னன் | 1971 |
| (14) | செல்லப்பிள்ளை | 1971 |
| (15) | மகாராஜா | 1972 |
| (16) | முக மூடிகள் | 1972 |
| (17) | நாடகப் பைத்தியம் | 1972 |
| (18) | கலியாண வைபோகமே | 1973 |
| (19) | அனுபவம் புதுமை | 1978 |
| (20) | ஒரு நாடகம் அரங்கேறுகிறது | 1979 |
| (21) | வாழ்வா? சேவையா ? | 1991 |
| (22) | போர் முரசம் கேட்கிறது | 1992 |
| (23) | அவர்கள் வெளிநாடு போகிறார்கள் | 1992 |
| (24) | முதலாம் பிள்ளை | 1993 |
| (25) | கொழும்பில் கலியாணம் | 1993 |

ஆசிரியர் அச்சிட்டு வெளியிட்ட 19 வானொலி நாடகங்களும் அவர் அச்சிடாத வானொலி நாடகங்கள் பலவும் மேடையில் நடிக்கப்பட்டுவிட்டன.

# நூலாசிரியர்



- ★ 200 க்கும் அதிகமான வானொலி நாடகங்களை எழுதியவர்.
- ★ இவரது நாடகங்களை பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன.
- ★ இவர் எழுதி அரங்கேற்றிய நாடகங்கள் 25.
- ★ இரண்டு வானொலி நாடக நூல்கள் உட்பட, நான்கு நாடக நூல்களை எழுதியுள்ளார்.
- ★ நோர்வே நாட்டு 'தமிழ் நாதம்' வானொலி நிலையம் அகில உலக ரீதியில் நடாத்திய வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர்.
- ★ இவரது 'முதலாம்பிள்ளை' நாடக நூல், இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.
- ★ இவரது 47 சிறு கதைகள் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன.